முன்னுரை

எனது அருமை நண்பர் திரு. ராஜாமணி B. SC. B. T. அவர்கள் என்னைப் பற்றி உயர்திரு. ச. மண்டக்கு ராஜா நாடர் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அதைக்கேட்ட அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். அது முதல் எனக்கும் அவர்களுக்கும் கல்வித் தொடர்பு ஏற்பட்டது. அடிக்கடி அவர்களிடம் செல்லும் பொழுது ஆதிபூர்வ மண்டங்குடி நாட்டு மன்னன் வரலாற்றை அறிந்தேன். அத்தொடர்பால் இத்தகைய ஒரு சிறந்த பழைய ஏட்டுச்சுவடியை நான் பார்க்க முடிந்தது. அவ்வேட்டைக் கண்ணுற்ற யான், நாடர் குலப் பெருமக்களின் பழம் பெருமையமைந்த பாடல்களின் சொற்சுவையும், பொருட்சுவையும், எதுகை மோனை நயங்களும், செந்தமிழின் தீஞ்சுவைக்கருத்துக்களும் என்னைக் கவர்ந்து இதில் ஈடுபடுத்தியது. ஆகவே இதை அச்சிட்டு நூலாக வெளிக் கொணர்ந்தால் நல்லதென்று நவின்றேன், ஐயா அவர்களும் இதற்கு இணங்கினார்கள். ஏட்டுச்சுவடியைச் சரிப்படுத்தி, முறையாகத் தொகுத்து, பிழைதிருத்தியும் இலக்கண அமைதிகண்டும். சுவையாகப் புதிப்பித்து இயற்றியுள்ளேன். பல வரலாற்று நூல்களின் அரிய கருத்துக்களை மேற்கோளாக இணைத்துள்ளேன். இதை இயற்றுங்கால் எனக்குத் துணை புரிந்த பெரியார்கள் உயர்திரு. பிரமமுத்து நாடார் அவர்கள், சு. தருமலிங்க நாடார் அவர்கள், சி. பச்சைக் கனி நாடர் அவர்கள் இர. சந்திரசேகர நாடர் அவர்கள் ஆகிய இவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக'

சோழநாட்டில் கொடிகட்டி நாடாண்ட குருநில மன்னவனை மதயானை கொண்டு இடறிய மண்டை கூறிய மண்டங்குடி நாட்டு மன்னனின் விர மிக்க வரலாறு வெளிவருவது பற்றி நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மண்டங்குடி மன்னன் வரலாற்றை அவர்தம் பரம்பரை மரபில் வந்த உயர்திரு ச. மண்டக்கு ராஜா நாடர் தற்போது புத்தகமாக வெளியிடுகிறார்கள். அவர் தம் முழு முயற்சி வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வேண்டிநிற்கின்றேன்.

வணக்கம்.

அன்பன்
வித்துவான் ச. செந்தமிழ்ச் செல்வன்
தமிழாசிரியர்,
கா. ஆ. உயர்நிலைப்பள்ளி
ஆறுமுகனேரி.

பதிப்புரை

"எங்கள் மூதாதையரின் வரலாற்று ஏடொன்று, என்னிடம் பல காலமாகப் பாதுகாப்பிலிருந்து வந்தது. எந்த நேரத்திலும் அதைத் தொகுத்து ஒரு சிறந்த நூலாக்கித்தர வேண்டுமென்ற எண்ணம் என்பால் எழுந்ததில்லை. ஆனால், அதைப் படித்தறிந்த எனது அருமை நண்பர் வித்துவான் ச. செந்தமிழ்ச் செல்வன் அவர்கள் என்னைக் கண்டு மகிழ்ந்து உரையாடுவார்கள். அவர்கள் உரையாடும்பொழுதெல்லாம் இத்தகைய சிறந்த வரலாற்று நூலை அச்சிட்டு வெளியிட்டால் நல்லதாக இருக்குமென்று கூறுவார்கள். இந் நூல் வெளி வந்தால் நாடர் குலப் பழம் பெருமையை அறிவதற்கு உதவியாக இருக்குமென்று நினைத்தார்கள். அவர்கள் இடையறாது என்னைப் பல முறை தூண்டியதோடு, தாம் உதவுவதாக வாக்களித்து என்னை இணங்கச் செய்து, இந் நூல் உருவாகக் கருவியானார்கள்.

இங்ஙனம்,
தி. சண்முகசுந்தர நாடர் அவர்களின் குமாரர்,
மண்டக்கு ராஜ நாடர்,
மூலைப்பள்ளி.

சிவமயம்

ஆதி பூர்வ மண்டங்குடி நாட்டு மன்னன்

மண்டக்கென்றதிரி லோசனன்

வரலாறு

ஆனைமுகன் காப்பு

மண்டக் கென்ற மன்னன் மாவீரன் வரலாற்றை
மண்டலத்தில் யானும் மகிழ்ந்துரைக்க அம்மானை
சங்கரன் சேய் அரிமருகன் ஐந்துகரன் எந்நாளும்
அன்பர்க்கருள் புரியும் ஆனைமுகன் காப்பு.

நாமகள் துதி - [விருத்தம்.]

நாவினில் பதியே யுந்தன் நறுமலரடி சிரமேற் கொண்டேன்
பாவிலின்னிசையும் நல்கியிப் பாரில் அம்மானைப் பாட்டுரைக்க
தூவீணை கையிலேந்தும் பதியே துதி செய்யுமென்றனை யாண்டு
புவிதனையரசாண்ட பூபாலன் கதைக்கருள் புரிவாயே.

அம்மானைச் சீர்

நாவிற் சரவஸ்தியே - நான் முகனுர் தேவியரே
பூவிற் பிறந்தவளே - புத்துணர்ச்சி காட்டுமம்மா
பாவிற்குகந்தவளே - பாட்டிசைக்கு வல்லவளே
வெள்ளைக்கலையாளே - வேந்தன் கதை பாடுதற்கு
கள்ளமின்றி என்னுவில் - கருத்துகந்து குடியிருப்பாய்
சோழ நாடாண்டு - துரைமன்னராயிருந்து
என்ன விதிவசமோ - இவ்வரசைத் தானிழந்து
நாடுவிட்டுத் தெற்கே - நாஞ்சில் நாடு வந்தமர்ந்த
மண்டக்கு மன்னன் - மாவீரன் கதை சொல்ல
சிறியேனது நாவில் - சீர் பெருக வாருமம்மா

சிவபெருமான் துதி

முக்கண் பெருமானே முத்திக்கருள் தருவாய்
சிந்தைதான் வேறுபட்டு புத்தி சிதறுண்டு வாடுகின்றேன்
அம்மானை தனில் மண்டக்கு அரசன் கதை பாட
சிந்தை தெளிவாகின் சீர்பாதம் தாருமையா

பார்வதி துதி - (விருத்தம்)

சத்தியாய் வந்து நீயும் சராசரப் பொருளுமானாய்
முத்தியை வேண்டுவோர்க்கு முப்பொருளாகி நின்றாய்
பத்தியால் யானுமுந்தன் பதமலர் பணிந்தேனம்மா
சித்தியும் அருளுந்தந்து சிறந்த அம்மானை பாடும் அம்மா

அம்மானைச்சீர்

தாயே மனோன்மணியே - தமிழ்க்குதவ வாரும் அம்மா
மாதாவே தாயே - மகேஸ்வரன் தன் தேவியரே
கோபாலன் தங்கையரே - கும்பிட்டடிதொழுதேன்
பார்வதித் தாயாரே - பகுத்தறி வைத்தந்தென்க்கு
முன்னின்று கவிபாட - மோனையது மாறாமல்
நன்னயமாய்க் கதை வகுத்து - நாவில் குடியிருப்பாய்
குடியிருந்து காத்தருள - குவலயத்தார்தான் மகிழ
இன்சொல்லெனக்கருளி - இருந்துகவி பாடுமம்மா
ஈஸ்வரித்தாயாரேயுன் - இணையடி தொழுதேனம்மா

திருமால் துதி

அலையாழி துயில் ஆயனை
கலையாதி தொழும் கண்ணனை
சிலை வாளி தொடும் சீராமனை
மலை வாழும் மாதவனை வணங்குவாம்

அம்மானைச் சீர்

அண்டம் படைத்ததொரு - ஆதி நாராயணனே
குண்டம் தனலிருந்து - குறிப்புணர்ந்து ஆள்பவனே
பிண்டந்தனில் தோன்றியிப் - பூவுலகளந்தோனே
சிறியேனுனைப் பணிந்து - சீர் பாதம் சிரங்கொண்டேன்
நாத்திற்குடியிருந்து - கதை பாட வாருமையா

திருமகள் துதி

பரவையிற் பிறந்தவளே - பத்தினித்தாயாரே
நித்தம் எனதுள்ளத்தில் - நிறைந்திருக்கும் மாதாவே
நாடியுனைத் தொழுதேன் - நாயகியே வந்திருந்து
அம்மானைப் பாட்டுரைக்க - அகமகிழ்ந்தருளம்மா
இம்மாநிலத்திலுள்ளோர் - இகழ்ச்சியொன்றும் சொல்லாமல்
மகிழ்ச்சி பெறுவதற்கு - மாதாவே அருள்புரிவாய்.

முருகன் துதி . (விருத்தம்)

கந்தா முருகா காருண்யர் கவிக்கரசான-என் கண்ணே -
சந்தக் குறமகள் கணவா சந்தனுசலா சரணடைந்தேன்
நந்தக் கோபன் தன் மருகா நாடண்டோன் கதை பாடுதற்கு
பந்தமாம்பிணி வராது பாலனைக் காத்தருள் வாயய்யா

அம்மானைச்சீர்

வள்ளிக் கணவா தமிழ் - வகுத்துரைக்க வேணுமய்யா
புள்ளி மயில் வாகனனே - புதுமை சொல்ல வாருமையா
கள்ளவினையனுக்கும் - கண்ணன் தன் மருகோனே
வள்ளியுட காதலனே - வந்தடிமை கொள்ளுமையா
சிற்றறிவைக் கொண்டுநின் - சீர்பாதம் தொழுதேனையா
மண்ணுண்ட மன்னர்களில் - மண்டக்கரசன் கதையை
அம்மானையில் வகுத்துரைக்க - ஆறுமுகனே துணை செய்வாய்

பத்திரகாளியம்மன் துதி

அலையாழி துயில் வண்ணன் - அருள் தங்காய் நீயே
அரனிடப் பாகம் வந்தாய் அருள் தரும் துர்க்காய் நீயே
காமாட்சி அம்மையே - காளியாக வந்தவளே
பூரணம் போல் வந்துதவும் - புட்டாபுரத்தமர்ந்தவளே
மண்டக்கரசன் கதை பாட - மாதாவே வாருமம்மா

எண்மர் துதி

நாட்டுச் சிறப்பதனை நல்லருள் கொண்டியான் பாடுதற்கு
ஆட்டுக்குடையன் அரன் மைந்தன் ஆனைமுகன்
காட்டு மயில் வாகனன் கண்ணன் கமலமேலான்
பாட்டிலின்னிசையான் பங்கயத்தோன் பார்வதியாள் காப்பு

நாட்டு வளம் - அம்மானைச்சீர்

நாடான நாடதிலே — நல்ல நெல்லை நாடதிலே
பாரிலுள்ளோர் போற்றுகின்ற - பண்பான செந்தில் நகர்
செந்தில்நகர் வளமை - செப்புகின்றேனம்மானை
தேன் பெருகும்சோலை - செந்தில் வளநாடு
கனியுதிரும் சோலை - கந்தன் வளநாடு
வாழை வடக்கினும் - வான்கமுகு தெற்கினும்
கரும்பும் இளநீரும் - கண் திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணும் - கதிருழக்கு நெற்காணும்
அரிதாள் அறுத்துவர - அங்கு மறுதாள் பயிராகும்
அரிதாளின் கீழாக - ஐங்கலம் தேன்கூடு கட்டும்
மாடுகட்டிப் போரடித்தால் - மாளாது செந்நெல்லென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் - அழகான திருநாடு
சங்குமுழங்கொலியும் - சமுத்திரத்தின் பேரொலியும்
முத்து விளையும் - முருகன் பதியருகே
அப்பதிக்கடுத்த - அழகு திருநகரதுதான்
மண்டக்கென்ற மன்னன் - மரபினர் வாழுமிடம்
முக்கனி வளம் சிறக்கும் - மூலைப்பள்ளியாகும்
அந்நகரின் பெருமை - அறைகின்றேனம்மானை
தரலா வளமும் - தளரா - வளர்தெங்கு சோலைகளும்
மாமரச் சோலைகளும் - மற்றும் பல வளங்களுமே
நிறைந்து செழித்திருக்கும் - நீல வருணன் தன்னருளால்
பொருநைநீர் பாய்ந்து - புகழுடனே வாழ்ந்திருப்பார்

வரலாறு

பாரிலுன் பிள்ளை கதை பாட - பத்தினித்தாயே செயல்புரிவாய்
தவமே மிகப் புரிந்து - தாருகாசுரனைக்கொன்ற தாயே
தடையொன்றும் வராமல் - தற்காக்க வேணுமம்மா
ஆண்டுலகறியச் செங்கோல் - செலுத்தியரசாண்ட
ஆதிபூர்வ மண்டெக்கென்ற - அரசர் கதை பாட
வரந்தந்தருள்வாய் எனை - வளர்த்தடிமை கொண்டவளே
வரங்கொண்டோர்க்கு - வாசு தேவி நின்னருளால்
புலமை வல்ல கவிபாட - புத்துணர்ச்சி தாருமம்மா
கட்டுமுனை கிட்ட வருணம் - கனத்த அழகுடைய
சந்திரவட்டக்குடையான் - சகல கலை வல்லவன்காண்

செந்தமிழ் உரையும் - செந்தில் வரை வாழினையான்
சீர்பாதம் எந்தனுட - சிரசிற்குடிகொண்டேன்
இருத்தும் பலகலையும் - காவியமும் சீர்தளையும்
காவியத்தருஞ் சொல்லும் - கருத்தும் அலங்காரங்களும்
விருந்தி உலகளந்த - வல்ல பெருமாள் பாதமதை
மயக்கமின்றி எந்தனுட - மன்தில் குடி கொண்டேன்.

வரலாறு தொடக்கம்

தேவனும் மாலை மார்பன் - செங்கையுறை வாளுடையான்
சிந்தை மகிழ்ந்தன்புடனே - சிறந்த மண்டங்குடி நாட்டு
மண்டக்குராஜாவின் கதையை - மண்டலத்தில் பாடுகின்றேன்
வண்டமிழோரே கேட்பீர்! - வரும் ஈஸ்வரசங்கற்பப்படி
இரண்டாயிரமாண்டுக்குள் - இருளற்றுத் தெளிவு பெற
இடும்பர்குடி அழிந்திட - இருந்தார்களமுதுண்டு
கன்னிவாடி மலைக்காவுக்குள் - களங்கமின்றிருந்தார்கள்
எண்ணிக்கண்ட பேர்கள் - ஏனுதி மக்கள் ஏழு பேரும்
ஈஸ்வரனைத் தஞ்சமென்று - இருந்தாரே அவ்வனத்தில்
ஆலமரமும் - அகில் தேக்கு மாமரமும் —
புன்னைமரமும் - புஷ்பமலர்க்காவுகளும்
தென்னை மரமும் - செஞ்சந்தனமரமும்
மாவும் பலாமரமும் — வாய்த்த பலமரங்களும்
தாவும் மரத்தின் - தன்மை சொல்லக்கூடாது
சோலையிலே வீற்றிருக்கும் - சீர் பறவையின் பெருமை
தூல மின்னதென்று - சொல்லத்துலையாது
பார்வதியும் ஈஸ்வரனும் - பாவித்திருப்பதுபோல்
தேர்பதியும் மேடைகளும் - சிங்காசனம் போற்காணும்
அலையில் துயில்வோர் - அங்கிருந்த பாவனை போல்
நிலையில் முனிவர் - நிற்பதெண்ணக்கூடாது
கயிலையிதுவென்று - கண்ணுனமாமுனிவர்
ஒயிலாகக்கூடி - உவந்திருப்பார் அவ்வனத்தில்
அப்படியே நல்ல - அயோக வமுத வனம்
இப்படியே நல்ல - இயல்பாய் இருப்பதுதான்
புட்டாபுரங் கிழக்கு - பூங்காவும் நேர் மேற்கு
வட்டமுள்ள ஸ்ரீரங்கம் - வடக்கு வனந் தெற்காக
தெற்கே திரிகோணஞ் - செங்காவும் நேர் வடக்கு
மிக்க வனம் மேற்கு - மிகுந்த வனம் நேர் கிழக்கு

இவ்வெல்கை சூழ்ந்த - அயோக வமுத வனத்தில்
ஈஸ்வரனைத் தஞ்சமென்று - இருந்தார்கள் கன்னிமார்கள்
அயோக வனமதிலே - அவர்களும் தவமிருக்க
இப்படியாக இவர்கள் - இருந்து வரும் நாளையிலே

தாருகன் வரலாறு

சடைச்சிக்குத் திருமகனும் - சாஸ்திரத்தில் வல்லவனும்
தாருகனென்ற சூரன் - தாருகா வனமதிலே
வில்வ மரத்தடியில் - வீற்றிருந்து தவம் செய்தான்
பக்தர்களை ரச்சிக்கும் - பரமனை நெஞ்சில் வைத்து
காற்றும் மழையும் - கடும் வெயிலும் பாராமல்
இரவும் பகலுமவன் - ஈசன் திருவடி தொழுது
கண்மூடி தவம் செய்தான் - கடத்தினது வாஞ்சை நீக்கி
ஈசனைக் கண்டு - ஏற்ற வரம் வாங்காமல்
இவ் விடத்தை விட்டு - இனி எழுவதில்லை ஒரு போதும்
என்றே அனவரதம் பூண்டு - அரிய தவம் செய்யலுற்றான்
சுவாசத்தைத் தானடக்கி - சுழி முனையிலே செலுத்தி
மூலக்கனல் எழுப்பி - முட்டி நிலா மண்டபத்தில்
ஏல எழுப்பி - இசைந்துமே சந்திக்க வைக்க
பக்தி விளக்கேற்றி - பரம் சுடரை உள்ளேற்றி
நெற்றி விளக்கீசனை - நிறைந்த மனதுருவாய்
அன்பு மலர் கொண்டு - அனு தினமுந்தான் துதித்து
ஆண்டு பன்னிரெண்டாக - அரிய தவம் செய்யலுற்றான்
தாருகா சூரன் செய்யும் - தவசை அறிந்தீஸ்வரனும்
தன்னை நோக்கிச் செய்யும் - தவசுமேல் திருவுளங்கொண்டு
கயிலைமலைநாதன் - கயிலையங் கிரியை விட்டு
ஈஸ்வரனும் பார்வதியும் — இடபமேறித்தான் வாரார்
இப்படியே இவர்கள் - இங்கு வரும் வேளையிலே
அங்கே தவசு செய்யும் - ஆன தவமுனியும்
எங்கே சிவன் பாதம் - என்றைக்கு காண்பேனென்று
இருகை விரித்து இருந்தானே - இயல்பான மாமுனியும்
மாமுனிவன் செய்யும் - மாதவசைத் தான் கண்டு

சந்திரவட்டக்குடையான் - சகல கலை வல்லவன்காண்

மகேஸ்வரனும் மகேஸ்வரியும் - மகிழ்ந்து மனமிரங்கி
காட்சியளிக்கவென்று - கடவுளரும் முன் நின்ருர்
காட்சியளித்ததைக் - கண்டவுடன் தாருகனும்
அரகரா சிவனே - அடியாரைக் காத்தோனே
அனுதரட்சகனே யாரும் - அறிவதற் கரியோனே யென்று.
பாதத்தில் விழுந்து - பன்முறை சேவித்து
விழிகளில் நீரரும்ப — வேத வாக்கியங்களால் துதித்து
கரங்களைச் சிரமேற்கூப்பி - கருத்தைக் கருத்தர் மேல் வைத்து

[விருத்தம்]

ஆதியே அரனே ஆலவாய் அப்பனே அடியேனுக்கு
சோதியே சுடரே என்றன் துயரெல்லாம் மாற்றி வைத்தாய்
பாதியே பரனே என்றன் பாவமெல்லாம் நீக்கியாண்ட
நீதியே அடியேனுக்கு நிமலனே வரந்தருள்வாய்

அம்மானை சீர் நடை

என்று துதிபாடி - இறைவனைத்தான் பணிந்து
நின்றதொரு தாருகனை - நிமலனுந்தான் பார்த்து
உன்றன் தவத்தை - உவந்து மகிழ்ந்தோம் யாமும்
உன்றன் மனதில் - உற்றதெல்லாம் கேளுமென்ருர்
ஆண்டவன் உரை கேட்டு - அரக்கன் அது சமயம்
திரிலோகமனத்திலும் - செல்லவேணும் எனதாணை
ஆணொருவர் தன்னாலே - அழியா வரமெனக்கு
தந்தருள வேணுமென்று - தயாபரனைத்தான் தொழுதான்
அப்போது ஈஸ்வரனும் - அவன்பால் மனதிரங்கி
இப்போது நீ கேட்டவரம் - ஈந்தோம் யாம் உன்றனக்கு
என்று சொல்லி ஈஸ்வரனும் - ஏகினுர் கயிலை தனக்கு
கயிலை தனில் சென்று — கடவுளரும் தானிருக்க
அரிய வரங்களை பெற்று - அவனிதனை அடக்கி
துணி[illegible]வாகத் தேவர்களைத் - துன்பப்பட எவல் கொண்டு
தே[illegible]ாட்டையிட்டிங்கு - கொண்டு மே சிறையிட்டான்
[illegible]ட்டமுடனே சிறந்த - திரைகடலினுள்ளிருக்கும்
[illegible]ன்னிலங்கைமா நகரில் - தேசத்தார் தாமறிய
[illegible]ாட்டையிட்டு இங்குதான் - குவலயம் ஆண்டிருந்தான்
தற்[illegible]படியாக - இவனுண்டு வரும் நாளையிலே
[illegible]

முனை முருகனது - [illegible] எழுவருமே

ஆலிலையில் துயில்வோன் தனையும்- ஆதிதேவனையும் தானழைத்
மூவரும் தானிருந்து அந்த - மூர்க்கனை யொழிப்பதற்கு
என்ன செய்யவேணுமென்று - இருந்தாலோசனை புரிந்தார்
ஆணாலே தாருகனை - அழிக்க வகையில்லையே தான்
பூணாரம் பூண்ட - புட்டாபுரக் காளியுமே
தனது படையுடன் - தரணியில் சென்றவளும்
துணிவுடன் தாருகனை - சிரமறுப்பாளென்று சொல்லி
மாலுரைக்க ஈஸ்வரரும் - மறையோரும் இணங்கியே தான்
வேலு கந்த காளி தனை - விளித்தார் காண் அம்மானை
அதுவறிந்த மாகாளி - அன்ன நடை ஒயிலுடனே
வந்தாளே மாசபையில் - வந்து பதம் பணிந்து
வடவாக்கினிமுகத்தாள் - வரவழைத்ததென்னவென்ருள்
அப்போது ஈசன் - அவளை முகம் பார்த்துரைப்பார்
தாருகனைத் தலையறுத்து - சங்காரம் செய்திடவே
போக நீ வேணுமென்று - போக விடை கொடுத்தார்
விடை பெற்ற காளி - விரும்பியொன்று கேட்கலுற்ருள்
என்னோடுதவி செய்ய - ஏவல் படையாக வரவே
வண்ணப் புதல்வர்களை - வகிருமென்ருள் மாகாளி
அப்போது ஈஸ்வரனும் - ஆங்காரக் காளியுடன்
கற்போடொத்த - கன்னியரே உந்தனுக்கு
விடைதானொரு வசனம் - விரிக்கக்கேள் ஒண்ணுதலே
படைக்காக உந்தனுக்குப் - பாலகர்தான் வேணுமென்று
பச்சைமால் தனைநோக்கிப் - பாரத் தவமிருப்பாய்
தவசுமிக நீபுரிந்தால் - சங்கு சக்கரத்தர் மன்
விந்துதனில் பிறந்த - வீரர் ஏழுபேர்களையும்
உன்னை யழைத்து - உன்கையிலே தான்தருவார்
முன்னே தவம்புரிய - மொய்குழலே போமென்று
அரனார் விடையும் - அருளும் மிகக்கொடுத்தார்
பரமன் விடைகொடுக்க - பத்திரமா காளியம்மை
பரமனார் தேவியுமே - பச்சைமால் தனைநாடி
பாற்கடலில் பள்ளிகொள்ளும் - பச்சைமால் நாரணரை
நினைந்துருகித் தவசு - நெடுநாளாய் தானிருந்தாள்
இந்தப்படியாகத் தவசு - இவளிருக்கும் அந்நாளிலே
தேவர்களும் முனிவர்களும் - சிறப்பாக வாழும் வனம்
அந்தவனம் தனிலே - அநேக நெடுநாளாய்

சந்திரவட்டக்குடையான் - சகல கலை வல்லவன்காண்

ஈஸ்வரனைத் தஞ்சமென்று - இருந்தார்கள் கன்னியர்கள்
ஏலாதி சுனையதிலே - ஏழு கன்னிமார்களுமே
தீர்த்தங்களாடவென்று - தெய்வ கன்னிகள் வாரார்கள்
இங்கிதமாய் வந்தவர்கள் - இறங்கிச்சுனை நீராடி
ஆடலுடன் பாடலுமாய் அவர்கள் நிற்கு மந்நேரம்
ஏடவிழும் பூங்குழலார் - ஏழு கன்னிமார்களுமே
வண்டுறையும் கூந்தல் மின்னார் - மயிர் கிளறி நிற்கையிலே
கண்டு வித்தியா தரர் - கன்னியர் மேல் மோக முற்று
இங்கிதமாய் நிற்கும் - இவர்கள் அழகைக் கண்டு
ஆசை கொண்ட மாமுனிவன் - அரிவையரைத்தான் மயக்கி
மோகம் புழகமையல் - மோக மந்திர முச்சரித்தான்
பாசமதாய் மோகம்மூடி - பணிவு சிறந்த அரிவையர்கள்
உள்ளத்தில் குளிரும் - உடலில் கொந்தலுண்டாகிட
அசந்து நிற்கும் கன்னியர்க்கு - அகவிரையல் தான் எழும்ப
விரையலது பொறுக்காமல் - மிகக் கலங்கி வாடுவோர்
வாட்டமுற்றுக் கன்னியர்கள் - மயங்கி நிற்கும் வேளையிலே
ஓடிவந்து மாமுனிவன் - ஒருவருமறியா வண்ணம்
ஆடவரென்றறியாமல் - அக்கினியாய் நின்றனனே
அகவிரையலுக் காற்றுமல் - அக்கினியைத் தழுவுவராம்.
அக்கினியாய் இருந்து கொண்டு - அணைத்து விட்டார் மாதர்களை
அணைத்திடவே மாதர்க்கு - அன்று கருப்பம் தரித்திடுமாம்
உருத்தரித்த கற்பமது - உடனே திங்கள் திகைத்திடுமாம்
மா முனி கருப்பம் இராத் தங்காமல் - மதலை வந்து பிறந்திடுமாம்
ஏற்ற புகழ்க் கன்னியர்கள் - ஈன்றெடுத்தார் மக்கள் தன்னை
பெற்றனர் ஏழு பிள்ளை - பெண் கொடி ஏழு பேரும்
மெத்தவே முனியைப் போற்றி - மெல்லியரேது சொல்வார்
சித்தமாய் எடுத்தெங்கள் - தேசமதில் போனோமேயானால்
குற்றமே மிகவுண்டாகும் - குலத்துள்ளோர் தமக்கென்றார்
என்றுதான் கன்னியர்கள் - ஏழு பேருந்தான் கூடி
நன்றியுடன் போற்றி நின்று - நவில்லுற்றார் மாதவர்முன்னே
வேதனே மெய்ஞ்ஞானம் - விளங்கும் வித்தியாதரனே
போதனே உந்தனுட - புத்திரரைக் கீழுலகில்
கொண்டுதான் போகிலெங்கள் - குலத்துக் கிழுக்கென்று
தெண்டனிட்டுக் கன்னியர்கள் - திறல் முனியைப்போற்றி
மக்கள் ஏழு பேர்களையும் - மாமுனிவரிடம் தான் கொடுத்து
ஒக்க ஒருமித்து - ஒண்டொடிமார் ஏழுவருமே

சுருளிமலைதான் நோக்கிச் - சென்றாரே தோகையரும்
அவ்விடத்தில் சேர்ந்து - அருந்தவசு தானிருந்தார்
அப்படியாக அவர்கள் - அங்கே அருந்தவசு தானிருக்க
இங்கே ஏது செய்தோமென்று - இம்முனியிருக்கும் வேளையிலே
அமுதூட்ட வேணுமென்று - அம்முனிவர் தான் நினைந்தாரப்போ
ஏலாதி சோலையதிலே - ஏற்ற பசுவதுதான்
காடதிலே மேய்ந்து வரும் - காராம் பசுவதனை
முனிவரும் கண்டு - முகம் மலர்ந்தந் நேரம்
அகம் மகிழ்ந்து முனிவர் - அருகழைத்துத் தான்பிடித்து
மகிழ்ச்சியுடன் பால்கரந்து - மக்களுக்குத் தானூட்டி
ஊட்டி வளர்த்திருந்தார் - உற்றதொரு பாலகரை
பால்தனையும் தான் குடித்து - பாலகருந்தான் வளர்ந்தார்
சதுரகிரி மலைதனிலே - சமர்த்தாகத் திரை வளைத்து
திரைக்குள் அந்தப் பாலகரைச் - சிதறாமல் தான் கிடத்தி
சீராகத்தான் வளர்த்தார் - செல்வமாய்ச் சிறுவர்களை
ஆயனுட தங்கையவள் - அறந்தழைக்க வேணுமென்று
மைந்தர்கள்தான் வேணுமென்று - மாகாளி தவசிருக்க
மாமுனிவன் தானறிந்து - மக்களைத்தான் கொடுக்க வென்று
அனைத்துயிரையும் காக்கும் - அச்சுதரைத் தானினைந்து
அன்பாக வளர்த்த - அந்த வித்யாதர மாமுனியும்
மாலை பூப்போல வாடாமல் - மக்களைத்தான் எடுத்து
கடந்து பல வனமும் - காவுகளும் தான் நடந்து
காதவழிக்கப்பாலே - காளி கோட்டை தெரியுதென்று
கண்டு மன மகிழ்ந்து - காவியுடை மாமுனியும்
போகவே மனங்கனிந்து - புகழான வித்யாதரரும்
புட்டாபுரக் கோட்டையிலே - பூலோக நாச்சியிடம்
சென்றந்த மாமுனியும் - சீராய் அடிதொழுது
மக்கள் ஏழுபேர்களையும் - மகாளியிடங் கொடுத்தார்
கொக்கரித்து மாகாளி - கொண்டாடித் தான் மகிழ்ந்து
வாங்கும் அளவில் - மாமுனியைத் தான் நோக்கி
தாங்கி நின்று போற்றி - தவ முனிவரிடமேது சொல்வாள்
வித்தியாதரமுனியே - வித்தைக்குக் கருத்தோனே.
மாதவங்கள் பெற்ற - மாமுனியே இம்மக்களுக்கு
கருவில் அமைந்திட்ட - காரணப் பேர் சொல்லுமென்று
ஆனோர்க்கு நாமம் - அருளி நீர் தாருமென்றாள்
வானோர்கள் போற்றும் - மாமுனியும் மாதாவைத் தான் பார்த்த

இம்மதலைக் கமைந்த காரணப் பேர் - இன்னதென்றுரைத்தார்
சாணர் சத்திரியர் சான்றோர் நாடர் நாடாள்வாரென்று சொல்லி
நாமமிட்டுப் பாலகருக்கு - நன்முனியும் போயினரே
மாமுனியும் போன பின்பு - மாதவும் அப்போது
ஏந்தியெடுத்த மக்கள் - ஏழுபேர்கள் தனக்கும்
ஒற்றைப்பனையில் அமுது கொண்டு - ஒரேழ் மக்களை வளர்க்க
ஏறிட்டுத்தான் பார்த்தாள் - எதிரே நின்ற கற்பகத்தை
கற்பகத்தில் ஏறச் சொல்லிக் - காம்பது வைத்தான் வளைகக
பாலருக்கமுதிறங்கிப் - பண்பாகத்தான் கொடுக்க
காம்பதிலேபாலும் - கரகர வெனப் பொழிய
அப்பாலைத் தான் அருந்தி - அவர்கள் வருகின்ற நாளையிலே
பார்ப்பனனும் பார்ப்பினியும் - பாலருந்த ஆசை கொண்டு
கண்டு இருவர்களும் - கனபிரியமாய் மகிழ்ந்து
ஊக்கமதாகவேதான் - உற்றதன் கூட்டை விட்டு
காற்றனுத்தான் கடத்தினுள் - கடுகியே புகுந்து கொண்டு
உற்சாகமாய்க் கூட்டின் - உள்ளே புகுந்து பறந்து
பனைமண்டையில் தானிருந்து - பனையேறியறியாவண்ணம்
பாளையில் தான் வரும் - பால முதை உண்டார்கள்
பரகாயப் பிரவேசசித்தி பெற்ற - பார்ப்பனனும் பார்ப்பினியும்
மாய ரூப மாகவேதான் - மாறு வேடந்தானுகி
பாலகர்கள் தானருந்தும் - பனையமுதை உண்டு விட்டார்
பாலகர்கள் வாய்தனிலே - பாலமிர்தம் வார்க்காமல்
அப்போது பாலகர்கள் - அழுதார்கள் பசியாலே
அழுங்குரலானதைத்தான் - அம்மாவுந் தானறிந்து
என்னவிது மாயமென்று - ஏறிட்டுத் தான்பார்த்தாள்
பார்க்கும் போதந்த - பனைமண்டையானதிலே
மாயமாய் இருவர் தன்னை - மாதாவும் தான் பார்த்து
பாலர்கள் தான் குடிக்கும் - பாலை நீங்கள் பருகினதால்
பனைமர மாகத்தான் போய்ப் - பாரில் பிறந்திடுவீர்களென்று
அம்மாவம் சாபமிட - அந்தணனும் அந்தணியும்
அம்மாவை அடிதொழுது - அப்போது ஏது சொல்வார்
அறியாமல் செய்த குற்றம் - அம்மாவே பொறுத்தருள்வீர்
இச்சாபம் எங்களுக்கு - எப்போது தீருமம்மா
அப்போது மாகாளி - அம்மாவும் ஏது சொல்வாள்
பனை மண்டையில் தானிருந்து - பாலமிர்தம் உண்டதினால்
உண்ட பாலத்தனையும் - உங்கள் மண்டையில் தானிருந்து

எந்தனது மக்கள் - ஏற்றதொரு சாணர்களும்
உங்கள் மண்டையிலிருந்து - உற்ற காம்பைத் தான் வளைத்து
இறுக்கிக் கசக்கி - இயல்பாக பால் வடித்து
உண்டு களித்து - உவகையுடன் வாழ்ந்திருப்பாரென்று
அன்றம்மா கொடுத்த வரம் - அன்பான சாணர்கட்கு
இன்று புவியெங்கும் - இருந்து வளர்ந்தோங்க
இப்படியாக இவர்கள் - இருந்துவரும் நாளையிலே
பூமாதேவிக்கேற்ப - புவியிலுள்ளோர் நடக்காமல்
பூவுலகில் யாவருக்கும் - பூஜை ஜெபம் நீதி தவறிடவே
நீசர் குல மறுக்க - கொடிய திருமாலுமே
மாசில்லாமல் எங்கும் - வையகத்தைக்காக்கவென்று
அன்பாயிருக்கவென்று - அரி அயனும் தான் வருவார்
வம்புமிகமாளும் - மாயவனூர் தன்னருளால்
அனைத்தும் அழியும் போது - அகன்று விடும் உன் சாபம்
எல்லாமே தானறிந்த - ஈஸ்வரர் தான் வரும் போது
அந்நாளில் விரதம் பூண்ட - அருந்தவ முனிவர்கட்கு
முத்திக்கு வழிகாட்ட - முக்தர்களாய் வந்துதிப்பார்
அக்காலம் நீங்களும் - அரனடி வேதியராய்த் தோன்றி
வேதம்படித்திடுவீர் - வேற்று ரூபம் மாறி விடும்
மாய சித்தி மறந்து - மானிடராய் வாழ்வீர்கள்
என்று சொல்ல அம்மா - இன்பமுடனே மகிழ்ந்து
மக்கள் ஏழு பேர்களையும் - மாதாவும் அருகழைத்து
பனையின்பால் வார்த்து - பாலகரை வளர்க்கலுற்றாள்
மக்களைத் தான் வளர்த்து - மாதாவும் ஏது செய்தாள்

மாகாளி மக்களுக்குப் பேரிடும் படலம்

இன்பமதாகவேதான் - இவர்கள் ஏழுபேர்களுக்கும்
பேருமிட்டுப் புகழ் பெறவே - பிரியமுடன் மாதாவும்
ஏழு நல்ல பாலகர்க்கும் - ஏந்திழையாள் பேருமிட்டாள்
மால் தந்த பிள்ளைகளில் - மைந்தன் ஒருவனுக்கு
திரிலே சனநாதன் எனவே - திரு நாமம் தானும் இட்டாள்
இச்சையுடன் மாமுனி தந்த - இன்னுமொரு பாலனுக்கு
இலங்குநாதப் பெருமாள் - என்றுமே பேருமிட்டாள்
ஏழு கன்னி பெற்றெடுத்த - இன்றுமொரு பாலனுக்கு
எல்லாள நாதன் என்றுமே - பேருமிட்டான்

ஏனாதி மக்கள் பெற்ற இன்னுமொருபாலனுக்கு
ஏனாதிநாதன் என்றுமே - ஏற்றமுடன் பேருமிட்டாள்
வித்தியாதரன் தன்னுடைய - விந்திலுதித்ததொரு பாலனுக்கு
வீரவிக்கிரமநாதனென்று - விளங்கவே பேருமிட்டாள்
பூதப்படைக்குத் தலைவனுவன் - பூதநாதனென்று பெயருமிட்டாள்
திருவேலங் காட்டில் - திருக்கோட்டையிட வெண்ணியம்மை
திருவழுதி நாதனென்று - திருப்பேருமிட்டாளப் போது
பேருமிட்டுப் பாலகரைப் - புகழ் பெறவே வைக்க எண்ணி
அன்பான பாலருக்கு - அம்மாவும் ஏது செய்தாள்
பணியணிகளெல்லாம் - பலவிதமாய் தான் கொடுத்து
பூண்டந்த மக்களையும் - பூத்தரளமாய்த்தான் வளர்த்தாள்
வளர்த்தாளே மக்களையும் - வார்ப்புருக்கி வார்த்தது போல்
அளந்து குறித்துருவாக - அச்சதிலே சேர்த்தது போல்
ஐந்து நல்ல வயதிலே - ஆரம்பக் கல்வி படிக்க வைத்தாள்
பள்ளிக்கு வைத்தாளம்மை - பாலகர் ஏழு பேரையும்
தெள்ளுதமிழ் தெலுங்கு - சேர்ந்தே யுணர்ந்தார்கள்
குற்றமின்றி எழுவரையும் - குவலயத்தோர் தான் மகிழ
குற்றமில்லாமல் கல்வி - குறைவின்றித்தான் படித்தார்
பலவித கல்விகளும் - பண்பான வித்தைகளும்
ஆனையேற்றம் குதிரையேற்றம் - அம்பு வித்தையான தெல்லாம்
கற்றுக் கொடுத்து - கலைவல்லோர் தானுக்கி
வெற்றியுடன் பிள்ளைகள் தான் - வீரரென்ற ஏழு பேரின்
தோழ் வலியின் ஏற்றமும் தேற்றங்கண்டு - வியக்காத மக்களில்லை
அவ்வண்ணமும் உள்ளார் - அவரிருக்க மன்னுளில்.

தேவர்களைப் பிடித்துத் தாருகன் சிறையில் வைக்கும் படலம்

கலிவிருத்தம்

அங்கரணியுறு மமலை வானவர்
பொன்னகரியல் பெனப் பொழியு மெல்லையில்
இன்னல் செய் இத்தாருகனிழைத்த தீமையால்
துன்னரும் திடுமெனரிசி தோன்றினன்

விருத்தம்

தாருகன் ஏவலாளர் தனைக்கண்டஞ்சியானும்
பாருலக தனிற்தப்பிஙின் பதமல ரடைந்தேனம்மா
அருந்தவ முனிவரையும் அமரர்கள் தங்களையும்
அருஞ்சிறை வைத்தவர்களை அலக்கண்ணுற்றுன்

தொடர்ந்து தேடியும் - தோன்றுது கண்ணில்
தாருகனுக்குத் தப்பிய ரிசி - தாயிடம் முறையிட்டான்
சிவனுக்கடிமை - செய்திந்த பூமியிலே
எவனுக்கும் பதறுது - இருந்தோமே இவ்வுலகில்
தன்னிலும் அதிகவரம் - தரணியில் எவர் பெற்றுலும்
தனக்காபத்தென்றெண்ணி - தாருகனும் உபாயமுற்று
ரிசிகளைத் தேடிப் பிடித்துமே - இம்சித்துச் சிறையிலிட்டான்
அவ்வார்த்தை கேட்ட - அன்னை மாகாளியரும்
கேளு நீ மாமுனியே - கேடு கெட்ட தாருகனை
தாருகனைத் தீர்க்கத் - தரணிதனில் பிறந்தேன்
மாபாவி தன் கொடுமை - மண்ணும் விண்ணும் தாமறிய
தீர்க்கிறேன் தேவர் - சிந்தை தனில் தான் மகிழ
காக்கிறேனென்று - காளியுமே தான் உரைத்து
துன்னரும் ரிசி சொற் கேட்ட - துடியுடையாள் பத்ரகாளி
படைக் கெழுந்தருளி - பாலகரைத்தான் கூட்டி
நடைக்கதிகமுள்ள - நாயகியும் பாலருக்கு
போர்க் கோலமிட்டு - புட்டாபுரம் கடந்து
ஆங்காரமுள்ள காளி - அலகைப்படையுடனே
அலைகடலைத் தாம் கடந்து - அக்கரை சென்றுளே
நன்றுதானு வெனவே - நாலஞ்சி கவிதான்பாடி
வந்து ஒரு மலை மேல் - வாய்த்த கூடாரமிட்டு
சந்து மிகச் சொல்லி - தான் விட்டாள் தாருகனுக்கு
சூரனிடத்தில் விரைவாகவே - தூதாக சென்றேகி
பாரமுள்ள கயிலை - பருவதமும் தேவருட
சிறைகளகற்றி வானோர் - தேவரையும் நீ அனுப்பி,
தீரவனுகச் சீமையரசாள்வாயென்று
இப்படியே ஆகாவிட்டால் - இன்று கழித்தெட்டாம் நாள்
அப்படியே உந்தனுக்கும் - ஆனகாளீஸ்வரிக்கும்
சண்டையென்று சொல்லி - தான் கூறிவாவெனவே

காமொன்று தான் கடந்து - கண்டானே தாருகனைக்
காளியத்த ஈஸ்வரியும் - கருத்தாய் உரைத்ததெல்லாம்
அந்த அசுரனுக்கு - அத்தூதன் தான் உரைத் தான்
~~சூரா கேள்~~ காளி தேவி - சொன்ன வாசகமுமிதுதான்
என்றுரைக்க ஏளுத பாவி - இகழ்ந்தானே அப்போது
என்று மதமாய் - இவன் பேசத் தூதனுந்தான்
அப்போதச் சூரனுக்கு - ஆத்திரமாய் ஏதுரைப்பான்
நீயோ தான் எங்கள் - நிமலி தனக் கெதிரி
பேயோடு நாய் நரிகள் - பிய்த்து பிடுங்கியுன்னைக்
கண்டவிடத்திலுன்னைக் - கழுகுகள் மிகப்பிடுங்கி
கொண்டோடித்தின்ன - கொற்றவையுந்தான் வருவாள்
என்றே தான் தூதன் - இவை உரைக்க சூரனுந்தான
அன்றே மனந் துணிந்து - அரக்கனுமே ஏதுரைப்பான்
ஆளுலறிவோம் உங்கள் - அணங்குதனை யுமிங்கே
போனலென்றேடே - போர் செய்ய ஏவிவிடு
சூரனிவை யுரைக்க - தூதனுமே திரும்பி விட்டான்
தூதன் மிக நடந்து - சொன்னன் திரிசூலியிடம்

[தாருகனைக் கொன்று - தேவர் சிறை மீட் கும்படலம்]

தூதன் சொற் கேட்டு - துடியுடைய மாகாளி
பண்டந்தத்தாருகனேடு - படையெடுத்தாள் அம்மானை
சூரனுட படைகள் - துண்டு துண்டாய் விழவே
வீரரென்ற பாலகரும் - வெட்டினர் அம்மானை
வெட்டதினல் செத்தார்கள் - மிகச் சூரப்படைகளெல்லாம்
பட்டார்களென்ற சொல்லை - பாவி சூரன் தான் கேட்டு
வந்தேயெதிர்த்தான் காண் - மாகாளி தன்னேடு
மாயப் போர் செய்து - மாகாளியை வெல்வதற்கு
காயம் வேருகி சூரன் - காளியுடன் வந்தெதிர்த்தான்
மாய ரூபமாய் வந்ததாருகனை - மாகாளியும் தான் பார்த்து
ஏயுமே என்முன்னம் - எருமையாய் வந்தெதிர்த்தவனை
யாளியாகத்தான் மாறி - எட்டியுதைத்தாள் காளியரும்
எடுத்தான் சுயரூபம் - ஈஸ்வரியும் தான் பார்த்து
அடுத்துமே கொன்று - அமரர் சிறை மீட்டி
அழியாத சேனையுடன் - அலைகடலைத்தான் கடந்து
தாக விடை தீர்த்து - தன் பதிக்குக் கூட்டி வந்தாள்
தாருகன் படையை வதைத்த - சான்றோர்கள் தமக்கு
மிக்க வரிசைகள் - மிக்கொடுத்தாள் மாகாளி

புட்டாபுரத்தில் - பூதகணம் சூழ்ந்து நிற்க
கட்டாத காளி - கமலத்தில் வீற்றிருந்தாள்
சிங்காதன மதிலே - சிறப்புடன் வீற்றிருந்தாள்
அப்போது நல்ல - ஆண்மையுள்ள பாலருக்கு
இப்போது மாலையிட ஏழு பேர்க்கும் வேணுமென்று
பார்த்து விசாரித்து வர - பத்திரமாகாளியம்மை
நாற்றிசையும் பார்த்துவர - நாரதனைத்தான் அழைத்து
நல்லமாகாளியந்த - நன்முனியோடேதுரைப்பாள்
விசாரித்து நல்ல - விவரமுடனே சொல்லும்
நீலகிரி மலையில் வாழும் - நீடிய புகழ்மாமுனியே
எந்தன் மக்கள் ஏழுவர்க்கும் - ஏற்ற குலப்பெண்ணை
நீர் முயன்று பெண்ணை - நிச்சயிக்க வேணுமென்றுள்
நல்லதுதான் என்று - நாரதமாமுனிவரும்தான்
நல்ல வகையான - மக்கள் ஏழு பேர்களுக்கும்
பார்த்து வருவேன்று - பகர்ந்து முனிபோயினர் காண்.
சாற்று மொழி கேட்டு - தவமுனியுமப்போது
நீதியுள்ள மன்னன் - நிருபதி ராஜனிடம்
பெற்ற மதலை தன்னைப் - பெண் கொள்ளப்போயினரே
மாமுனியும் கேட்க - மன்னவனும் சம்மதித்தான்
மக்கள் ஏழுபேர்களுக்கும் - மாலை மணம் சூட்டுதற்கு
மிக்க நாள் பார்த்து - விரைந்து வந்தேன் மெல்லியரை
என்று முனிவர் சொல்ல - ஏற்ற மாகாளி இயம்புவாள்
நன்று நன்று மாமுனியே - நான் வளர்த்த கண்மணிகள்
தெய்வப் பிறவியல்லோ - திசைவென்றசான்றோர்கள்
பேசிவந்த பெண்களுக்குப் - பிறப்பென்ன சொல்லுமென்றுள்
செப்புகிறேன் என்று - சிவ காளியைத் தொண்டனிட்டு
கேளாய் நீ அம்மாவென்று - திருவையுடனே துரைப்பார்
நாளான நாளதிலே - நல்ல தெய்வயோகமதில்
சீரான கன்னியர்கள் - சிவனுக்குபூசை செய்தார்.
பூசையது செய்து - புகழாகத்தானிருப்பார்
மாலையிலும் காலையிலும் - வாசவர் கோன்தனக்கு
ஏவலதுசெய்தங்கு - இருக்கின்றார் கன்னியர்கள்
என்று சொல்லக் கேட்டு - இயல்பான காளியம்மை
நல்லது மாமுனியே - நாள் முகூர்த்தம் பார்த்துரையும்
என்றவுடன் அப்போது - ஏற்றதொரு மாமுனியும்
உடனே மன மகிழ்ந்து - உகந்த முகூர்த்தமென்று

திடமான நிருபருக்குச் - செய்தி சொல்ல ஆளும் விட்டார்.
நாளைக்கு மணமென்று - நாட்டுக்குப் பாக்கு வைத்து
வாழை கரும்புகளை - வகை வகையாய்தான் நாட்டி
பந்தலது இட்டு - பலவர்ணங்கள்தான் அமைத்து
நல்ல நல்ல விதமாக - நாட்டிலுள்ளோர் தாமறிய
நல்லதொரு பாலகருக்கு - நலமான அணிகள் பூட்டி
அலங்கரித்து மைந்தர்களை - அன்பாக வைத்திருந்தார்.
இப்படியாக இவர்கள் - இங்கிருக்கும் வேளையிலே
அப்படியே நிருபதி ராஜன் - அம்மக்கள் தம்மோடு
நிருபதி மன்னவனும் - நேரிழையார் பெண்களுடன்
சுற்றத்தாரெல்லாம் - சூழ்ந்துமே தான் வந்து
தோழியரோடு தோகையரும் - சூழ்ந்துமேதான் வந்திட
செல்லக் கலியாணமென்று - சீரான பாலகருக்கு
மணவறையிலே பெண்ணையும் - மாப்பிள்ளையும் தான் இருத்தி
பதினெட்டு வாத்தியங்கள் - பட்டணமெல்லாம் தான் முழங்க
தம்புரு வீணை - சாரங்கிதான் முழங்க
இப்படியே வாத்தியங்கள் - இசைந்திசைந்து ஊதி வர
அப்படியே நிருபதி - அரசன் மக்கள் ஏழுவரையும்
தாலிதரிப்பதற்கு - தாய்காளியிடமப்போது
உருக்கிய பொன்னை - உடலிரண்டு உயிரொன்றாக
அஸ்தமிட்டமாங்கல்யம் - அம்மக்கள்தான் வாங்கி
அரகராவென்றுசொல்லி - அணிந்தாரே மாங்கல்யம்
கன்னிதிருக்கழுத்தில் - கட்டினார் மாங்கலியம்
மாதுதிருக்கழுத்தில் - மங்கலியம் கட்டினார்
தாலிதரித்த பின்பு - தார்வேந்தன் நிருபதியும்
வந்த உறவின் முறைக்கு - வழங்கினான் போசனங்கள்
தாம்பூலமும் சந்தனமும் - தான் கொடுத்தார் வந்தவர்க்கு
எல்லோருக்கும் கொடுத்து - இனிதாய் முடித்த பின்பு
வாலையதுவான - மாகாளியானவளும்
மண்டபத்தில் வந்து - மகிழ்ந்திருந்தாரம்மானை
தண்டமிழ்க்கன்னி - சான்றோர்கள் தனக்கு
திருவேலங்காடதிலே - திருப்பதியாய்க் கோட்டையிட்டு
கோட்டையிட்டு வாழ - குவலயத்தோர் கொண்டாட
மக்கள் மருமக்களையும் - மறு இடம் வைக்க எண்ணி
வீடொரு ஏழும் - விஸ்தாரமாய்த்தான் அமைத்து
தேடும் வரிசைகளெல்லாம் - சிறப்பாகத்தான் கொடுத்தாள்

தன்தன் மாளிகையில் - தானேதான் வாழ்ந்தார்கள்
மேதினியோர் கொண்டாட - மெல்லியர்கள் ஏழு பேரும்
வயிற்றில் கருப்பமாகி - மதலையைப் பெற்றார்கள்
மக்கள் மனைவி சுற்றம் - மகிழ்ந்து சிலகாலம்
திக்கெங்கும் போற்றி - திசைகளெட்டும் தானதிர
சித்தமுடன் வாழ்ந்து - சிறந்திருக்கும் அந்நாளில்

செட்டி மகளைக் காப்பாற்றுதல்.

செட்டி தெருவதனில் - செருக்குடைய அகம்படையான்
பெண்ணின் அழகைக் கண்டு - பிரியமுற்றுத்தான் மகிழ்ந்து
தூக்கியவனுமங்கே - துரிதமாய்ப் போகலுற்றான்
போகும் பொழுது - புகழ் பெரிய சான்றோரில்
இலங்குநாதப்பெருமாள் - என்றதொரு தீரனுமே
ஓடி வளைத்துப் பிடித்துப் - உற்றதொரு வீரனவனும்
குத்தினான் வீரன் - கூவோ கூவென்றான் அகம்படையான்
புத்தி வந்ததென்று - போற்றியே பெருமாளையும்
தெண்டனிட்டு ஓடலுற்றான் - திரும்பியே பாராமல்
செட்டியவன் மகளை - மீட்டுக் கொண்டு வந்தான்
கொண்டு வந்த பெருமாள் மேல் - குதுகலம்தான் கொண்டு
ஆனந்தமாய்த் தோளில் வைத்து - ஆனந்தக் கூத்தாடினான்
செட்டிதோள் ஏறும் பெருமாளென்று - சொன்னார் காணம்மானை
இன்னலுறும் மன்னுயிரை - இவர் தம்முயிரைக்காத்தவரை
போற்றிப் புகழ்ந்து - பொருந்தி வாழ்ந்தார் குடிமக்கள்
இப்படியாக இவர்கள் - இருந்து வரும் நாளையிலே

கரிகாற்சோழன் சான்றோர்களைத் தளபதியாக நியமித்தல்

நாடாண்ட கரிகாற்சோழனுக்கு நாட்டாசை தான் பிடித்து
பாரினில் கீர்த்தியுள்ள - பாண்டிய சேரமன்னர்களையும்
அடக்கி அவர்களிடம் - ஆனபகுதி வாங்கவேண்டும்
பகுதிமிக வாங்கவேண்டும் - பாரில் நம்கொடி பறக்கவேண்டும்
என்றெண்ணங் கொண்டு - ஏது சொல்வான் சோழ மன்னன்
மந்திராலோசனை செய்ய - மந்திரிகளைச் சபை கூட்டி
கூடிய சபைதனிலே - கொற்றவனும் ஏதுரைப்பான்

பாண்டியரசனையும் - படையெடுத்து முறியடித்து
சேரனவன் தனையும் - சென்றுமேதான் முறியடித்து
தமக்குள்ள நாடு முழுவதையும் தான் ஆள வேண்டுமென்னும்
ஆசையுடன் இருக்கின்றேன் - அறிவுள்ள அமைச்சர்காள்
இதற்கேற்ற வழிசொல்லுமென்று - இயம்பினன் மன்னவனும்
மன்னவன் சொல்லுக்கு - மாற்றமதுஏதுரைப்பார்.
மந்திரக் கிழவரும் - மதிமிக்கதனகர்த்தரானவரும்
கோவில் குருக்களும் - கூடியுள்ள புரோகிதர்களும்
மகத்தான சோதிடரும் - மந்திரி பிரபுக்களும் சேர்ந்து
ஏது சொல்வார் அப்போது - ஏற்ற புகழ் வேந்தனிடம்
ஏற்றதொரு மன்னர்கள் - எல்லோர்கள் தங்களையும்
ஓர் குடைக்குள் திறைசெலுத்தும்படி - ஒடுக்கியாள வேண்டுமானுள்
தக்கபுகழுடைய - தளபதிகள் ஏழு பேர் துணை கொண்டு
திக்கெல்லாம் வென்று நாம் - ஜெயக்கொடி நாட்டிடலாம்
ஏழுபேர் தன்மைகளையும் - எடுத்துரையும் மந்திரியே யென்க
மன்னனிவையுரைக்க - மந்திரிகள் எடுத்துரைப்பார்
வாழுமாகாளி தாயார் - வளர்த்த புதல்வர் வீரமது கேளிர்!

விருத்தம்.

"மல்லிலும் படைவிதத்திலும் மாயை செய்த
வல்லதாருகன் படையை வென்றதீரர்கள்
வில்லம்பிலும் செருவில் வெல்லவல்ல சூரர்கள்
அல்லல் வராது நம்படைக்கவர்களைச் சேர்ப்போம்."
சேர்த்திட வேணுமென்று - செப்பினர் மந்திரிகள்
தாருகன் தன்படையைத் - தான் ஜெயித்த சான்றோரைத்
தளகர்த்தராக்கித் - தான் வைத்துக்கொண்டு மிக
பாண்டியன் சேரனுடன் - படையது தொடுப்போமானால்
நம் படைக்கு வரும் ஆபத்தை - நன்றாகத்தான் தெரிந்து
மேதினியோர் தானறிய - மேலவராய்க் காத்திடுவார்
இவ்வுரை கேட்டு மகிழ்ந்து - என்ன சொல்வார் மன்னவரும்
மந்திரியே நம்முடைய - வாய்த்த படைத்தலைவர்
தந்திரியே நீர்சென்று - சான்றோர்களைத்தான் கூட்டி
வாருமென்று சொல்லி - வகுத்துரைக்க அப்போது
சேர்ந்துமே சொல்லி - சேவகர் தான் கூட்டிவர
அழைத்து வந்த சான்றோரை - அரசன் மிகக் கொண்டாடி

ஆசனத்தின் மீதாக - அனைவரையுமமரச் செய்தான்
வெல்லும் மாகாளி மக்கள் - வேந்தரைப் பார்த்துரைப்பார்
என்ன வகையாக நீங்கள் - எங்களையுமழைத்தீர்கள்
மனதிலிருக்கின்ற - மர்மத்தை சொல்லுமென்றார்
ஏது சொல்வான் அப்போது - ஏழுவரையும் தான் பார்த்து
பாரில் புகழ்படைத்த - பத்திரகாளி பிள்ளைகளே
பாண்டிய சேரனுடன் - படைதொடுக்கபோரேன் யான்
என்னுடன் வந்து நீங்கள் - எந்தனது இயல் படைக்கு
ஏற்ற தளபதியாய் - இருந்து பணியாற்றிடுவீர்
எல்லாமன்னவரையும் அடக்கி - என் கொடி பறக்க வேண்டும்.
என்றுரைக்க வேந்தன் - இசைந்தார்கள் ஏழுபேரும்
இசைந்தமையெண்ணி - இவ்வரசன்தான் மகிழ்ந்தான்.
படைகளோடு புறப்பட்டான் - பாண்டிய நாடுதானோக்கி

பாண்டியனை வென்ற படலம்

கரிகாலன் மந்திரியுடன் - கனத்த பரிசேனைத்தளம்
சிறப்பாகச் சேனையுடன் - சீக்கிரத்தில் அந்நேரம்
புறப்பட்டார் பூமியிலே - பேரண்டந்தான் நடுங்க
நடந்தார் மதுரைக்கு - நன்னகரம் விட்டேகி
கடந்தார் வெகு தூரம் - கண்டார்கள் மதுரை நகர்
மதுரை நகர் வந்து - மன்னனுக்குத் தூதனுப்பி
பண்டியனிடஞ் சென்று - பகுதி தரவேண்டுமென்றும்
பகுதிதராவிட்டால் - படையெடுப்போம் என்று சொல்லி
விவரமறிந்து - விரைவில் வந்து சேருமென்றார்
தூதனுமங்கே சென்று - சொன்னான் விவரமதை
அப்போது பாண்டியனும் - அவ்வார்த்தை தான் கேட்டு
சிந்தையது கலங்கி - திடமுடனே ஏது சொல்வான்
பகுதியது தந்து - பாராளமாட்டேன் யான்
படையெடுத்து என்னோடு - பாங்குடனே நீங்களுந்தான்
போரிட்டுப் பாருமென்றான் - புகழுடைய பாண்டியனும்
அந்தவுரை கேட்டு - ஆனதொரு தூதுவனும்
வந்து அவனுமிங்கே - வகை விவரம்தான் உரைத்தான்
அப்போது புறப்பட்டார் - யானை படை சேனையுடன்
கருங்கடல் போல் சூழ்ந்து - கைகலந்தாரம்மானை.
துரத்தியடித்து விட்டு - துரை மன்னரானவரும்

ஏழுவரில் ஒருவனை - ஏற்ற தளபதியாக்கி வைத்து
பாண்டி நாட்டில் பகுதி வாங்க - பாளையமும் அங்கு வைத்தார்

சேரனை வென்ற படலம்.

செருக்கு மிகப் படைத்த - சேரனை அடக்க வென்று
சேனை படையுடன் - சென்றார்களம்மானை
சென்றந்தச் சேரனுக்குச் - சிறப்பாகத் தூதுமிட்டார்
தூதா நீ சென்று - துரை ராஜ மன்னனிடம்
பகுதி தரவேண்டுமென்று - பகருமென்றாரம்மானை
பகுதிதராவிட்டால் - படையெடுப்போமென்று சொல்லி
விரைவில் வாவென்று - வேந்தனுந்தான் உரைக்க
துரிதமாய்த்தூதனும் - சென்றானே சேரனிடம்
சென்றங்கே தூதுவனும் - செய்தியெல்லாம் தான் உரைத்தான்
செய்தியதுகேட்ட - சேரனும் ஏது சொல்வான்
திறை செலுத்தியாண்டதில்லை - சேரர்கள் எந்நாளும்
படையெடுத்து என்னோடு - பாங்காய் நீர் வாருமென்று
தூதனைத்தான் அனுப்பித் - துரிதமுடன் வருகவென்று
பாங்கான சேரனவன் - படைகளையுந்தான் சேர்த்தான்
இந்தப்படியாக இங்கே - இவர்களிருக்கும் வேளையிலே
வந்த அந்தத் தூதுவனும் - வளவனிடம்தான் உரைத்தான்
அந்தவுரை கேட்டு - ஆனபடை அத்தனையும்
சேனை படையுடனே சென்று - சேரனோடு போருமிட்டார்.
யானையுடன் யானைகளும் - குதிரையுடன் குதிரைகளும்
வாளொடு வாளும் - வில்லோடு வில்லும்
காலாட்படைகளுடன் - காலாட்படைகளுமே
அந்தந்தப் படைகளுடன் - அந்தந்த படைகளுமே
சேர்ந்துமே சண்டையிட்டார் - தீரமாய் அந்நேரம்
சேரனது படைகளெல்லாம் - சிதறுண்டு போகும்படி
வெட்டி ஜெயித்தார்கள் - வீரமுள்ள சான்றோர்கள்
சேரன் தனையடக்கித் - திறையது வாங்குதற்கு
சேனையுடன் சில பேர்களைச் - சேர நாட்டில்தானும் வைத்து
ஆறுபேரில் ஒருவனை - அங்கே தளபதியாக்கி வைத்தான்

ஈழனை வென்ற படலம்.

அப்போதந்த அரசன் - ஆண்மையுள்ள கரிகாலனவன்
அயல் நாடு போக வேணும் - அனுராதபுரம் சேரவேண்டும்
அலைகடலைத்தான் கடந்து - அங்கு சம்பரனைத்தான் ஜெயித்து

வெற்றி ஜெயங் கொண்டு - வீரப்பட்டம்தான் பெற்று
பாளையத்தைத் தான் நிறுத்தி - பகுதியது தான் வாங்க வேண்டும்
என்று புறப்பட்டார் - ஏற்றமுள்ள வீரருடன்
புறப்பட்டுச் சென்றார்கள் - பொங்கு கடல்தான் கடந்து
கூடாரமிட்டங்கே - கூடினார்காண் அம்மானை
இப்படியாக இவரிருந்து - ஏற்றமுள்ள தூதுவனை
தூதுவனைத்தான் அழைத்து - தூதாக அனுப்பலுற்றார்.
சம்பரனிடம் சென்று - சார்ந்து மொழி பேசி
பகுதி தருமாறு - பகருமென்றான் சோழ மன்னன்
சோழன் உரை கேட்டுச் - சென்றானே தூதுவனும்
சென்றந்தத் தூதுவனும் - சோழன் உரைத்ததெல்லாம்
பாங்குடனே சொல்லி - பகுதி தரவேண்டுமென்றும்
பகுதிதராவிட்டால் - படையெடுப்போமென்று சொல்லி
அனுப்பினான் சோழ மன்னன் - அதற்கு விடைதாருமென்றான்
அப்போது சம்பரனும் - அதற்கு விடை ஏது சொல்வான்
நம் நாட்டில் படை எடுக்க - நான் என்ன குற்றம் செய்தேன்
குற்றமொன்றும் செய்யாதிருக்க - கொல்லும் படையுடனே வந்து
பார்மீதில் ஆசை கொண்டு - படையெடுத்து வந்ததினால்
சண்டையது செய்து - சமராடித்தான் பார்ப்போம்
போவென்று சொல்லிப் - போக விடைதானுங் கொடுத்தான்
அப்போது தூதுவனும் தன் - அரசனிடம் வந்தேதுரைப்பான்
போனதுவும் வந்ததுவும் - புகழாகத்தான் உரைத்தான்
அந்தவுரை கேட்டு - ஆனபடைகளுடன்
படை எடுத்துச் சண்டையிட்டான் - பாங்கான சோழனுமே
இருவர்களுட சேனைகளும் - எதித்துப் போர் செய்தனவே
வெட்டு குத்து கொல்லென - வீரமுழக்கந்தானுமிட்டு
சண்டையதுதான் செய்யும்போது - சம்பரன் படைகளெல்லாம்
எதிர் நிற்கமாட்டாமல் - இளைத்தோடிப்போயின காண்
அப்போது சம்பரனும் - ஆனசில படைகளுடன்
வந்து அமர் புரிந்து - வைகுண்டந்தான் சேர்ந்தனனே
சம்பரன் பட்டவுடன் - சங்கு இரட்டைக் கொடி நாட்டிட
நாட்டிய மன்னனங்கு - நல்ல தளபதியை வைக்க எண்ணி
ஏழுபேரில் போக்குள்ள - ஏற்ற எல்லாளனிடம்
பாளையமுது கொடுத்து - பகுதி வாங்கியனுப்புமென்றான்
அனுப்புமென்று சொல்லி - அநுராதபுரம் விட்டங்கே
அரசனுஞ் சேனைகளும் - அலை கடலைத்தான் கடந்து
வந்தார்கள் வெற்றி பெற்று - வட நாடு செல்வோமென்றார்

[வட நாடு வென்ற படலம்]

எல்லையது குறித்து - இமயம் வரை வெல்வோமென்று
சென்றார்கள் படையுடனே - சிங்க நாதந்தான் முழங்க
முழக்கியங்குள்ள - முடி மன்னர் எல்லோரையும்
அடக்கி அவர்களையும் - ஆன பகுதி தானுங்கொண்டார்
எல்லை வைத்துச் செய்த போர் - இன்று முடிந்ததென்று
திக்கெட்டுஞ் சென்று - திறை பெற்று வரும் நாளையிலே
குறுநில மன்னரெல்லாம் - கொற்றவன் தன் சொற்கேட்டு
குறைவின்றி யரசன் - கூறிய திறை செலுத்தி வந்தார்
நாட்டுக்கு வந்து மன்னன் - நன்மைகளைச் செய்ய எண்ணி
ஏழு தளபதிகளுக்கேற்ற - வீர விருது அளித்தாரம்மானை
வேழம் பரிகொடுத்து - வேந்தனுட சீமை தன்னில்
பங்கு மிகக் கொடுத்தான் - பார்வேந்தன் சோழனவன்
பார்த்தோர் மனமகிழப் - பங்குதனைத்தான் ஆண்டார்கள்
காவிரி நாடாளும் - காவலர் நாடரெனப்படுவர்
ஆதியை நினைத்தவரும் - அரசாண்டா ரம்மானை
உற்றுழிபோல் மக்கட்கு - உதவும் பண்பினர் காண்
அருளதுவுங் கொண்டு - அக் குடியோம்புங் குணத்தினர் பால்
அன்பும் மதிப்பும் - அக்குடிகள் கொண்டிருந்தார்
இப்படியாக இவர்கள் - இருந்தரசாண்டு வரும் நாளையிலே
இன்பத்தில் துன்பம் - இவ்வரசனால் வந்துற்றது

[சோழன் தீவினை செய்யும் படலம்]

நாட்டுக்கு கேடு - நாள் பிடித்த செய்தி தன்னை
கூறுகின்றேன் கேளும் - குவலயத்தில் அம்மானை
பாரை மிக ஆளும் - பக்தியுள்ள சோழனவன்
மருட்டும் புரட்டுடனே - மாநீசன் ஆளுகையில்
புரட்டுருட்டாய் மானிடரை - பலமுள்ளோர் தானடிக்க
இப்படியே உலகில் - இவ்விதமாய்த்தான் நடக்க
கலியுக மூவாயிரத்து தொண்ணூறில் - காரணம் நடந்த கதை
கார்மேகம் தான் பொழிந்து - காவிரியாறு தானுடைத்து
வெள்ளம் அதிகரித்து - வேகமாய் வருவதினால்
காவலாளிகள் தானோடி - கரிகாலனிடம் ஏதுரைப்பார்
மனுநீதிக் காவலா - மன்னவரே கேளுமைய்யா

விரிதான் உடைத்து - கனசேதமாகுதைய்யா
ரித்தேசம் அழிந்து - இடர்ப்பட்டு வாடிடுவார்
ரையளித்துமிக - உவரியில் கொண்டேகும்
ரை மிக ஆளும் - பக்தியுள்ள சோழ மன்னு
ன்று குடியானவர்கள் - இராஜனிடம் தான் உரைத்தார்
ப்போது அரசனுமே - அணை அடைக்க வேண்டுமென்று
ல்லாச் சிற்றரசர் கட்கும் - ஏற்ற கட்டளையுமிட்டான்
ல்ல புகழ் மன்னன் - வைய காவிரியில் நிற்க
ரு மன்னரைத் தவிர - ஏனைய மன்னனைவரும்
ரிகாலன் கூறியபடி - கட்டளை நிறைவேற்றினர் காண்
ய்யோ பாழாக - அவனி தான் போகுதென்று
மய் நடுங்கிவாய் குளறி - மேதினியோர் நிற்கையிலே
காழன் என்ற மாநீசக் - குலத்தில் வந்துதித்த
ழன் ஒரு பொல்லாதான் - என் சொல்வான் அம்மானை
ன்னவனே இப்பங்கை - மலையெடுத்து வைத்தாலும்
வாது நம்மாலே - இந்தக் கரையடைக்க
ன்று வராத மன்னவரை - அழைத்திங்கே கொண்டு வந்து
ந்த அணையடைக்க - ஏவுமென்றான் அம்மானை
அப்போது சோழன் - அந் நீசக் கலியதினால்
இப்போது மயங்கி - என்ன சொல்வான் மன்னவனும்
ந்திரியே நமது - வாய்த்த படைத்தலைவா
ந்திரியே நீங்கள் சென்று - சமர்த்துள்ள நாடர்களை
தான் அழைத்து வாருமென்று - ஆற்றினனே தார்வேந்தன்
போகிறேன் என்று சொல்லிப் - புறப்பட்டான் தந்திரியும்
உரையது பெற்று - உற்றதொரு தந்திரியும்
ஓடும் குதிரையேறி - ஒரு நொடியில் தான் வாரான்
கோட்டை தனைக்கண்டு - குதுகலத்தோடு நடந்தான்
வீட்டையும் கண்டு - வீர இரு மன்னரிடம்
திருவேலங்காடு மன்னனையும் - திருமண்டங்குடி மன்னனையும்
தந்திரியும் கண்டு - தான் தொழுது ஏது சொல்வான்
பெருவலியோடு விளங்கும் - பேரரசர் கொடுத்த ஓலையிது
ஒப்பமுடன் ஓலை தனை வாங்கி - உள்ளபடி வாசித்தார்
ஓலை கண்ட நாழிகைக்குள் - உடனே வர பேரரசர் உத்தரவு
என்ற வாசகத்தை படித்து - எழுந்தார் இருவருமே
புரவிதனில் ஏறிப் - புகழுடையோரும் வந்து சேர்ந்தார்
உரைத்த மொழிதான் கேட்டு - உடனே வந்தோம் மன்னவரே

விரைச்சலுடன் எங்களது - விண்ணப்பமிதுவெனவே
அந்த மொழிதான் கேட்ட - ஆங்கார மன்னனவன்
மைந்தரையும் பார்த்து - மன்னனவனேது சொல்வான்
அழைத்து வந்த மன்னவரை - அரசன் மிகக் கொண்டாடி
என் வெற்றிக்காகப் போரிட்ட - எந்தன் வலங்கைமானே
இன்னும் ஒருதவி - இப்போது நீர் செய்யவேண்டும்
தாட்டிமையுள்ள திரிலோசனு - தமது குடிகளைக்கூட்டி வந்து
காலதாமதம் செய்யாமல் - காவிரிதனையடையுமென்றார்
தெய்வ முடி மன்னர் - தேச மன்னரோடு ஏதுரைப்பார்
நல்லதன்று மன்னவனே - நமக்கு நீர் இது உரைக்க
இல்லை யந்தவேலை - இதற்கு முன்னர் கேட்டிலையோ
வெட்டாப்படையை - வெற்றி கொண்டோம் உமக்காக
சேர பாண்டியர் தலையிலும் - தெரு விளக்கேற்றினோமானதால்
பட்டாங்கெல்லாம் - பகிர்ந்தளித்தீர் எங்களுக்கு
என்றுமே சொன்னார்கள் - இயல்பான அரசர்களும்
மாயக் கலியானதால் - மன்னவனும் கேளாமல்
நியாயம் ஒன்றும் சொல்லாதீர் - நளின மொழிகள் பேசாதீர்
கூடையினால் மண்ணெடுத்து - கூறிட்டுமது பங்கையடையும்
கேடுள்ள வார்த்தை சொல்வி - கெர்விதங்கள் பேசாதீர்
என்றுரைக்க சான்றோரும் - ஏதுரைப்பார் அம்மானை
நன்று நன்று மன்னவரே - நமக்கு வழக்கமல்லவே
இவ்வேலையொன்றும் - எங்களோடு உரையாதீர்
கூடையினால் மண்ணெடுத்தும் - குற்றேவலை தவிர
குதிரைப் படையுடனே - குவலயம் ஜெயித்துத் தருவோம்
ஆனைப் படையுடனே - அகலம்வென்று தருவோம்
என்று சொல்லக் கேட்ட - ஏற்றமுள்ள கரிகாலன்
கேட்டந்த மன்னன் - கிறுகிறுவென உறுத்து
திட்டினான் திரிலோசனனை - சினந்தான் காண் அம்மானை
அப்போது திரிலோசனன் - அதற்கிசையாமல் நின்றனனே
இப்போது சோழன் - ஏது சொல்வான் அம்மானை
தார் வேந்தன் வேலை சொன்னால் - தட்டுவதோ நீங்களுந்தான்
இதோ பாருமென்று - எழுந்தானே கோபமுடன்
வேலை கொள்ளுமென்று - இட்டானே ஆணையது
தூலமறியாமல் - துள்ளியே சேவகர்கள்
சூழ்ந்து வளைந்து - துரத்திப் பிடிக்க
பிடிக்கடங்காமல் - பின்வாங்கி நடந்தனரே

ன்றோர்களைப் பிடிக்க - தம்மாலே இயலாமல்
வழம்பலவிட்டு - விரட்டிப் பிடித்திடவே
ர்ந்து ஒருவரோடு - சார வகையில்லாமல்
ன்னந்தனியே அவர்களும் - தனித்து நின்றார் அம்மானை
அப்போது சோழனுமே - அவன் ஆளைத்தான் கொண்டு
இருபேர் தங்களையும் - எட்டிப் பிடித்தனன் காண்
ன்றியுடன் நின்றார் - நாடி அவன் பிடிக்க
கூடை எடுவெனவே - கூடாதென உரைத்தார்
யானைதனை விட்டு - அரசன் அந்தச் சோழ மன்னன்
சேனைத்தலைவனிடம் - சிறந்த மன்னர் இருவர்களில்
இலங்குநாதப் பெருமானை - எட்டிப் பிடித்தவனும்
யானைதனை விட்டு - அவன் தலையை இடறுமென்றான்
கொன்றான் ஒருவனையும் - குளக்கரையில் அம்மானை
சேனைத்தலைவராகிச் - சிறந்த மன்னவரானவரில்
பின்னால் ஒருவனையும் - பிடித்துக் கொண்டு வாருமென்றான்
கூடை எடுமென்று - கூறினான் கொடும்பாவி
சிறப்புடன் நாடாண்ட - தெய்வ குலச்சான்றோர்
முன் இறந்த மன்னரிலும் - மோசமோ நானுந்தான்
யானுமிந்தக் கூடை - எடேன் என உரைத்தான்
பின்னுமந்தச் சோழன் - பிடித் தம் மன்னனையும்
இந்நேரம் கொல்லாமல் - இவன் பங்கையடைப்போமானால்
என்னோட குடிகள் - இயல்பாக நகைப்பாரென்று
கொன்றான் காண் காவிரியில் - குஞ்சரத்தை விட்டிடறி
இப்படியாக இவர்கள் - இங்கு இருக்கும் வேளையிலே

காளி தேவி சோழனிடம் வருதல்

கண்டந்தச் செட்டியவன் - காளியிடம் போய் உரைக்க
கேட்டிலையோ தாயே - கேடுகெட்ட சோழ மன்னன்
உன் பிள்ளையென்று பாராமல் - ஊதாரியவன்தானும்
இருவர் தலைகளையும் - இடறிவிட்டான் சோழனவன்
செட்டியவன் சொன்னவுடன் - தேவி பத்திரமாகாளி
உரைத்த மொழி கேட்டு - உடனே அவள் எழுந்திருந்து
வரைத்தடத்தில் வாழும் - வரிவேங்கை போல் சீறி
சீறி எழுந்திருந்து - தீப்போல் விழிசிவந்து
வடவாக்கினிமுகத்தாள் - வெடுவெடனப் பல்கடித்து
பூத கணங்கள் சூழக்காளி - புறப்பட்டுதானும் வந்து

ண்டாள் உடனேமிக - கடுகடுத்துச் சாபமிட்டாள்
என்பிள்ளை இருவர்களை - இடறி நீ கொன்றதினால்
உந்தனது வாழ்வும் - உந்தனது வமிசமும்
செத்துமடிந்து - சீர்கெட்டுப் போகுமென்றாள்
என்று சொல்லிக் காளி - எதிரே நின்ற சோழனையும்
ஆமடா என்மக்கள் - ஆளடிமையோ உந்தனுக்கு
கோபம் பொறுக்காமல் - கொன்றனையோ என் மக்களை
மாமுனி தந்த பிள்ளையென்று - மனதில் சற்றுமெண்ணாமல்
இருவர் தலைகளையும் - இடறி நீ கொன்றதினால்
மண்மாரி கல்மாரி - மாநிலத்தில் பொழியுமடா
இவ்வார்த்தை கேட்டந்த - இயற்சோழன் அச்சமயம்
திடுக்கிட்டு உடல்பதறி - சிந்தைமிகக் கலங்கி
அடுத்து நிற்க பயந்து - அவன் பதிபோய் ஒளிய
ஏகுவோமென்று எண்ணி - ஏறினான் குதிரையின் மேல்
எங்கும் மண்மாரி கல்மாரி - ஏகமாய் தான் பொழிய
அப்போது குதிரை - அரண்டு வெருண்டோடிடவே
குதிரை இடறிவிழவே - கொடியதொரு சோழனவன்
தலைகீழாக விழுந்து - தானுமவன் மடிந்து விட்டான்
கூறுகெட்ட சோழனையும் - குடிகெடுத்து பத்திரகாளி
பாரில் மழை இல்லாமல் - பன்னிரண்டு வருஷம் பஞ்சமாக
இட்டாள் பெருஞ்சாபம் - ஈடழிய சோழர் குலம்.

வான்புகழ் வலங்கைமானையும், வல்லு பெருமாளையும் எண்ணி மாகாளி துயரப்படுதல்.

விருத்தம்

ஏனாதி மக்கள் பெற்ற எழுவரில் இருவர் தன்னைத்
தானான வித்தியாதரன் தன் மக்கள் உங்களையும்
கோனான சோழர் குலக் கரிகாலன் என் மக்கள் தன்னை
யானையை விட்டிடறி அழித்தானே உங்களையும்
சின்னஞ்சிறு வயதில் - செல்வமாய் உங்களைத்தான்
சீராட்டி பாலூட்டி வெகு - செல்வமதாய்தான் வளர்த்தேன்
ஐயோ படுபாவி - யான் அறியாமல் கொன்றானே
என்று பலவிதமாய் - இரங்கி இரங்கியே அழுதாள்
இப்படியாக இவள் - இருக்குமந்த வேளையிலே
கூடப் பிறந்தவர்கள் - கோவேந்த மன்னர்களும்

மக்கள் கிளையுடனே - மகா துன்பந்தானாகி
வந்து விழுந்தழுதார் - வலுவுள்ள சான்றோர்கள்
அந்த துயரமெல்லாம் - அளவு சொல்லக் கூடாது
இப்படியாக இங்கே - இவர்கள் யாபேர்களுந்தான்
இறந்த இருமன்னருக்கும் - ஈமக்கடன் முடித்தார் காண்
மக்கள்தனைப் பார்த்து - மாதாவும் ஏது சொல்வாள்
துயரந்தனை விடுங்கள் - துடுக்குள்ள எந்தன் மக்கள்
என்றுமே மாகாளி - எல்லார்க்கும் புத்தி சொல்லி
எதிரில் நின்ற மக்களை - ஏறிட்டுத்தான் பார்த்து
எந்தன் மக்காள் நீங்களுந்தான் - என்னைத்தான் காணாமல்
இருந்ததென்ன சொல்லுமென்றாள் - ஏந்திழையாள் அப்போது
அப்போது மக்களுமே - அன்னையுட பாதந்தனில்
தாயினுட பாதங்களில் - தான் விழுந்து தெண்டனிட்டார்
வந்து வணங்கும் - மைந்தர்கள் ஐவரையும்
சிந்தையுடன் வாழ்த்தி - சிறப்பாய் அருகணைத்து
கந்தம் நிறைந்த - கருணையே எனது மைந்தா
எந்தனிடம் கேளாமல் - எங்கெல்லாம் போனீர் மக்காள்
கேளாமல் போனதினால் - கேடுகெட்ட சோழனவன்
பொன்னான மக்கள் - புகழுடைய இருவரையும்
கொன்றானே பாவியவன் - குடிகள் அழிந்திடவே
என்று சொல்ல மாகாளி - எதிரில் நின்ற பாலர்களும்
அடிதொழுது தெண்டனிட்டு - அம்மா உந்தனிடம் கேளாமல்
உற்ற சோழன்தான் என்று - உள் கருத்திலிருந்தேனம்மா
உந்தனிடம் கேளாமல் - உயர்ந்த சோழனெனவே
உதவினோம் நாங்களுமே - உத்தமித் தாயாரே
அறியாமல் செய்த பிழை - அம்மா பொறுக்கவேணும்
என்று அடிதொழுது - இருந்தார்கள் ஐவருமே
அன்பு வைத்து மனதிரங்கி - அம்மாவும் ஏது சொல்வாள்
தன்பதிக்குப் போங்களென்று - தாயாரும் விடை கொடுத்தாள்

மகாளி புட்டாபுரம் திரும்புதல்

அருமை மக்கள் போனபின்பு - அம்மாவும் கணங்கள் சூழ
புட்டாபுரம் நோக்கி - புறப்பட்டுத்தானுஞ் சென்றாள்
புட்டாப்புரக் கோட்டையிலே - பூதகணஞ் சூழ்ந்து நிற்க
கட்டாக் காளியம்மா - கமலத்தில் வீற்றிருந்தாள்

பத்திரகாளி சாபம் நிறைவேறுதல்.

பாவி சோழன் பரம்பரையுமே - பாராண்டு வரும் நாளையிலே
பத்திரகாளி சாபத்தால் - பாரில் மழையில்லாமல்
கற்பகமெல்லாம் கரிந்து - கன பசுவும் தானிழந்து
பொன் பவுசும் பாழாகிப் - புகையாய் கரிந்ததுவே
தன்நாடு கெட்டிடவே - தயங்கிய குடிகளெல்லாம்
உண்ண உணவுமின்றி - உடுக்க உடையுமின்றி
தவித்து முகம் வாடித் - தானிருந்தாரம்மானை
இப்படியாக இவர்கள் - இருந்துவரும் நாளையிலே

மாநீசன் மேல் அண்டை நாட்டு மன்னன் படையெடுத்தல்

அண்டை நாட்டுப் பல்லவன் - அத்தருணம் தான் பார்த்து
ஆளும்படை ஆயுதமும் - அஸ்திரமும்தான் எடுத்து
வேழம் பரியும் கொண்டு - வீரமுழக்கத்துடன்
வந்தெதிர்த்தான் அந்த - மாநீசன் என்ற மன்னவனை
மாநீசன் என்ற மன்னவனை - மார்புரளத்தான் வதைத்தாண்ட
அந்நீசன் கொடி வழியும் - அவனரசைத்தான் அழித்து
எல்லோரும் தாமறிய - இவன் தேசம்தானாக்கி
கோட்டையுமிட்டுஅவன் - கொடிவிருதுங்கட்டி
தாட்டிகமாய்த்தானுமுள்ள - சான்றோரான குறுநிலமன்னரால்
பாரில் புகழோங்கப் - பாரதனையாண்டு வந்தான்
சோழனுடன் எதிர்த்து - சூது செய்த மன்னரையும்
வேழமுடி குறுநில மன்னர்கள் - வெற்றி கொண்டு தானிருந்தார்
ஆண்டுக்கொருமுறை - அடியிறை கொடுத்து வந்தார்
ஆண்டுக்கொருமுறை - அடியிறை ஏற்றிருந்தார்
இப்படியாக இவர்கள் - இருந்தரசாளும் நாளையிலே

ஐவர் குறுநில மன்னர்களாய் இருந்த சான்றோர்கள் மரபு.

சோழ நாட்டை ஆண்டு வருதல்

அரும்பாவி சோழனுக்கு - அழிவு வரும் காலமானதினால்
பாராளும் மன்னன் மகன் - படைத் தலைவன் மேல் வைத்த காதலால்.

இராஜராஜன் கி.பி 985 - 1014

தீராத வினையாலே - தேசத்தரசர் அழிந்திடவே
குறுநிலங் கொண்டவர்கள் - கொற்றவராயிருந்தவர்கள்
ஐவர் குறுநில மரபினர் - ஆண்டு வந்தார் சோழ நாட்டை
இராஜாதி ராஜனென்று - நாற்றிசையும் கொண்டாட
மண்டலத்தையாண்டார்கள் - மன்னர் நீதிதவறாமல்
விண்டலத்தோர் கொண்டாட - மேதினியிற்றுனறிந்து
நீதிதவறாமல் - நெறிமுறமை பொய்யாமல்
ஜாதி வரம்பு - தவநிலைகள் சோராமல்
ஆண்டுமே வந்தார்கள் - அநேக காலமதாய்
இப்படியாக - இவர்கள் அரசாளும் நாளையிலே

அறநெறி தவறி அரசாளல்

அரனை நினைத்து - ஆளாமல் அந்நாளில்
நீதி கெட்ட மோச - நீசனைப் போல் தானாகி
ஆண்டுவந்தார் அப்போது - அறநெறிதானில்லாமல்
இப்படியாக இவர்கள் - இருந்தரசாளும் நாளையிலே

அனுராதபுரம் சென்று வட்டகாமினி அரசன் தேவி சோம வதியைச் சிறையெடுத்தல்

ஏழுநல்ல தளபதிகளுடன் - எண்ணிலடங்காச்சேனையுடன்
அனுராதாபுரம் சென்று - அமர் புரிந்துவென்றவர்கள்
வட்டகாமினியரசனுடதேவி - வடிவழகைக் கண்டார்காண்
கண்ணைப் பறித்தெடுக்கும் - காட்சியுள்ள மங்கையைப் போல்
மண்ணில் அழகான - மங்கையைப் பார்த்ததில்லை,
எந்தவிதமும் தூக்கிச் செல்வதென்று - ஏகி துரத்திப் பிடித்துயரசன்
சிந்தை கலங்க - சிறையெடுத்தானம்மானை
சிறையெடுத்த சேயிழையைச் - சிறப்பாக வைத்திருந்தார்
திறை செலுத்தியாண்டார்கள் - திறமையுடன் தளபதிகளுமே
அப்போது அவளும் - ஆண்டவனைத்தான் வேண்டி
புகழுடம்பு பத்தினியும் - புலம்புவாளாம் புருஷனை நினைத்து
வேதனை வரும்போது - விழிநீர் விட்டழுதிடுவாள்
தோழியர்கள் சென்று - துயரப்படாதே என்றுரைப்பார்
அப்போது சோமவதி - அறிவிழந்த தோழியரிடம்
வேறெண்ணம் ஏதுளதோ - வினவ வந்த தோழியென்று
கோபத்தால் அம்மாது - கூறினள் இக்கதையும்

ஒருவருமறியாமல் - ஒருத்தியாய் நின்றென்னைத்
துரத்திப் பிடித்தவனும் - தூக்கியே வந்ததினால்
ஒருவருக்கொருவர் எதிர்த்து - உயரழிந்து போகானோ?
யானைப் படை தோற்று - அவன் அரசிழந்து போகானோ?
என்று சொல்லி மாது - ஏங்கி அழுதுமவள்
புத்தபகவானை வேண்டி - புலம்புவாள் அப்போது
எந்நாதனை விட்டு - என்னைப்பிரித்த குலமழியாதா
அபலை புலம்பிமிக - அழுதுமே சாபமிட்டதினால்
மான்விழியாளிட்ட சாபம் - மாயமாய் சூழுதிங்கே
சூழ்ந்து வந்த சாபம் - தொடர்ந்து பிடித்திடுமாம்
இப்படியாக இவர்கள் - இருந்தரசாளும் நாளையிலே

பாண்டிய மன்னர்களின் ஒற்றுமையின்மையால் முகமதியர் பாண்டிய நாட்டைக் கொள்ளையிடல்.

திரு மாறவர்மன் குலசேகர பாண்டியன் - கிபி 1268 — 1310

மதுரை பாண்டியனுக்கும் - மகிமையுள்ள வீரபாண்டியனுக்கும்
தேசத்து ராஜாவான - தென்காசிப் பாண்டியனுக்கும்
கொற்கை பாண்டியனுக்கும் - கொடும்பகை காரணத்தால்
கொடுமைக்கார மாலிக்காபூர் - கொள்ளையிட்டான் தேசமதை
கொள்ளையிட்டுப் பொருளையெல்லாம் - கொண்டு போனனப்போது
அவனுக்கு இடங்கொடுத்ததினால் - அடுத்து வந்த கெடுதி இங்கே
மக்கத்து துலுக்கரை - மகாபாதகம் செய்த
மதினா ஜலாலுதீனால் - மாந்தை கம்மாளரும்
பக்கத்துப் பள்ளரும் - பதியிழந்து வந்தார்கள்
வந்த பள்ளர்கள் - வாழவிடந் தாருமென்றார்
இந்நாட்டில் அவர்களுக்கே - இருக்க ஒரு புறத்தில்
வீடமைத்து இருப்பீரென்று - வேந்தனுமாதரிக்க
ஆதரித்த மன்னரை - அணுவளவுமெண்ணாமல்
நன்றி மறந்த - நயவஞ்சகப் பள்ளர்களும்
ஒடுக்கமான தெருவில் - ஒழுவாகக் கொள்ளை செய்ய
கொள்ளையிடப்போகும் - கொடும்பாவியானவர்கள்
ஒழுவாக வருகிறதை - உற்ற பறையரவர்
ஒழிமறைவாய்த்தானின்று - ஒரு நொடியில் வெட்டினார்கள்
பறையர்களும் வெட்டப் - பயந்தந்தப் பள்ளர்களும்
அலறிப் பயந்துமே - ஐந்நூறு பள்ளர்களும்
ஓலமிட்டுக் கொண்டு - ஓடினார்களப்போது

மூன்று நாட்டுப் படைகளும் சேர்ந்து முகம்மதியப் படைகளை அழித்தல்

மதுரைப்பாண்டியனும் மைசூர் மன்னரிடம் முறையிட்டு
உதவும்படி வேண்ட - உதவுவதாக வாக்களித்தார்
வீராதிவீரவல்லாள - வேந்தன் துணை வேண்ட
வேந்தன், கம்பன்ன உடையார் மூலம் - வேண்டும் படையனுப்பினார்
மூன்று நாட்டுப் படைகளும் - முகம்மதியப் படைகளை யழித்தன
மன்னர்கள் சேர்ந்து - மகம்மதியனுக் கிடங் கொடாமல்
வாழ்ந்தார்கள் மன்னர்கள் - வந்ததுகெடுதியப்போது

[ஆத்திமுடி சோழன் அரசாளப் பிள்ளையில்லாமல் வருந்துதல்]

ஆத்திமுடி சோழனுக்கு - அருமை மைந்தனில்லாமல்
மெத்த மனமுடைந்து - மேதினியில் வாடுகிறார்
சத்தியம் தவறாமல் - தனக்குப்பின் ஆண்டுவர
புத்திரரில்லாச் சோகத்தால் - புவியில் மனம் வாடி மன்னர்
மந்திரிமார்களிடம் - மனம் நொந்தேது சொல்வார்
நமக்குப்பின் நம் நாட்டை - நடத்தியரசாண்டிடவே
நன்மதலையில்லையேயென்று - நவின்றார் மன்னவரும்
நவின்ற மன்னவர்க்கு - நன்மந்திரிகளே துரைப்பார்
சத்தியம் தவறாமல் - தங்கள் தரணியை யாள்வதற்கு
தங்களுட காதலியின் - தாட்டீக மைந்தனைத்தான்
தரணியை யாள்வதற்கு - தகுந்த முறை செய்திடுவோம்
என்றே மந்திரியுரைக்க - ஏது சொல்வான் மன்னவனும்
மனக்கலக்கம் தீர்க்கும் - மதியுள்ள மந்திரியே
அப்படியே செய்து வைக்க - ஆவன செய்திடுவீர்
அச்சேதிதானறிந்த - அரசர்களுமந்நேரம்
தன்னுடன் குடும்பத் - தம்பியெனப் பிறந்த
மன்னன் ஆத்திமுடி தனக்கு - வகையாயுரைக் கலுற்றார்
கூத்தியாள்பிள்ளை - கொள்ளிக்குதவாது
கூத்தியாள்பிள்ளையென்ற - குறை சொல் தீராதொரு நாளும்
பாரிலவனுக்கு முடி சூட்டினால் - பட்டமும் போயகலும்
பாதகப் பிள்ளையவனால் - பாரினிற் பொல்லாத்துக்கம்
உந்தனது நாடாள - உந்தனுக்குப் பிள்ளை வேண்டுமாகில்
பொங்கவரம் பூணுகின்ற - புண்ணியரைத் தானோக்கிப்
பாலன் வேண்டுமென்று - பண்பாய்த் தவசிருந்தால்
ஆலமுண்ட அரனும் - அப்போ பாலனுந்தானீவார்

மந்தாரை பிச்சி - மருக்கொழுந்து இருவாச்சி தூக்கிடுவார்
கொன்றை நல்ல மாந்தளிருங் - குருகத்திப் பூவுந் தூக்கிடுவார்
பட்டுரோஜா மலரும் - பலபல பூ மாலைகளும் தூக்கிடுவார்
வாழைகள் நாட்டிடுவார் - வண்ணத் தோரணங்கள் கட்டிடுவார்
சந்திரக் காந்தக் கடைய மணிகள் - சரஞ்சரமாய் தூக்கிடுவார்
சல்லிசாமரங்கள் - சகலாத்து வெடிவரியான்
மல்லிகைப் புனுகுடனும் - மண மிகுந்த பன்னீருடனும்
வாசனை திரவியங்கள் - மண்டபமெல்லாந் தூவினுர்கள்
எல்லைக்கிரண்டொரு - எழில் விளக்குத் தூக்கிடுவார்
இந்திரனிருக்கும் - எழில் மண்டபம் போலவேதான்
அழகுடனே சோடித்தார்கள் - அழகாக மண்டபத்தை.

மகுடாபிஷேகம் செய்ய மைந்தனைக் கூட்டி வருதல்

ஏக மேளம் முழங்கிவர - எக்காளமூதிவர
பேரிகை கொட்டிவர - பெருங்கூட்டம் திரண்டுவர
மகுடாபிஷேகம் செய்ய - மைந்தனைக் கூட்டி வந்தார்
மைந்தனையும் கூட்டி வந்து - மஞ்சன நீராட்டினுர்
இராஜனுடைய மைந்தனுக்கு - நற்சடங்குகள் செய்யவேதான்
போகுமந்த வேளையிலே - போர் மன்னர் ராஜாக்கள்

நான்கு மன்னர் படையெடுத்து வந்து அத்திமுடி நாட்டை அபகரித்தல்

நாலுபேர் மன்னர்களும் - நாற்படை யுடனே தாங்களும்
வந்துமே போர் செய்து - வெற்றி பெற்றுர் அம்மானை
நிரந்தரமாயுலகிற்கு - நெடும்பழி பூண்டிட்ட
அத்திமுடியை அடக்கி - அவன் நாட்டை அபகரித்தார்
அத்திமுடிதனக்கு - ஆதரவாய் வந்ததொரு
சந்திரகுலத்துதித்த - சந்திரசேகர பாண்டியனையும் ?
அவனுண்ட நாட்டையும் - ஆக்கிரமத்துக் கொண்டார்கள்
ஆண்டுமே வந்தார்கள் - அங்குள்ள சோழர்கள்தான்

அத்திமுடி சோழனுக்கு அமைச்சர் ஆலோசனை கூறுதல்

இப்படியாக - இவராண்டுவரும் நாளையிலே
அரசையிழந்த - அத்திமுடி சோழனுமே
வேசியுட பிள்ளையின்மேல் - வீணுன பாசமதாய்

கிருஷ்ணதேவராயர் (கி.பி. 1509 - 1529)

மன்னன் மதிமயங்க - மந்திரியுமேதுரைப்பான்
மன்னு புவியாளும் - மன்னவனே சொல்லுகிறேன்
மன்னவன் அத்திமுடியும் - மந்திரி முகந்தான் நோக்க
உற்ற விவரமெல்லாம் - உரைக்கலுற்றுரம்மானை
முன்சொன்னசபதப்படி - முடிசூடியாக வேண்டும் நாம்
மாநிலத்தில் மன்னவர்க்கு - மானத்தைவிட பெரிது எதென
வீராதிவீரன் - விஜயநகரவேந்தன் துணைகொண்டு
நம் நாட்டை மீட்டி - நலமுடனே யாண்டிடலாம்
நாட்டையும் மீட்காவிட்டால் - நம் புகழ் மங்கிவிடும்
என்றுமே சொல்லி - எடுத்துரைச்சா ரமைச்சரும்
அறிவுரையில் ஈடுபட்டு - அரசனும் தெளிவுற்று
அப்படியேயாகட்டும் - அறிவுள்ள மந்திரியே
அங்குமே போவதற்கு - அதற்கான வேற்பாடு செய்யுமெனவே
அதற்கான ஏற்பாடு - அரசரே செய்துவிட்டோம்

விஜயநகர அரசரிடம் போவதற்கு முன்பாகத் தான் வரும் செய்தியை தூதுவனிடஞ் சொல்லியனுப்புதல்

அப்போது ராஜன் - அமைச்சரைத் தானோக்கி
விஜயநகர் வீரன் - வேந்தன் கிருஷ்ணதேவராயனுக்கு
நாம் வரும் செய்திதன்னை - நாட்டமுடனேயறிவிக்க
தூதுவனைத் தானழைத்துத் - துரிதமுடன் போகச் சொல்லும்
என்று சொல்லவே மன்னன் - இயல்பாக அமைச்சரும்
தூதுவனைத் தானழைத்துத் - துரிதமுடன் போகவிட்டார்
புறப்பட்டான் மன்னன் - புகழ் பெரிய மந்திரிகளுடன்
ஏங்கி முகம்வாடி - எல்லோரும் வழிநடந்தார்
தளர்ந்து நடந்திடுவார் - தானே விசாரமுடன்

வந்த தூதுவன் விஜயநகரவரசனிடம் சொல்லுதல்

இப்படியாக - இவர் நடக்கும் வேளையிலே
விஜயநகர ராஜனிடம் - விரைவாக வந்தான் தூதனுமே
வந்ததொரு தூதுவனை - வகையேதெனக் கேட்க
வந்த விபரமெல்லாம் - வகைவகையாய்ச் சொல்லியபின்
கேட்ட கிருஷ்ணதேவராயருக்கு - கிலேசம் மிக உண்டாகி
நம் நாட்டுக்கு வருகின்றவர்களை - நாழிகையிலிங்கேதான்
கூட்டிவர வேணுமென்று - கொற்றவரும் தானுரைத்தார்

ஆத்திமுடி சோழனை வாத்தியங்கள் முழங்க மரியாதை யாகச் சிவிகையில் அழைத்து வருதல்

சென்று சிவிகையின்மேல் - சென்றழைத்து வாருமென்றார்
போவோம் நாமென்று - புறப்பட்டார் புடைசூழ
வெற்றி முரசுடனே - வீரமுழக்கமிட்டும்
தாண்டை மல்லாரியும் - தடக்கை கிடுபிடியும்
திருகை புல்லாங்குழலும் - தாளமும் யாழிசையும்
எக்காள துந்துமியும் - எங்குமதிரும் மக்காடிகையுடனே
கொம்புடனே பேரிகையுங் - கொட்டு பம்மை மேளங்களும்
ஒக்கவேதான் முழங்க - ஊரெல்லா மதிர்ந்திடவே
வாணமும் வேடிக்கையுடன் - வலுமத்தாப்புகளும்
தட்டிக்கொட்டும் பேரிகை - தம்பட்டமும் தவுலும்
பம்மைகளுடன் சங்கு - பலவாத்தியங்கள் தான் முழங்க
சிங்கியுடன் தாளங்களும் - ஜெகமெங்கும் முழங்கிவர
சல்லிகையுடனே வீணை - சின்னக் குழலூதிவர
இளங்கொங்கை மங்கையர்கள் - இருபக்கம் சேவிக்கவே
வாணுதிவானவரும் - வந்து மங்களங்கள் பாடிடவே
கட்டியக்காரர்களும் - கட்டியங்கள் கூறிவர
பாடகருமாடகரும் - பாடியாடி வரவே
எதிர்கொண்டு கண்டார்கள் - ஏற்றமுள்ள ஆத்திமுடி சோழனைத்தான்
சென்றழைத்து வந்தார்கள் - சீரான அரண்மனைக்கு
இட்டதொரு சிம்மாசனத்தில் - ஏறியவன் வீற்றிருந்தான்

மன்னருட மந்திரிமார்கள் பலருக்கும் விருந்தளித்தல்

வந்த பலபேர்களுக்கும் - மன்னருட மந்திரிமார்
சிந்தையுடனே விருந்து - செய்தார் சந்தோஷமதாய்
இப்படியே நன்றாய் - இவர்களனைவரும் தான்
போஜனங்கள் தான் முடித்து - புகழாக வந்தமர்ந்தார்
தாம்பூலந்தான் தரித்து - சந்தோஷமாய்த்தானிருக்கும் வேளையிலே

(வந்தகாரியத்தைப் பற்றிக் கூறுதல்)

வந்த காரியத்தைத் - தனித்துமே சொல்கின்றார்
பங்கும் பகையாளி - பாத்தியமுள்ள தாயாதி
இன்றும் பகையாளி - இருக்கிறான் சத்ராதி

எந்தன் மகனுக்கு முடிசூடும் - ஏற்றதொரு நன்னாளில்
காட்டாசை பிடித்த - நாலு பேர் மன்னர்களில்
வீரசேகர சோழனவன் - விபரீத முண்டாக்கியே
பெரும் படையுடன் வந்து - பெரும் போர் புரிந்திடவே
அதற்காற்றாமலிழந்தேன் - அங்குள்ள யென் நாடததனை
அந்நாட்டை மீட்க வென்று - அடைந்தேன் யானுங்களிடம்
அங்கிருந்து நானும் - ஆர்வமுடனிங்கு வந்தேன்.
என்னாட்டை மீட்டி - யென் மகனுக்கும் பட்டஞ்சூட்டி
நீர் வைப்பீரென்ற - நிச்சயித்திங்கு வந்தேன்
இங்கு வந்த திதுவென்று - எடுத்துரைத்தான் ஆத்திமுடி
அவ்வரசனிதைகேட்டு - அத்தருணமேது சொல்வான்
மனதுக்கிசைந்தபடி - மன்னவனே செய்கின்றேன்
அரசிழந்தோ மென்று நீர் - அஞ்சவேண்டாம் பதறவேண்டாம்
சிந்தை கலங்கவேண்டாம் - தேசத்தை மீட்டிடலாம்
சுத்த வீரனில்லையானாலும் - தூதனுப்பிக் கேட்கவேண்டும்
என்றுரைத்து மன்னன் - இன்னமு மேதுசொல்வான்
ஆத்திமுடி சோழாவுன் - அரசுரிமை வந்ததானால்
முத்திரைப் பொன்திறை - முறைமையுடன் நீ தருவாயானால்
தேசத்தை மீட்டி - செங்கோல் செலுத்த வைப்பேன்
அந்தமொழி கேட்டு - ஆத்திமுடி மன்னவனும்
முத்திரைப் பொன்திறை - முறைமையுடன் நான் தருவேன்
அவ்வார்த்தை கேட்டு - அவ்விஜயநகர் வேந்தன்
பெருமகிழ் வெய்தினான் - பெருமிதம் கொண்டவன்

[தூதுவன் சுருளோலை கொண்டு சோழநாடு செல்லல்]

தூதுவனைத் தானழைத்து - சுருளோலை தானெழுதி
ஓலை தனைக் கொடுக்க - ஒருநொடியில் தூதுவனும்
சோழநாடு சென்று - சொல்லுவான் தூதுவன்
செம்பொன் மணிவாயில் - திறமுடன் காப்போனிடம்
விஜயநகரிலிருந்து - விரைந்திங்கு வந்தேன் யான்
இந்நாட்டு மன்னனிடம் - இவ்வோலை கொடுக்கவேதான்
வார்த்தைகளைக் கேட்டவுடன் - வாயில் தனைத் திறந்து விட்டான்
கீர்த்தியுள்ள மன்னன் - கிலேசமில்லாதிருந்தான்
மகிமையுள்ள மன்னவனும் - மணிமண்டபத்தில் தானிருக்க
ஏற்றி நின்ற மந்திரிமார் - இருபுறமும் சூழ்ந்திருக்க
வீற்றிருக்கும் நேரத்தில் - விரைந்தங்கே செல்வானும்

கொண்டு வந்த ஓலைதனை - கும்பிட்டவன் கொடுக்க
கண்டு நின்று வாங்கியவன் - கருத்தாய் வாசித்துரைப்பான்

[சுருளோலையில் கண்ட செய்தி]

ஆத்திமுடி மன்னன் - அருமையுள்ளமைந்தனுக்கு
முடிசூடும் வைபத்தில் - முரண்பாடு செய்யக்கூடாது
ஆத்திமுடி சோழனைப்போல் - அங்குள்ள மன்னர்களும்
முத்திரைப் பொன்திறை - முறமையுடன் தரவேண்டும்
கீர்த்தியுள்ள வேந்தர் - கிருஷ்ணதேவராய ரதாணை
இப்படிக்கு வாசகமும் - இருந்த தந்த வோலை தன்னில்

[மண்டங்கு ராஜா கூறிய மறுமொழி]

அவ்வோலை வாசிக்கவே - அவ்வரசன் தான் கேட்டு
ஆசையுள்ளான் திரை வாங்க - அவ்விஜயநகர் வேந்தன்
மீசையுள்ள ஆண் சிங்கமானால் - மீட்டிக் கொடுக்க வரச்சொல்
அச்சமதில்லாமல் - அடமாயிது விரைந்தான்
திரு கிருஷ்ண தேவராயருக்கு - திரை கொடுத்தாளனுமாம்
அப்படியென்றால் எனக்கும் - அரசனென்ற பட்டமெதற்கு
சுருளோலை அனுப்பின அரசனை - சுருக்காய் வரச்சொல்லிவிடு
மண்டக்கு ராஜா தன்பலமும் - மன்னர் நாயக்கர் தன்பலமும்
சண்டையிட்டுப் பார்த்தால் - தான் தெரியுந் தூதுவனே
என்று மண்டக்கு ராஜரும் - இதுவுரைக்கத் தூதனுமே

[தூதுவன் மற்ற மன்னர்கள் மூவரிடமும் சென்று கூறுதல்]

நன்று நன்றென்று - நடந்தானே தூதுவனும்
மறைந்த மன்னர்கள் - மூவரிடமும் சென்றேகி
வந்த விவரமெல்லாம் - வகையுடனே தானுரைப்பான்
அந்தவுரை கேட்டு - அரசர்கள் மூவருமே
மண்டக்கரசர் சொன்ன - மாற்றம் போலுரைத்தார்கள்

[தூதுவன் சோழநாட்டைவிட்டு திரும்பி விஜயநகர் வருதல்]

சோழநாடதனைவிட்டுத் - தூதுவனுஞ் சென்றேகி
விரைவுடனே தூதுவனும் - விஜயநகர் தான் வந்தான்
பார்த்த கிருஷ்ண தேவராயர் - பார் மன்னரேது சொல்வார்

போனீரே தூதுவரே - புதுமையென்ன கூறுமென்றார்
வேந்தனைத்தாள் வணங்கி - விவரமுடனேது சொல்வான்
அரசர்கள் சொன்னதொரு - ஆண்மை மிகுவுரைகளெல்லாம்
உள்ளதுள்ளபடியே வார்த்தை - உரைத்தனன் காணம்மா
அவ்வார்த்தை கேட்ட - அவ்விஜயநகர் வேந்தன்
கோபித்துக் கண் சிவந்து - கொக்கரித்தேது சொல்வான்

[விஜயநகர் வேந்தன் நாகம நாயக்கனை நோ
படையுடன் சோழநாடு சென்று நாட்டாசை
பிடித்த மன்னர் நாலு பேரையும் அடக்கித் தி
பெற்று வருமாறு ஆணையிடுதல்]

நாட்டுக்குப் படைத்தலைவன் - நாகம நாயக்கனைத் தான் நோ
நாட்டாசை பிடித்த மன்னர் - நாலு பேரையுமடக்கி
ஆத்திமுடி சோழன் - அருமையுள்ள மைந்தனுக்கு
முடிசூட்டிவைத்து நீ - முத்திரைப் பொன்திறை வாங்கு
முத்திரைப் பொன்திறைக்கு - முறண்பாடு செய்த மன்னவ
அந்நாட்டைவிட்டு - அவர்களை வெளியேற்றி விடுவாய்
விடைபெற்றேனென்று - விரைவாக எழுந்திருந்து
பொல்லா துஷ்டர்களைப் - போயடக்கி வாரேன் காண்
என்றுமேயவனும் - இசைந்து வெளியில் வந்து
போர்முரசு தானடித்துப் - போர் வீரரெல்லாம் வருகவெனவே
அட்டதிக்குமதிர - அடித்தானே முரசையும்
எட்டு திக்குமறிய - எங்கும் பறை யறைந்தான்
பறையோசை கேட்டவுடன் - பாரிலுள்ள படைகளெல்லாம்
போர்க்குரிய போர்க்கவசம் - போர்த்துமே வாரார் காண்
வில்லைக் கரத்திலேந்திவாரான் - விஜயநகர் நாகமனும்
நாட்டிலுள்ள படைகளெல்லாம் - நாகமனைத்தான் நோக்கி
அலைகடலையொப்ப - ஆரவாரித்து வந்தனர் காணம்மானை
நாலுவர்க்கச் சேனைகளும் - நற்படையோர் தாங்களுமே
மாவணியும் கரியணியும் - மற்றுமுள்ள சேனைகளும்
வந்ததுமே படைகள் - வணங்கி நின்றாரம்மானை
பயணம் பயணமென்று - பயண பேரிகை தானடித்தார்
இப்போ பயணமென்று - இயல்பாகத் தானடித்தார்
சேனை தளமுடனே - சென்றார்கள் சோழநாடு தன் நோக்கி
ஊர் பல கடந்து - உற்றவனந்தான் கடந்து
நால்வகைச் சேனையுடன் நடந்தார்கள் வெகுதூரம்

நாகமநாயக்கன் படைகள் சோழநாடு வந்து சேர்தல்

சோழநாட்டில் வந்து - சேர்ந்தார்களப்போது
சேனை வருகிறதைக் கண்டு - சென்றுமே சொன்னார்கள்
கண்டவர்களோடி - கனபுகழ் சோழனிடம்
மண்டங்கு நாடாளும் - மன்னவரே கேட்டருளும்
திடமாக நீராளுஞ் - சீமையிலே வேற்றரசர்
படையுடன் வந்திறங்கி - பாளையங்களிட்டார்கள்
ஐயையோ இராஜ மன்னா - யாரோ தெரியாது
வாரபடைகளென்றால் - வகுத்துரைக்கக் கூடாது
கொடிகள் பறக்கிறதைக் - கொற்றவரே சொல்லுகின்றேன்
ஆகாயந்தனை மறைந்து - ஆடுது கொடிகளெல்லாம்
கரிகளும் பரிகளும் - காலாட் படைகளுமே
தீரர்களும் வருகிறதைச் - செப்ப முடியாது
இவைகளெல்லாஞ் சேர்ந்து - வருகிறதை எடுத்துரைக்கவேலாது
குதிரைகள் கனைக்குஞ் சப்தங் - குலைகள் நடுங்குதையா
யானைகள் பிளிறு மோசை - அண்டங்கலங்குதையா
வருகிறதே படைகளெல்லாம் - மண்ணும்விண்ணுங்கொள்ளாமல்
இச்செய்தி தான் கேட்டு - இவ்வரசன் திடுக்கிடவில்லை
எதிர் பார்த்தது தான் - எதுவரினும் தான் வருக
எந்தன் தளபதி செண்பகனே - இயலான ரத்தினமே
நாட்டை மீட்க வந்த - நாச கால ஆத்தி முடியவனை
பிடித்த பிடியோடே - பின் கட்டாய்க் கட்டி வாராய்
யானை சேனை பரிவாரம் - அடங்கலுங் கொன்றழித்து
கைப்பிடியாய் பிடித்தவனையென் - கண்ணெதிரே கொண்டு வாராய்
இல்லாதேயாமானால் - என்னெதிரே வந்து நில்லாதே
என்றுமே வுத்திர விட்டான் - இயலான திருலோசனுமே
என்றந்த வுரை கேட்டு - எழுந்தானே செண்பகனும்
தெண்டனிட்டு விடைபெற்று - சிறந்தொரு செண்பகனும்
சேனை தளமுடனே - சென்றானே யப்போது
எதிராகப் போனவுடன் - இரு தரத்துப் படைகளெல்லாம்
இரண்டுஞ் சேர்ந் தெதிர்த்திடவே - இரணகள மானதிலே
எங்கும் தூசிகள் - ஏகமாய்க் கிளம்பிவிடவே
தூசிகள் தான் கிளம்பிச் - சூரியனைப் போய் மறைக்க
இரு தரத்துப் படைகளும் - இணைபிரியாச் சண்டை செய்ய
படைத் தளபதி செண்பகனும் - பட்டு மடிந்திடவே

ண்பகன் படையது தான் - சின்னாபின்னமானதுவே
ண்டந்தப் படையிலொருவன் - கருத்துடனே யேது சொல்வான்
ாதுவனைத் தானழைத்துத் - துரிதமுடன் சென்றேகிப்
டைத் தளபதி செண்பகன் - பட்டழிந்த செய்தி தனைக் கூறி
ம் படைகளை விடவும் - நாயக்கர் படை வலுவுள்ளது
ங்குள்ள படை கொண்டு - இனி வெற்றி காண முடியாதென்று

நாகமன் படையும் தளபதி செண்பகன் படையும் போரிடும் போது செண்பகன் பட்டு மடிதலைத் ாதுவன் மூலம் மண்டக்கு ராஜருக்குத் தெரிவித்தல்

அரசனிடஞ் சொல்லி - அங்குள்ள படைகளத்தனையும்
திதி விரைவில் நீ சென்று - அனுப்பச் சொல்லென்றுரைத்தான்
அந்த வுரை கேட்டு - ஆனதொரு தூதுவனும்
பார்க் குதிரை மீதேறி - புறப்பட்டானப் போது
போகுதே யந்திரமாய்ப் - பொல்லாத பேய்க் குதிரை
ாற்றாய்ப் பறந்தவனும் - கடுகியே வந்து சேர்ந்தான்
அந்த நல்ல தூதுவனும் - அரசரிட மேதுரைப்பான்
ம் தளபதியை - நாகமன் படை கொன்றதுவே
யானைகளும் குதிரைகளும் - அலறிக் கலங்கிடவே
னங்கள் மடிகிறது - செங்குருதியோடுகிறதே
ண்ட துண்டமாகிறதே - கடுஞ்சேனையத்தனையும்
ாண்ணெண்ணாச் சேனைகள் - ஏங்கி மடியுதையா
பார்க்க முடியுதில்லை - பாவியவன் கொல்லுவதை
ாயக்கன் படை - நம்மை நசுக்கிப் பிழியுதையா
ாவாலுரைக்க முடியாது - நாயக்கர் கொல்லுகிறதை
இந்த மொழி கேட்டு - எழுந்தாரரசருமே
தன் தன் படைகளுமே - தளபதி புதல்வர் முதல்
வம்பிலிறந்தாச்சே - வாழ்வதேனென்று
எல்லாரிறந்திடிலும் - எண்ணமில்லை யென்றிடலாம்
வெல்லவாருமில்லா - வீரதளபதி மாண்டதினால்
இருப்பதோ பூவுலகில் - இறப்பது நன்றெனவே
விருப்பமுள்ள தளபதியை - வெட்டிக் கொன்ற நாகமனை
இன்று கொல்ல வேண்டுமென்று - எழுந்தாரரசருமே

தளபதி செண்பகன் கொல்லப்பட்டான் என்பதைக் கேட்ட மண்டக்கரசர் மற்ற துணை மன்னர்களுடன் சேர்ந்து நாகம்மன்மேல் போருக்குப் புறப்படுதல்

சோழவள நாட்டிலுள்ள - துய்யதுரை மன்னருக்கும்
ஆளோலை சீட்டனுப்பி - அனைவரையும் வரவழைத்தார்
வந்துமே சேர்ந்தார்கள் - வலுவுள்ள மன்னர்களும்
ஆலகால விஷம்போல் - அரசருக்குக் கோபமெழ
ஆரடா சேவகனே - அறிவுள்ள மந்திரியே
ஆட்சியிலடங்குவோன் - அரசர் குலத்துள்ளோனல்லன்
அரசர் தன்மையற்றிடுவோன் - ஆண்மையற்ற பேடியவன்
படைமுகத்து இறந்து - பாதம் பெற விரும்பாதான்
கடைபடு மாக்களென் - கண்முன்னே நில்லாதீர்
யானை சேனை பரிவாரம் - அடங்கலும் பயணமென்றார்
படைகளுக்கு நல்ல - படைக்கலம் பயிற்றும்
செம்பரப் பணிக்கரும் - சீக்கிரம் பயணமென்றார்
காலாளும் சேவகரும் - கடுகப் பயணமென்றார்
சேனை கொண்டு வாருமென்றார் - சீக்கிரமாய்ப் போகவென்று
சொன்ன பொழுதிலே - துரிதமாய் மந்திரிகள்
படைகள் வருகவெனவே - பறையறையச் சொன்னார் காண்
அந்தவுரை கேட்டு - ஆனதொரு படைகளெல்லாம்
தம்பட்டம் தவுல் முரசு - துந்துபியுந்தான் முழங்க
கொட்டிடும் பேரி…புங் - கொட்டி மத்தளங்களுடன்
எங்கும் முழங்கிடவே - எல்லாப் படைகளும்
பாயும் கரிபரியும் - பல சேனையுடன் கூடிவர
எங்குமே பாய்ந்து - ஏற்றமுடன் தான் வரவே
சுவறுங் கடல்போல் - தூசியெங்கும் பறந்திடவே
சேனை தளகர்த்தர்களும் - சிறந்த யானை மாவுத்தர்களும்
யானையின் மேலம்பாரி - அவர்கள் வைத்து தான் வரவே
ஒட்டமாகப் படைகள்கூடி - ஒன்றாகச் சேர்ந்து வரவே
ஒன்றுபோல் படைகளெல்லாம் - ஒருமிக்க கூடிவர
புறப்பட்டுத் தான்வாரான் - போர் வேந்தன் புலிக் கொடியோன்
கோட்டைவாசல் தனைக்கடந்து - கோமானுஞ் செல்லும் போது
கரையுடைத்து வெள்ளம் கரைபுரண்டு போவதைப் போல்
எங்கும் படைகள் - ஏகமாய்ப் பறந்திடவே

நாலுதிக்கிலும் நிற்க - நாட்டிலிடங்கொள்ளாமல்
இருவர் படைகளுமே - எதிர்த்துப்போர் செய்திடவே
இரண்டும் கலந்து வெட்டி - இரத்த வாறோடிடவே
ஓடுமிரத்தவாற்றிலே - உருண்டோடு தேமுண்டங்கள் தான்
காளிகளும் கூளிகளும் - கனத்த பேய்ப் படைகளுமே
பிணங்களைத்தின்று - பெருங்கடல் போல் தானிரைந்து
குதித்து விளையாடி - கும்மாளமிட்டுத்தான் திரியும்
குதிரையோடு குதிரைகளும் - கூடிப்பொருதனவே
யானையோடு யானைகளும் - அதிரப் பொருதனவே
காலாட்படையோடு காலாட்களும் - கலந்து போரிட்டனவே
எல்லாப் படைகளுமே எதிர்த்துப் போர் செய்தனவே
பொங்குங்கடலிரைந்தது - போலவே யிருந்தனவே
தாண்டவன் முப்புரமெரித்த - தன்மையது போலவேதான்
மூண்டதே சண்டைகள் - மூவேழு நாள் வரைக்கும்
இவ்விதமாகச் சண்டைகள் - எங்கும் நடக்கையிலே

போரிடும் பொழுது எதிரியின் அம்பு பட்டு மண்டங்காட்டரசர் வீரசுவர்க்கம் அடைந்ததை அவரது மனைவியும் மகனும் அறிந்து மிகவும் வருந்திப் புலம்பல்

எய்துவிட்ட அம்பு - நெஞ்சுறப்பட்ட பொழுதே
குற்றெனவே விழுந்தான் - குரலிட்டுத் திரிலோசன ராஜருமே
மன்னரிறந்த செய்தி - மகனுமே தானறிந்து
மக்கள் மனைவியைவிட - மானம் பெரிதெனவே
போருக்குப் போயிறந்து - போனீரோ விண்ணுலகம்
என்றுமைந்தன் சொல்லி - இயம்பியழுகிறதைச்
சொல்லத் தொலையாது - சொல்லியழுதாலுந்தீராது
கணவனிறந்த செய்திதனைக் - கற்பரசி தான்கேட்டு
கலங்கி யழுதாளே கடலிரையும் பாவனை போல்
விழுந்தவளழுதாள் - வேந்தன் மகனைப் பார்த்து
மைந்தனைப் பார்த்து - மாதாவு மேது சொல்வாள்
அம்மாவுந்தானோக்கி - ஆண்மையுள்ள வென்மகனே
அரசரிற் பிறந்து நீ - அரசர் குலத்திலே வளர்ந்து
அரசுமுடி புனைந்து - அரசாளுமாண் மகனல்லவோ?
அழுது புலம்பாதே - ஆண்மையுள்ள வென்மகனே
எதிரிதனைக் கொல்ல - ஏற்றவழி செய்யுமென்றாள்
அப்போது மன்னன் மகன் - அவனும் தன் துயரை விட்டு
விழுந்த மன்னன் மகன் - வீரசிங்கம் போலெழுந்து

காத்திருந்த மந்திரியையும் - காவலர் தங்களையும்
பார்த்திருத்து சொல்வான் - பார்வேந்தர் தன் மகனும்
விஜய நகர் படையுடன் - வெஞ்சமர் செய்து
வெட்டிகெலித்து - வீரபட்டம் பெற்று நான்
திரும்புவேனென்ற - திடங்கொண்ட தீரனுக்கு
மானமும் நாணமுந்தூண்ட - மன்னர் மகன் தானும்

[மன்னர் மகன் பறையறையபவனையழைத்து எல்லா
ஜாதியாரும் போருக்கு உதவி செய்யுமாறு கட்டளை யிடுதல்]

பக்கத்தில் நிற்கின்ற - பரிசனரைத்தானோக்கி
யாரடா தூதுவனே - அழையடா பறை யறைபவனை
ஓடியழைத்தவனை - ஒரு நொடியிற் கூட்டிவாராய்
கொற்றவனுரை கேட்டு - கூட்டி வந்தான் தூதுவனும்
வந்த தொகு பறையறைபவனும் - வாய்புதைத்துக் கைகூப்பி
என்னையழைத்த வகை - யேது கருமமென்றான்
எல்லா ஜாதியுமிப்போ - ஏற்ற போர்க்குதவி செய்ய
வேணுமென்று நம் நாட்டு - வேந்தரழைக்கிறாரெனவே
முரசறைந்து வாருமென்றார் - முடி மன்னர் ராஜாவும்
பறையறைவோனந் நேரம் - பாரிலுள்ளோர்க்கெத்துரைப்பான்
வேற்று நாட்டு மன்னர் - விஜய நகரப் படைகள் வந்து
நம் மன்னர் படைகளுடன் - நடத்துகின்றார் வீரப்போர்
எல்லா ஜாதியுமிப்போ - ஏற்ற போர்க்குதவிசெய்ய
வேணுமென்று நம் நாட்டு - வேந்தருமழைக்கின்றார்
அச்செய்தி கேட்டு - அங்குள்ளோரேது சொல்வார்
திக்கெட்டும் புகழ் பெற்ற - திசைவென்றார்கள் குலத்தில்
ஏன் பிறந்தாளுத்தி முடி - என்றுமே சிலருரைக்க
அவ்வார்த்தை தான் கேட்டு - அதிற் சிலரே துரைப் பார்
மன்னர் செய்யுந் தீங்கை - மனம் விட்டு சொல்லொண்ணாது
என்று சொன்ன யாவருமே - எழுந்தார்களெக்காளமுடன்
படைகளையுற்சாகப்படுத்திப் - பாடிவாரார் யுத்த கீதம்
ஆறிலுஞ்சாவு நூறிலுஞ் சாவு - ஆண்மை முடிவை அகத்தினின்
மேவு
ஏறென வாள் கொண்டு தாவு - எட்டிக் கயவர் தம் நெஞ்சினிலேவும்
பொழுது புலர்ந்தது - பொய்ம்மை தகர்ந்தது
பூத்தது தெய்வீகத்தாமரை - பூரித்தெழுந்த போர் வீரர்
ஜெய லட்சுமியருளால் - ஜெயம் நம் மன்னவர்க்கே
என்று சொல்லி யெல்லோரும் - ஏகமாய்ப் புறப்பட்டார்கள்

புறப்பட்டாரெல்லோரும் - புலிக் கொடியோன் கட்டளைப்படியே
ஓட்டமாகப் படைகள் - ஒன்று கூடித்தான் வரவே
சேனாதிபதிகள் திக்கெங்குஞ் - சூழ்ந்து நின்றிடவே
கண்டுமே மன்னன் மகன் - கனசந்தோ முண்டாகி
தளபதி சேனையுடன் - தான் போக யெத்தனித்தான்

மன்னர் மகன் கட்டளைப்படியே படைகள் ஒன்று சேர
அச்சேனையுடன் தான் போக எத்தனிக்கும் வேளையில்
மந்திரி தடுத்துரைக்கிறார் உடனே மந்திரா லோசனை சபை
கூடுகிறது.

மன்னன் மனக்குறிப்பை - மந்திரியுந் தானறிந்து.
ஏதுசொல்வானத் தருணம் - ஏற்றபுகழ் மன்னனுக்கு
மன்னரின் திருமகனே - மகிமையுள்ள இளவரசே
என் வார்த்தை கொஞ்சம் - இளவரசே நீர் கேட்க வேணும்
மன்னரே சபை கூட்டி - மந்திரி பிரதானி மனதைத் தெரிந்திடுவீர்
அப்படியே செய் யென்க - அரசனாணைப்படி சபை கூட்டினரே
மந்திரக் கிழவரும் - மன்னரும் தளகர்த்தர்களும்
கோவிற் குருக்களும் - கோள் நிலை கூறுஞ் சோதிடமும்
மந்திரி பிரயுக்களும் சேர்ந்து - மன்னரிடமேது சொல்வார்

[மந்திராலோசனை சபையினர் கூறியவை]

ஏழுலகத்தையும் - ஏகவொரு குடைக்குள்ளே
ஆளுந்திறமையுள்ள - அரசனுயிருந்தாலும்
யானையேற்றம் குதிரையேற்றம் - அத்தனையுங் கற்றாலும்
வில்லம்பு சிலம்பு - வீரர்க்குள்ளவாள் வீச்சுகளும்
எத்தனை கற்றாலும் - எதிரியை வெல்லப் போமோ?
பகைவர்கள் நம் கோட்டை மீது - பாய்ந்து மே வந்தாலும்
சூழ்ந்து வளைத்துக் கொண்டு - சூழ்ச்சி மிகச் செய்தாலும்
துரிதமது கொள்ளாமல் - தூய விவேகிகளுடன் கூடி
மந்திராலோசனை செய்து - மார்க்கத்திலிறங்க வேண்டும்
தீர்மானமில்லாக் காரியம் - திறமையாக முடியாது
கோபமெழுந்ததென்று - கொடிய போரைச் செய்யார்கள்
இளவரசேயிப்போது - இங்குள்ள படை போகட்டும்
நம்பிக்கைக்கு பாத்திரமான - நல்ல ஒற்றனைத் தானனுப்பி
அறிந்தேனங்கு வந்திருக்கும் - அயல் படைகளின் திறத்தை
அறிந்ததைச் சொல்லுகின்றேன் - அரசே நான் திட்டமுடன்
திருக்குறையலூரறி நாட்டுப் படையும் - திருவாலங்காட்டு
படையும் சேர்ந்து

நாகமன் படைகளோடு - நாள் கணக்கில் யுத்தமிட்டு
பாளையங்கள் பட்டபாடு - பகரவெளிதாகுமோதான்
அவ்வார்த்தை கேட்டு - ஆழ்ந்து சிந்தித்தான்
கோபமாறி வரவே - கொற்றவனிடம் ஏதுரைப்பான்
போரிலுறுதியோடு நிலைத்து- பொருதி நில்லாதிப்படை
முதற்போரிலே நம் படை - முறிந்து அழிந்தன
தாங்கள் புறப்படுவது - தங்கள் தகுதிக்குத்தகாது
தயை செய்து பாசறைக்குத் - தாங்கள் புறப்படுங்கள்
எதிரி படைகள் முற்றுகையிடுமுன் - ஏவிவிடுவோம் நம்படையை
எதிர்ப்புப் படையை - எப்படியும் அமைத்துவிடலாம்

மன்னர் மகன் போருக்குப் படைகளை அனுப்பச் செய்தல்

அப்படியே படைகளை - அனுப்பிவிடும் மந்திரியே
வெளியில் வந்து மந்திரியும் - வீரர்கள் மத்தியிலே
உரையது நிகழ்த்தலுற்றார் - உற்றவீரர் யாபேர்களும்
மாற்றரசனையும் நமது - மண்டுகொள்ளவிடாமல்
எழவேண்டும் போர்க்கு - என்று வீர முழக்கமிட்டார்
மனவலுவில்லாவுடலுக்கு - மகிமையேது வீரரே
மானமாகிய மாணிக்கத்துக்கு - மதிப்புக் கொடுங்கள்
ஏனிப்படி பயப்படுகின்றீர் - என்றேனும் அழிவது உடல்
அழியுமுடலைக் காப்பாற்றி - அழியாப் புகழை யழித்தீர்களே
திடங்கொண்டு வீரர்களே - திரும்புங்கள் போர் முகம்
சோழவீரரெல்லாரும் - தோற்றுமேதான் போனால்
பேசாது அவர்கள் - பெண்ணுடை தரிக்க வேண்டும்
அவ்வுரை தான் கேட்க - ஆவேசங் கொண்டதங்கே
வெற்றிக்குள்ள சேனைகளும் - வேந்தருடமந்திரிமார்
சேனைப் படைத் தலைவர் - செகவீரரெல்லோரும்
ஆணைபரிவாரங்களுடன் - அரசிளங்குமாரனைத்தான் தொழவே
கோட்டை வாயில் தனைக் கடந்து - கொற்றவனார் தானனுப்ப
ஏதுசொல்வானப்போது - ஏற்ற புகழ் மன்னனிடம்

[அமைச்சர் அரசனிடங் கூறிய அறிவுரை]

மன்னர் மகனே கேளும் - மகிமையுள்ள இளவரசே
வீரவிஜய நகர் - வேந்தன் படைகளுமே வந்து

கோட்டையை வளையுமுன்னே - கோட்டாறு நாம் போய் சேர்வோம்
நாட்டை பிடிக்கு முன்னே - நாஞ்சில் நாடு செல்வோம்
நாஞ்சில் நாடு சென்று - நாமும் மீட்டிடலாம் நாடதனை
என்றுமே சொன்னார்கள் - ஏற்றமுள்ள மந்திரிமார்

அமைச்சர் கூறிய அறிவுரையை மன்னர் மகன் மறுத்துக் கூறுதல்

எல்லாமறிந்த மந்திரியே - ஏழுகுல மக்களிலே
ஏற்ற பூதப்பாண்டியனை - இயல்பாக அந்நாளில்
கொல்லம் இருநூற்றித் - தொண்ணூற்றிரண்டாமாண்டில்
கொன்றுமே விட்டான் - கொடியதொரு இராமவர்மாவும்
கோட்டாறும் நாஞ்சில் நாடுங் - கூபர்கோன் சேர்த்துக் கொண்டான்
அவ்வரசன் நாட்டில் - அடியெடுத்து வைக்கலாமோ?
என்று அரசனுரைக்க - ஏது சொல்வான் அமைச்சரும்
அந்நாட்டு அரசன் மடிந்ததை - அப்போது சொல்லலுற்றான்
அன்னியராயுதத்தினாலன்று - அவனது படை வலுவாலன்று
இணக்கமுடன் கூடி - இருந்து ஆளாமலப் போ
பிணக்குமிக உண்டாகி - பிழைமோசம் போனார்கள்
ஆனதாலங்கு போய் - அவன் நாடு சென்று
அவ்வரசனையணுகி - அவன் படைகொண்டு மீட்டிடலாம்
என்றுமே கூறி இவ்வரசனுக்கு - எடுத்துரைத்தார் மந்திரிமார்

மன்னர் மகன் மந்திரி கூறிய அறிவுரையை ஏற்றுக் கொள்ளல்

அப்படியே செய்வோம் - அன்புள்ள மந்திரியே
காரிருளானபோது - காணாது போய் விடுவோம்
போகவேண்டுமானால் - பொழுது உதிக்குமுன்னே
ஏகவேணும் நாமென்று - இயல்பாகத் தானுரைத்தான்
என்றரசன் செரல்ல - ஏற்ற புகழ் மந்திரியும்
பார் மன்னனாணையிதென்று - படைத் தலைவனைத் தானழைத்து
சேர்ந்த பரிகலமும் - சேர்வைக்காரருமே
சேனை தளங்களுடன் - சேர வரவேணுமென்று
அழைப்பு விட்ட போது - அந்த முடிவை யேற்று

சிறப்பு மிகக் கொண்ட சென்ற திசை வென்ற
படைகளும் பக்கத்திலுள்ள - பரிகலத் தாருமங்கே
பரியுங் கரிகளுமே - பல சமர்த்தான வீரர்களும்
நீடு புகழ் காரியங்கள் நினைத்தபடியே சொல்லும்
மந்திரிமார்களுடன் - மதிமிக்க மன்னவர் தானும்
தன்னுடைய நாட்டின் - தலமும் நிலமும் விட்டு
மெத்த மனங்கலங்கி - வேந்தர் தம் குடும்பத்துடன்
அம்மண்டங்கு நாடுவிட்டு - அகன்று வரும்போது

(பொல்லாச் சகுனங்கள் கண்டு மன்னர் மனங் கலங்கி நிற்றல்)

பொல்லாச் சகுனங்கள் - பொருந்துதே மன்னனுக்கு
வாயாசமிடமாச்சு - வலியன் வலமாச்சு
வேடரெதிர் வருவார் - வில்லியரெதிரானார்
வெட்டிப்பிடியுமென்று - வேடரெதிர்வாரார்கள்
குத்திப்பிடியுமென்று - கோட்டாறு மோலமிடும்
பல்லி பல பல வென்னும் - பனைமரத்திலாந்தை சீறும்
குட்டி யிட்ட கரும் பூனை - குறுக்காக வந்ததங்கே
ஓரி குறுக்காச்சு - ஒற்றைப் பார்ப்பானெதிரானான்
கட்டோலை கைபிடித்துக் - கணக்கன் வரக் கண்டார்கள்
வாழாக்குமரியவள் - மீளா நெருப்பெடுத்தாள்
நெருப்பெத்துக் கூடன் கிழவி - நின்றிழவுதான் கொடுத்தாள்
அன்புள்ள மந்திரியே - அமைச்சர் சிகாமணியே
மன்னர் ராயவர்மாவை நாடி - மலையாளம் போகிறமே
என்ன சகுனங்கள் - இது நிமித்தங்காணுகுது
சகுனத்தைப் பாருமென்றான் - சக்தியுள்ள இளவரசனுமே
எந்தனுட வார்த்தைகளை - இப்போது நீர் கேளும்
ஆகாத சகுனங்கள் - ஆகுதேயிப்போது
பொல்லாத சகுனங்கள் - பொருந்துதேயென்ன செய்வோம்
இன்னொருநாள் போக்கி - இனியோருநாள் போகலாமே
அவ்வார்த்தை தான் கேட்டு - அமைச்சருமேது சொல்வார்

(சகுனத்தால் பழுதில்லை யென்று மந்திரி கூறி மன்னனைத் தேற்றிப்போகலாமென்று கூறுதல்)

சகுனத்தால் பழுதுண்டோ - சமர்த்துள்ள ராஜருக்கு
பொல்லாச்சகுனத்தினால் - ஏதொரு குற்றமில்லை
மன்னவரே நீங்கள் - மனமது கலங்க வேண்டாம்
போவோம் நாமென்று - புத்தியாய் தானுரைத்தார்

மந்திரி சொற்கேட்டு - மன்னவரும் தான் நடந்தார்
நடந்தார்களெல்லாரும் - நாஞ்சில் நாடு தானோக்கி
மண்டங்கு நாட்டு - மகா ராஜரும் போய்ச் சேர்ந்தார்
சேர்ந்தார்களெல்லாரும் - சேரனிடம் உதவிக்கு
சேரனும் காலதாமதம் - செய்து மேவந்தான்
மண்டக்கு ராஜர் தங்கின இடம் - மண்டக்காடென்பார்
இவ்வரசனைச்சுற்றி - ஏனையோர்க்கு இருப்பிடம் வகுத்தார்
அவரவர்களுக்குரிய இருப்பிடம் - அடைந்துமே இளைப்பாறினார்கள்
நாகமன் வென்றனன் நாடிழந்தார் சோழர்
இப்படியாக இவர்கள் - இருந்துவரும் நாளையிலே

நாகமநாயக்கன் ராஜவானதைச் சந்திர சேகர் அறிந்து விஜயநகர் அரசரிடம் சென்று முறையிடுதல்

நாட்டை மீட்க அனுப்பிய - நாகம நாயக்கன்
நாட்டுக்கு ராஜவானான் - நாடிழந்தான் சந்திர சேகரன்
நாடிழந்த பாண்டியன் - நாகமனுக்குப் பயந்து
நாடியே சென்றான் - நன்னகர் விட்டேகி.
தேடிய கிருஷ்ணதேவராயர் - சீர்பாதம் கண்டணுகி.
உள்ளவிவரமெல்லாம் - உரைக்கலுற்றா ரம்மானை

விஜய நகர் மன்னர் அச்சுச தேவராயர் விஸ்வநாதனை அனுப்பி பாண்டிய நாட்டை மீட்டுக் கொடுத்து சந்திரசேகர

(பாண்டியனை ஆளவைத்தல் - சந்திரசேகரன் பாண்டிய நாட்டை ஆளுதல்)

அவ்வார்த்தை கேட்ட - அவ்விஜயநகர் வேந்தன்
கோபித்துக் கண்சிவந்து - கொக்கரித்து வேதுசொல்வான்
வீரத்தளபதிகளில் - விஸ்வ நாதனைத் தானோக்கி
நாட்டை மீட்டுக் கொடுத்து - நாகமனைக் கைது செய்து வாரும்
என்றவுரை கேட்டு - எழுந்தானே விஸ்வநாதன்
தெண்டனிட்டு விடை பெற்று - தென்னாடு நோக்கி வந்தான்
வந்துமே சேர்ந்தான் - வைகைவளநாட்டிற்கு
நாட்டிற்கு ராஜாவாயிருக்கும் - நாகமனும் தந்தையை
தந்தையோடு போர் செய்ய - தனயனுமே வந்து நின்றான்.
இருவர் படைகளுமே - எதிர்த்துப் போர் செய்தனவே
போர் செய்த விதங்களைப் - புகழ்ந்துரைக்க வியலுமோ?
நாட்கள் பலவாக - நடந்து வரும் போரிலே
வெற்றிபெற்றான் - வீரத்தளபதி விஸ்வநாதனும்

தென்னாடு போற்றும் - சிறந்த வீரனவன்
பாண்டிய நாட்டை மீட்டுக் கொடுத்து - பாண்டியனை
ஆளவைத்தான்

கிருஷ்ண தேவராயருக்குப் பின் அரசாண்ட அச்சுதராயர்
சந்திரசேகர பாண்டியனை நீக்கி விட்டு விஸ்வநாத நாயக்கனை
மதுரைக்கு மன்னராக்கினார்

1529-64

கியாதி பெற்ற மன்னன் - கிருஷ்ணதேவராயருக்குப் பின்
அந்நாட்டையரசாண்ட - அச்சுதராயருந்தான்
சுவாதீனமுள்ள பாண்டியரைச் - சுவாதீன மாயாள விட்டால்
நமதாள்கைக்குட்பட்ட - நாட்டையு மிழுக்க நேருமென்று
அரிய நாத முதலிதலைமையில் - அச்சுதனும் படையனுப்பி
மதுரைபாண்டியனைமுறியடித்து - மன்னனாக்கினான்விஸ்வநாதனை
திறை செலுத்தி ஆண்டனர் - திருவழுதியும், சீன குணவழுதியும்

பஞ்ச பாண்டியரில் ஒருவனான ஓட்டப்பிடாரம் ஆண்ட
வீரபாண்டியனைக் கயத்தாறு ஒப்பந்தப் போரில் தோற்கடித்த

வெற்றிமேல் வெற்றி கண்ட - விஜய நகரச்சுத வேந்தவன்
பக்கத்துப் பாண்டியரைப் - படையெடுத்து முறியடிக்கமுடியாம
பாண்டியனிடம் போர் செய்து - பல நாளாச்சு தென்றெண்ணி
பஞ்சபாண்டியரிலொருவனான - பராக்கிரந்தானுமுள்ள
ஓட்டப்பிடாரமுமாளும் - உற்ற வீரபாண்டியனை வெல்ல நினைத்து
கள்ள மனம் கொண்டதொரு - கருத்துள்ள விஸ்வநாதன்
உற்ற வீர பாண்டியனுக்கு - உபாய அறிக்கை யிட்டான்
மன்னர் நாம் நாடாள - மடிவதேன் சேனை படைகள்
எங்களில் வீரனொருவனையும் - உங்களில் வீரனொருவனையும்
விடுவோம் நாம் நல்ல - வீரனை வாள் சண்டைக்கு
வென்றவன் ராஜாவுக்கு - சொந்தமே யிந்தநாடு
தோற்றவன் ராஜா - தம் நாட்டைத் தாமிழந்து
வேற்று நாட்டுக்குப் போக - வேணுமென்றார் விஜயநகர்வேந்தன்
அறிக்கைக்குச் சம்மதித்தான் - அவ்வீரபாண்டியனுந்தான்
இரு தரத்து மன்னர்களும் - இயல்பாகச் சம்மதித்து
ஒப்பந்தப் போர்க்கு - உடன்பட்டார்களிருவருமே
தூதுவனை தானழைத்து - துரித முடனே து சொல்வார்
வாட்போரில் தேர்ச்சி பெற்ற - வலுவுள்ள வீரர்களைக்
கூட்டியிங்கே வாருமென்மென்று - கூறினார் மன்னர்களும்
ஆளுக்கொருவீரர்களை - அரசர் கட்டளைப் படியே

கூட்டியே வந்தார்கள் - கொற்றவர்கள் முன்பாக
வந்தார்களிருவரும் - வாளரசர் முன்னே
வீரத்தளபதி விஸ்வநாதனுக்கும் - வீரபாண்டிய வீமனுக்கும்
வாளாயுதந்தான் கொடுத்து - வாட்போருந்தானடத்தி
வரும் வெற்றி காண - வந்துமே நின்றார்கள் காணம்மானை
ஒருவனுக்கொருவன் - உவந்து பின் வாங்காமல்
நாலுகடிகை மட்டும் - நல்ல சண்டை செய்தார்கள்
வீரர்களிருவருமே - விர்விரென்று வீசி வர
இடதுசாரி வலதுசாரியாக - இருவருமே மாறி மாறி
பாய்ந்துமே சண்டை செய்ய - பறக்குதே தீப்பொறிகள்
இருவர்வாள்களும் மோதும்போது - இரு மேகங்கள் மோதி
மின்னல்கள் வீசியே - விழிகளை மறைப்பது போல்
வாள்களைச்சுழற்றி வீசியுமே - வாட்போர் புரிந்தார்கள்
சாஸ்திர யுத்தமாய்ச் - சமர்த்தாகப் போரிட்டார்கள்
வீரர்களிருவருமே - வீரமுடன் சண்டை செய்ய
விஜய நகர் வீரன் விஸ்வநாதன் - வெற்றியடைந்திடவே

மந்திரிமார்ஒப்பந்தப்போரில்தோல்வியடைந்து வீரபாண்டியனை
நோக்கி நாம் வேறு நாடு போவோமென்று கூறுதல்

மன்னவரைத்தானோக்கி - மந்திரிமாரேது சொல்வார்
நாடாண்டீர் கிரீடம் பூண்டீர் - நாயக்கர் சூழ்ச்சியதால்
நாடிழந்தீர் நகரிழந்தீர் - நலமான நாட்டைவிட்டு
மறுநாடு போவோமென்று - மன்னரிடந் தானுரைக்க
மந்திரிகளுரைத்த மொழிப்படியே - மன்னவனுஞ் சம்மதித்து
தன்னுடன் வருவோரைத் - தானழைத்தெல்லோரும்
வருத்தமுடன் வந்தார்கள் - வள்ளியூரானதிலே
கோட்டையுமிட்டங்கே - கொடி விருதுந்தான் கட்டி
ஆண்டார்கள் நலமுடனே - ஆண்மையுள்ள கன்னருமே
இப்படியாக இவர்கள் - இங்கு நாடாள் கையிலே

வள்ளியூர் பாண்டியன் மேல் - கன்னட ராஜன் மகள்
காதல் கொண்டதையறிந்த ராஜன் வள்ளியூர் பாண்டியனுக்குத்தன்
மகளைக் கொடுக்க இசைந்து அமைச்சனைத் தூதனுப்பினான்
அதற்குப் பாண்டியன் சம்மதிக்காததால் போர் மூண்டது
போரில் வெற்றி பெற முடியாத பாண்டியன் தன்னால் தான்
மாண்டான்

கன்னடராஜன் மகள் - கட்டழகனழகைக் கண்டு

வாடியயர்ந்தாள் - வள்ளியூர்ப் பாண்டியன் மேல்
மாதை மணமிடவே - மாதாவு மனதிலெண்ணி
தன் கணவனோடே - தையல் நின்றேது சொல்வாள்
தன் மகளார் சொன்னபடி - தன் கணவனோடுரைக்க
அந்தவுரை கேட்டவ் வரசன் - அவமானத்தாலே
அன்று பெரு மூச்சு - அலைபோலெறியலுற்றார்
குயில்மொழியாள் நிலை கண்டு - கொற்றவனுங் கோபங் கொண்டான்
கணவன் கொண்ட கோபமதைக் - காரிகையாள் தானறிந்து
மகள் நிலையைத் தான் கூறி - மன்னவனை மனமிசைய வைத்தாள்
அந்தப் பொழுதில் - அவ்வரசன் தானிணங்கி
அப்போது கன்னட ராஜனுமே - அன்புள்ள மகளுக்கு
மன்னன் மனதை யறிந்து - மகளுக்கு மாலையிட வேணுமென்று
வடிவிலழ கனவன் - வள்ளியூர்ப் பாண்டியனை
வாய்த்த மணமகனுவதற்கு - வகை கூறும் மந்திரியே
நீர் சென்று முயன்று - நிச்சயித்து வாருமென்றார்
நல்லதென்று சொல்லி - நடந்தாரே மந்திரியும்
வள்ளியூர்ப் பாண்டியனை - வந்து கண்டு தானுரைப்பார்
பெண்ணுமக்குக் கொடுப்பதென்று - பேசி வரச் சொன்னார்கள்
என்றுமே சொன்னார் - ஏற்ற புகழ் மந்திரியும்
மந்திரி சொற் கேட்டு - மன்னவனுமேது சொல்வான்
கன்னடன் தன் மகளைக் - கலியாணஞ் செய்வதற்கு
சம்மதமில்லையென்று - தானுரைத்தான் பாண்டியனும்
பாண்டியனுரைத்த வாசகத்தைப் - பகருவான் மன்னனுக்கு
மந்திரியுமங்கு சென்று - மன்னவனோடே துரைப்பான்
இழிவாகப் பேசி - ஏளனங்கள் செய்தான்காண்
ஆனதினால் மன்னவரே - அவனை நாம் வெல்வோமென்றார்
வந்து மூண்டதுவே கலகம் - வள்ளியூர்ப் பாண்டியன்மேல்
மன்னரிலழகனும் - மாண்டாரே தன்னாலே
வள்ளியூர் விட்டேகி - வந்துமே சேர்ந்தார்

விஜயநகர வேந்தன் மலையாளத்தையும்வென்று ஆண்டு வரும்போது தலைக்கோட்டை போரினால் விஜயநகர சாம்ராஜ்யம் அழிக்கப்பட்டது. ஆத்திமுடி சோழனும் அவன் ஆண்ட நாட்டை இழந்தான்.

வெற்றிமேல் வெற்றிகண்ட - விஜயநகர் வேந்தன்
மலையாள மன்னனையும் - மடக்கி யரசாண்டு வந்தான்

இப்படியாக இவர்கள் - ஏற்ற முடனாளுகையிலே
கொல்லமெழு நூற்று நாற்பத்தொன்றில் - கொடுமைக் காரதுலுக்கனவன்
விஜயநகர் ராஜ்ஜியத்தை - வேட்டையாடி விட்டான்
ஆத்திமுடி சோழனுந்தான் - அவன் நாட்டை இழக்கலாச்சு
இப்படியாக இவர்கள் - இருந்துவரும் நாளையிலே

சேரமன்னனுக்கு முதுமைப் பருவம் ஏறியதால் என் மகனுக்குப் பால வயது கழியும்வரை அவனுக்குப் பதிலாக மருமகனுக்குப் பட்டம் சூட்டி வைக்கிறேனென்றான்.

இந்நாட்டை யரசாண்ட - இங்குள்ள இராமவர்மாவுக்கு
அம்மன்னன் தமக்கு - அதிக வயதுமானதினால்
இணையில் இந்திராணி போக - இராமவர்ம மகாராஜன்
மனைவியும் போனவுடன் - மருமகன் தனை அழைத்து
தனயன் தனக்கரசை - தன் மருகனுக்கீய முன் சொல்லலுற்றார்
நல்ல மார்த்தாண்டா இந்நாட்டை - நானாண்டது போல
வல்ல முடிதரித்து - மண்ணுலகில் மாந்தர்க்கு
குறைவு வராமலே நீ - குடிகளனைவோர்க்கும்
நிறை செங்கோல் கோனாது - நீதி செலுத்திடுவாய்
மந்திரி தனையழைத்து - மார்க்கமது சொல்லலுற்றார்
எனக்குள்ள இந்நாட்டை - எந்தன் மகன் தனக்கு
பால வயதுகளும் - பரிவாய்க் கழிந்தவனுக்கு
பட்டஞ் சூட்டிக் கொள்ளும் - பருவம் வரும் வரைக்கும்
எந்தன் மருமகனுககு - ஏற்றதொரு பட்டமென்று
நாட்டுக்குப் பறைசாற்றிச் சொல்லி - நல்லமுடி சூட்டி வைத்தார்

உறவினர்களையும் மனைவியையும் நோக்கி மன்னன் கூறியவை.

உற்றவுறவினர்க்கு - உரையாது நிகழ்த்தலுற்றார்
என்னையறியேனினி - என் கண்ணையும் நானறியேன்
புசிப்பறியேன் - பூவையரை நானறியேன்
ஆசையுமறியேன் - அருங்கிளையும் நானறியேன்
மெத்தையறியேன் - மேவுஞ் சொகுசறியேன்

எந்தனுக்கு அந்திய காலமது - இப்போ நடப்பதினுல்
ஆவிபிரியுதென்று நீங்கள் - அதைரியப்படவேண்டா
ஆதரிப்பானுங்களேயும் - அன்புள்ள மார்த்தாண்டனுமே
மனைவியுங் கேட்டவுடன் - மருகியுருகிடவே
பரிவுடனடிகளில் - பணிந்துமே தெண்டனிட்டு
பதை பதைத்து வீழ்ந்து - பண்பாக வேதுசொல்வான்
தனியே வும்மை விடுத்துத் - தனித்திரேன் புவிமீதில்
இப்படியே யிவளுரைக்க - ஏது சொல்வான் நாயகனும்
நாயகனென்றென்னை - நாடி நீ யுழல் வதேனே
அனைவர்க்கும் நாயகனுர் - அவ்வீசனென்றெண்ணிடுவாய்
என்றரசன் சொல்லவும் - ஏகியதுகாண் உயிரதுவும்
வேந்தனேயுமை விடுவிக்க - விதித்தானே ஈசனவன்
ஏகினீருமையும் நான் எக்காலம் காண்பேனே
என்று புலம்பி மாதும் - ஏக்கமது தான் விட்டுயிர்
துறந்த வருரைத்தபடி - தொடர்ந்தாற்றுவதென்று
மணவாளன் சொற்றட்டாத - மனைவியின் கடமையென்று
கணவருரைத்தபடி - கண்மணிக்குப் பட்டம் சூட்ட
மகனையும் வளர்த்து நல்ல - மன்னவனுக்குவதென்று
குற்றமில்லாமற் கல்வி - குறையில்லாமற் படிக்க வைத்தாள்
மன்னர் மன்னனுகி மகன் - வளர்ந்து வரும் நாளையிலே

நன்றி கெட்ட மருமகனுகிய மார்த்தாண்ட மன்னன் சூழ்ச்சியால் நாட்டைத் தனக்காக்கிக் கொள்ளல்.

மாமனுர் சொற் கடந்து - மதியிழந்து மருமகனுமே
நாட்டாசை தான் பிடித்து - நாட்டைத் தனக்காக்கவெண்ணியவன்
நாட்டிலுள்ள படைகளைத் தான் - நன்றி கெட்ட மருமகனும்
முன்புள்ள படைகளெல்லாம் - முற்றிலுமே நீக்கிவிட்டு
சப்பபலங்களோடு - தத்துவங்கள் தானுமுள்ள
தாட்டிகவானைப் பார்த்துத் - தன் படைகளிற் சேர்த்து
பாரிலரசாண்டு வந்தான் - பார் மன்னன் மருமகனும்
சூழ்ச்சி புகழோங்க - தொல்புவியை யாண்டு வந்தா தான்

மன்னர் மக்களுக்கு மைத்துனன் சூழ்ச்சி தெரிய அத்தானிடம் தூதனை அனுப்பி அவர்களது நாட்டைத் தந்து முடிசூட்டி வைக்க வேண்டுமென் அவ்வாறு செய்யா விட்டால் போர் செய்வோமென் கூறினர்.

பார் மன்னன் திருமகனும் - பருவமது தானுகி
மன்னர் திருமக்களுக்கு - மைத்துனன் சூழ்ச்சி தெரிந்து
மின்னு முடிசூட்டிநல்ல - வேந்தர் மககள் தானும்
அன்றுமே சொல்லி - ஆள்விட்டாரத் தானுக்கு
அத்தானிடத்தில் தூதா நீ - ஆண்மையுடன் சென்றேகி
எங்களது நாடதுவும் - எல்லா மவரருளி
சங்கடங்களில்லாது - சகல படைகளுந் தந்து
கிரீடமும் செங்கோலும் - கீர்த்தியுள்ள முத்திரையும்
வீரியமாய்த் தந்து - வேந்தனுக்கி வைக்கச் சொல்லென்றுர்
வாய்மை நிலையுடையாரென்று - வாழ்த்திப் புகழ்ந்திட
வையமறிய வழைத்து - வேந்தா நீர் நா[illegible]ளியா விட்டால்
மெய் விளங்க வெஞ்சமர் - விளைவிப்பாரெனக் கூறிவாவென
அரசர் மக்கள் தூது - அனுப்பினுர் காணம்மானை
தூதன் மிக நடந்து - சிவனேயுன் செயலெதன்று சொல்லி
பயபக்தியாய்த் தான் நடந்து - பார்த்தானே ராஜனையும்
இராஜா மகனுரைத்த - நலமுள்ள செய்தியெல்லாம்
இராஜா மக்களுக்காகத் - தூதன் தானுரைத்தான்

மார்த்தாண்ட மன்னன் தூதனைக் நோக்கிக் கூறியவை.

எந்தன் மாமனுக் கன்று - ஏற்பட்ட பிள்ளை யில்லாததால்
எந்தனுக்குத்தான் - ஏற்றதொரு பட்டமென்று
நாட்டுக்குப் பறைசாற்றி - நல்ல முடிசூட்டினுரம்மானை
பப்புராமனென்றெனக்குப் - பகையாகப் பிறந்தானே
வைப்பாட்டிப் பிள்ளையென்றிவ் - வையகமெல்லாந் தெரியும்
ஆரடா நீ தூதா - அறியாயோவென் பலன்கள்
பாரடா நீயுமுந்தன் - பப்பு ராமன் படுகிறதை

இணக்கமில்லா பப்புராமனுக்கு - இன்றிதனையுரைத்திடு நீ
மார்த்தாண்டனிவைஉரைக்க - மகத்தான தூதுவனும்
தூதன் மிக நடந்து - சொன்னனே பப்புராமனுடம்
எதிரியாய் மைத்துனர்கள் - இரு பேருந்தான வெகுண்டு
மார்த்தாண்ட மன்னனையும் - மதிப்பில்லாமலே பேசி
உவந்து மிக முன்னுள் - உரைத்தமொழி தவறினதால்
அன்னவனுட்சியிற் நாட்டில் - ஆகாதொரு நாளும்
என்று சொல்லியவர்கள் - ஏற்ற படைசேர்க்க வென்று
தன்னுடைய வினங்களும் - தன்னோடு சேராதறிந்த தம்பியும்
சேனைகள் சேர்க்கவேணுமன்று - திட்டமிட்டாரம் மானை

சான்றோர் குலமக்களைப்படைத்துணைக்கு அழைத்தல்

சதப் பலந்தாறுமுள்ள - சான்றுரைத்தானணுகி
அவர்களை நாம் சேர்த்து - ஆதரவாய்க் கொள்ளவேணும்
என்றுரைத்து சான்றோருக்கு - ஏவினுர் தூதுவனை.
தூதுவனுஞ் சென்று - துரிதமுடனழைத்து வந்தான்
வந்திருந்து மேயவர்கள் - வாய்மை யுரைத்திடுவார்
உங்களுக்குத் துணையாக - உதவுவோமென்நாளும்
என்றுரைக்கக் கேட்டு - ஏற்றதொரு அண்ணனுந்தான்
நாடார் குல மக்களின் - நல்லாதரவு மட்டும் போதாது
மார்த்தாண்டவர்மனை - மடக்க நம்மா லேலாது
அதற்கு வழி சொல்லுகிறேன் - அருமை சகோதரனே

சான்றோர்களைப் படைத்துணைக்கு அழைத்தது போல் திருச்சி நகர் கிழக்கிந்திய கவர்னரையும் படைத்துணைக்கு அழைத்தல்

தேசமெங்கும் தான் புகழும் - திருச்சி நகர் நாம் சென்று
கிழக்கிந்தியக்கவர்னரிடம் - கேட்குங்கவர் படையும் கூட்டி
ஏற்ற நம் படையுடனே - இரண்டையுமொன்று சேர்த்து
போரது புரிவோமானல் - போரில் வென்றிடலாம்
வெடிகொண்டடிக்கும் - வெள்ளைக் கவர்னர் படை
அடிபிடி சிலம்பத்தால் - அடித்துத் தள்ளும் நாடர் படை
இப்படைகளிருக்கும்போது - ஏனிந்தக்கவலை நமக்கு
மலையாதே தம்பி - மலையாளப் படையை மடக்கி
மார்த்தாண்டவர்மனை - மார்புரளவதைத்திடலாம்

ம் நாட்டை மீட்டி - நலமுடனேயாண்டிடலாம்
ன்றுமே பப்பு தம்பி - இயம்பினனந்நேரம்
தைக் கேட்ட ராமன் - அப்படியே செய்வோமென்றுன்
அண்ணன் தம்பி மாரிருவருமே - அதிவிரைவில் சென்றேகி
வண்கலக்குன்று நாடரிடம் - வேண்டினுருதவும்படி,
அவ்வுரைக்கு இசைந்து வரும் - அங்குள்ள நாடர்த்தானிழைக்க
அதற்கிசைந்த நாடர்கள் - அங்கு வந்தனர் காணம்மானை.
அரசிளங்குமாரருமே - அன்னவரை தான் வேண்ட
அறந்துணை நுமக்குத்தானென்று - அன்றளித்தார் வாக்கதனை
ாடர் குலமக்களிடம் - நண்பனுகித்தானுரைப்பான்
போரில் தேர்ச்சி பெற்ற - போர்வீரத் தோழர்களே
போரெனில் இனிவரும் போர் - புண்ணியதிநப்போராகும்
எங்களுக்குதவி செய்ய ஏற்றவும் ஜனங்களுடன்
சிறந்த போர்க் கருவிகளும் - சேகரித்து வைத்திடுங்கள்
மறவாதீர்கள் எங்களையும் - மன்னனுக்கிடுவேன் உம் நாட்டுக் குத்
திருச்சி நகர் தனக்குச் - சீக்கிரமாய்ச் சென்று வாரோம்
இருவரும் போய் வாரோம் - என்று சொல்லி வழிநடந்தாரே
சென்றங்கு இருவருமே - சேர்ந்தார்கள் திருச்சி நகர்.

பப்புதம்பி ராமன் தம்பி இருவரும் திருச்சி கவர்னரிடம் செய்த ஒப்பந்தம்

திருச்சிராப்பள்ளி வந்து - சிறந்த படைபலமுள்ள
கவர்னர் கிழக்கிந்தியரைக் - கண்டு மேயுரைத்தார்கள்
எல்லாச்செய்திகளையும் - இயல் பெரிய கவர்னரிடம்
வல்ல புகழ் இராமன் - வகைவகையாயுரைக்கலுற்றுன்
மன்னனன்று மருமகனுக்கு - உரைத்த மொழி தவறிய
ஆபாவி நெஞ்சன் - அநியாக கிஷ்டூான்
மாபாவியான - மார்த்தாண்ட மன்னனவன்
செய்தவினைகளெல்லாம் - செயமாக நீரறிந்து
எதிரியைக் கொன்று - எமலோகந்தான் சேர்த்து
அந்தப்புவியாளவைப்பீர் - அனைவாக வெங்களையும்
என்றிவர் சொல்ல - ஏது சொல்வான் கவர்னருமே
எந்தன் படைகளுக்கு - ஏற்படும் செலவனைத்தும்
கொடுக்கும்படி கேட்க - கொடுப்பதாகச் சம்மதித்தார்
கவர்னரிடம் ஒப்பந்தம் - கருத்துடனே செய்த பின்பு
ஒப்பமிட்டு வாங்கிக் கொண்டு - ஊக்கமுடனேது செய்தார்

திருச்சி கவர்னர் திருநெல்வேலிச் சீமையின் தளபதியான அழகப்ப முதலியாரிடம் கூறியவை

திருநெலவேலியிலிருக்கும் - திடமுள்ள தளபதியார்
அழகப்பமுதலியாருக்கு . அக்கவர்னரறிக்கை யிட்டார்
அறிக்கையைக் கண்ட - அழகப்ப முதலியாரும்
தாமதமில்லாமலே - தான் புறப்பட்டார் கவர்னரிடம்
தளபதியைக் கண்டவுடன் - தானுரைப்பார் கவர்னருமே
திருநெல்வேலிச் சீமையின் - தீர்க்க முள்ள தளபதியே
பப்புசும்பு ராமன் தம்பி - பரம்பரையோர் ராஜ்ஜியத்தை
மணிமுடி சூட்டிவைக்க - மறுக்கிறும் மார்த்தாண்டன்
பாலர் வந்துள்ளார்கள் - படைக்காக எந்தனிடம்
செல்லும் செலவு வாங்கிச் - செய்து கொண்டோமொப்பந்தம்
ஒப்பந்தப்படி படையை - உடனே யனுப்ப வேண்டும்
உந்தன் படைகளுடன் - உடனே நீரங்கு சென்று
மார்த்தாண்ட மன்னருடன் - மணிமுடியை நீர் மாற்றி
தம்பி ராமனுக்குத் - தனிமுடி சூட்டிவைப்பீர்
என்றுரைக்க கவர்னர் - ஏற்றுக் கொண்ட முதலியாரும்

அழகப்ப முதலியார் ஆரல் வாய் மொழி சென்று படையை அணிவகுத்தல்

ஆணவ முள்ள தன் படைகள் - அத்தனையுமே கூட்டி
ஆரல் வாய் மொழி சென்று - அணிவகுத்தார் தளபதியும
அரசியின் நாட்டில் வாழ்வித்த - அரசர் மக்கள் தங்களுக்குச்
சென்று தவியாகத் - தீரமுள்ள நாடார்குல மக்கள்
சேர்ந்து கலந்துமே - சென்று தவியாய் வரவே
எல்லைக்காவல் படைகள் - எதிர்க்கவாற்று தோடிடவே
தளபதி முதலியாரும் ; தக்கவுபாயமுடன்
மார்த்தாண்ட மன்னரை - வரும்படி தூதுவிட்டார்

மார்த்தாண்ட மன்னன் மந்திரி ராமையனிடம் கூறியவை

தூது வந்த செய்தியைத் - துஷ்டன் மார்த்தாண்டனறிந்து
மனமது கலங்கியே - மந்திரியிடமேது ரைப்பான்
தூதுதனைநாமேற்று - சொன்னபடி போனேமானால்

வாரீஸ்காரனுக்கு - வங்கியென்ன சொல்வதென்று
மந்திரி ராமையரிடம் - மார்க்கம துரையுமென்றான்
அச்சணமே ராமையன் - அறிவித்தான் மன்னனுக்கு
மன்னவரே நீங்கள் - மனவருத்தங் கொள்ள வேண்டா
நாருயண ஐயரும் நானும் - நலமுடனே சென்றங்கே
சுந்திரவுபாயஞ் சொல்லித் - தடுத்திடுவோம் தளபதியை
மார்த்தாண்ட மன்னவனும் - மனக்கலக்கந்தான் தீர்ந்து
அப்படியே செய்யுமென்று - அனுப்பிவைத்தாரிருவரையும்

அழகப்பமுதலியார் அரசுரிமை யாருக்கென்று மந்திரியிடமும் மற்ற பொது ஜனங்களிடமும் கேட்டறிதல்

அங்கு சென்ற இவர்களை - அழகப்பமுதலிவரவேற்றார்காண்
இருதரப்பாருமிருக்க - இச்சேர நாட்டு மந்திரியிடம்
நாடுதான் யாருக்கென்று - நடு நிலையாய்ச் சொல்லுமென்றார்
செப்பரிய தளபதியுடன் - செய்யும் புகழ் மந்திரிமார்
தாள்போற்றித் தெண்டனிட்டுத் - தளபதியார் தன்னோடு
சொல் புத்தியாகவேதான் - செப்புவார் மந்திரிமார்
சேரநாட்டு மன்னரின் - சிறந்த செங்கோல் வழிதான்
அரசர் சகோதரியின் - ஆண்மக்களுக்குத் தானுண்டு
அந்த முறைப்படி - அரசிருக்கும்போது
மார்த்தாண்டவர்மாவுக்கு - மன்னர் முடி சூட்டிவைத்தார்
அந்தவுரை கேட்ட - அழகப்ப முதலியாரும்
சண்டையிட்டு மன்னர் மக்கள் - சங்கடப் பட்ட வண்ணம்
சமாதானம் செய்வதற்குச் - சனங்களைத்தான் கேட்டார்
மலையாள சாதியார் - மருமக்கள் வழி மன்னரென்றார்
நாடார் குல மக்கள் மட்டும் - நாடு மன்னர் மகனுக்கென்றார்
தளபதி முதலியாரிடம் - தைரியமாய் மந்திரியேதுரைப்பார்
நாடிழந்திங்கு வந்த - நாடர் களுக்கென்ன தெரியும்
குறிப்பிட்டு வந்தோர்கள் - முதுகு புறங்காட்டி
தெறிபட்டு வந்திங்கு - சேர்ந்தவரெல்லாம் நாடர்தான்
என்றமைச்சர் சொல்ல - எதிர்த்துச் சொன்னார் நாடர்களும்
ஆண்மக்களுக்கே நாடென்று - அரசரன்று நாடறிய
மார்த்தாண்டனுக்குரைத்ததை - மறைத்தீரே மந்திரியே
என்று மொழி பகர்ந்து - ஏது சொல்வார் நாடர் மக்கள்

மன்னர் சொன்ன சொல்லை - மாற்றினீரோ நீருந்தான்
சொன்ன சொல் மறைத்ததினால் - தோஷம் வருமுங்களுக்கு
இறந்தழிந்து போவீர்கள் - எங்களுக்கிட ரொன்று மில்லை
இவ்விதமாக - இடர்களுரைக்கும்-வேளையிலே

அழகப்பமுதலியார் மலையாளிகளெல்லோரும் மார்த்தாண்டனை ஆதரிப்பதால் தானொன்றும் செய்ய முடியாதென்றும் படைத்துணையாக வந்த நாடர்களுக்குத் தீங்கு செய்யக்கூடாதென்றும் மார்த்தாண்டனிடம் கூறிச் சேனையுடன் திரும்பிப் போதல்

ஏறிட்டு நோக்க - இவர்கள் முகத்தையும்
இருதரப்பு வார்த்தைகளை - யெல்லாமிவர் கேட்டு
தம்பி என்ற சகோதரர்களை - தனிமையாகத்தானழைத்து
பப்பு தம்பி ராமன் தம்பி - பண்புள்ள மன்னர் மக்காள்
நாடுங்களுக்கென்று - நமக்கு விளங்கினாலும்
மலையாளிகளெல்லோரும் - மார்த்தாண்டனையாதரிக்க
நானென்ன செய்வதென்று - நன்றாக யோசியுங்கள்
படை கூட்டிக் காத்திருந்த - பப்பு தம்பி ராமன் தம்பி
அந்த மொழி கேட்டு - ஆறாத்துயரமுற்று
ஒன்று முரையாமல் - ஒப்பாது தானிருந்தார்
இவர்களிருந்த நினைவை - ஏற்ற தளபதியுந் தானறிந்து
பொருந்து மதியான - பொறுமை மிகச்சொல்லி
பப்பு ராமன் தம்பிகட்குப் - பக்க பலமாக வந்திருக்கும்
நாடரினத்தவர்க்கு - நாட்டில் தீங்கு செய்யாதீர்கள்
என்று சொல்லித்தளபதியும் - ஏகினார் சேனையுடன்

மார்த்தாண்டன் மறவர் படையைச் சேர்த்தல்

படைகளைக்கொண்டுவந்தும் - பயனற்றுப் போகக்கண்ட
இராமன் தம்பி பப்பு தம்பி - நாடர்களைச் சேர்ப்பதறிந்து
மார்த்தாண்டன் தன் படைக்கு - மறவரைச் சேர்க்கலுற்றான்
ஆயிரக்கணக்கான படை சேர்த்தும் - அரசர் பயம் நீங்காமல்
அப்போது மந்திரியே - அழைத்துமேயேது சொல்வார்

..நாடர்குல மக்களின் நல்லாதரவைப் பெறுவதற்காக ..வெங்கலக் குன்று நாடர் மகளை பெண்கேட்கப் போதல்

..நாட்டையிழக்காமல் - நானாளவேண்டு மென்றால்
..நாடர் குலமக்களை - நாம் பகைக்கக் கூடாது
..நல்ல செல்வாக்குள்ள - நாடர் மகளையும் மணந்தால்
..ம்பக்கமும் சேருவார்கள் - நாடர் குலமக்களும்தான்
..ப்பு தம்பி ராமன் தம்பி - பக்கபல மற்றிடுவார்
..திரியில்லாதாண்டிடுவேன் - இந்த நாடத்தனையும்
..அமைச்சரே நீர் சென்று - அழகு வெண்கலக் குன்று நாடரிடம்
..விருப்பத்தை யெடுத்துரைத்து - விவாகத்துக்கு நாள்வைத்து
..திவிரைவில் வந்துவிடும் - அன்புள்ள மந்திரியே
..அப்படியே செய்வதற்கு - அமைச்சரும் சம்மதித்து
..வெங்கலக்குன்று நாடரிடம் - விரைந்துமே தானேகி
..பெற்ற மகள் தனையும - பெண்கேட்கப் போயினரே
..வருகையறிந்து வெங்கலக்குன்று - வந்தழைத்து அமைச்சரை
..அருகிலிருந்த ஆசனத்தில் - அமர்ந்திடச் செய்தார்
..வந்திட்ட செய்தி வாய்விட்டுச் சொல்லுமென்றார்
..அவ்வுரை தான் கேட்டான் - அமைச்சனங்கு ஏதுரைப்பான்
..வெண்கலக் குன்று நீரிவ்விடத்தில் - வாழ்ந்து சுகம் பாராட்ட
..ங்களிலுந் தனியியல்புக்குத் - தகுதி மகளான இருவரில்
..கையொருத்திதனை - மணமுடித்து மகிழ்ச்சியடைய
..ளுக்கேற்ற மணவாளனாக - மன்னரையும் பார்த்திடுமே
..களின விரோதி - எவ்வகையிலும் பொருந்தாது
..வெங்கலக் குன்றுனது மகளைக் கொடுத்து - வேந்தனைப் பெற்றால் நீயும்
..தரம் பார்க்கில் நன்மை - அவர்க்கில்லை யுனக்கே யையா
..தன் மகளைக் கொடுத்தால் - ஏற்படும் நன்மை கேள் மந்திரியே
..மார்த்தாண்டனுக்கே யல்லாது - மன்னர் மக்களுக் கொன்றுமில்லை
..மை நம்பின பேர்களுக்கு - நாமல்லவோ வுதவவேண்டும்
..னதினாலமைச்சரே - அரசனுகக்கு அறிவுரை சொல்லிவிடும்
..யது பசித்தாலும் - புல்லையும் தின்றிடுமோ
..தை யொப்பத் தாழ்வை - யடைந்தாலும் நானுமே
..னர் வழிக்குக் கொடுப்பேன் - மருமக்கள் வழிக்குக்கொடேன்
..வ்வார்த்தை தான் கேட்டு - அமைச்சனுங் கோபமுற்று
..தனையினால் மந்திரியும் - வெகுண்டுமே தானேக்கி

வெண்கலக் குன்று நீரும் - வேந்தனால் துயரமடைவீர்
ஆனையின் வலியை - அவிளங் கன்று தானறியுமோ
வேந்தர் தம் பெருமையை - வெறும் பஞ்சை யரறியார்
மன்னர் குடிதான் - மானிடரென்பதை யறியாது
எங்களரசர் தானும் - என்னையும் அனுப்பினார்
என்னுடைய வார்த்தையை - ஏளனப் படுத்திய நீர்
எமது அரசரால் - எப்படியும் துயருறுவீர்
என்றுமே சொல்லியப்போ - ஏகினார் மந்திரியும்
மிக்க வருத்தங்கொண்டு - விரைந்து வந்தா ரரசரிடம்
வெங்கலக் குன்று நாடர் - விளம்பினதைக் கூறலுற்றார்

வெங்கலக் குன்று நாடர் மகளைத் தூக்கி வருவதென்று நினைத்து மார்த்தாண்டன் சேனையுடன் புறப்பட்டு மணவாளக்குறிச்சிக்கு வருதல்.

கூறும் மொழி கேட்டு - கொற்றவனுமேதுரைப்பான்
காமிமைப் பொழுதில் - நாடியே சென்றேகி
பழித்த வெங்கலக் குன்று - பதிகளிலே தான் புகுந்து
பகையாளியாயிருக்கும் - பம்புதம்பி ராமன் தம்பி
பக்கத்துத் துணைவர்களைப் - பந்தாடியும் நாமடித்து
துரைமகாள் வீடு சென்று - தூக்கியே வருவதென்று
மட்டுக்கடங்காச் சேனையுடன் - மன்னர் பயணமானார்
மணவாளக்குறிச்சிக்கு - மார்த்தாண்டனும் புறப்பட்டான்

மகளைத் தூக்க வருவதற்கு முன்னே வெட்டிப் போட்டு விட்டு வெங்கலக் குன்று நாடர் வேற்றிடம் செல்லுதல்.

வெறியன் வருவதையறிந்த - வெங்கலக் குன்று நாடருமே
வேந்தன் தூக்க வருமுன் - வெட்டி விட்டார் தன் மகளை
வெட்டியே தானும் போட்டு - வேற்றிடம் போகலுற்றார்
மணவாளக் குறிச்சிக்குவந்த - மன்னவன் தானுமங்கே
மங்கையைத் தான்பார்த்து - மகா துன்பந்தானாகி
செப்ப வொண்ணாத்துயரமுடன் - சேர்ந்தானாண்மனைக்கு

மார்த்தாண்டன் நாடர்களுக்குக் கொடுமைகள் செய்தல்

இப்படியாகத் தானுமிங்கேயவன் - இருந்துவரும் நாளையிலே
நாடர் குல மக்களுக்கு - நயவஞ்சகமுடனே
கெடுதிகள் பல செய்தான் - கேரளமன்னனுமே
கொடுமைகள் மிகச் செய்து - கொற்றவனா ராளுகையில்

பப்பு தம்பி ராமன் தம்பி இவர்களின் அரசியல் சூழ்ச்சியால் இறப்பது

மார்த்தாண்டவர்மாவை - மாள வைக்க வேண்டுமானால்
சூழ்ச்சியது நாம் செய்து - சூதகமாய் கொல்வதற்கு
அத்தானிடம் சென்றார்கள் - அதிகவுறவாடுவதுபோல்
கோட்டை வாசல் காக்கும் - கொத்தவாலப்போது
தம்பி சகோதரரைத் - தடுத்துமே நிறுத்தி விட்டான்
அண்ணன் தம்பி இருவருமே - அத்தானிடம் போகவெண்ணி
காவற்காரனிடத்தில் - கனிவான மொழியுரைத்தார்கள்
திறந்து விட்டான் வாசல்தனை - திடமான சேவகனும்
தங்களுக்குத் தீங்குவராமல் - தற்காத்துக் கொள்வதற்காக
கூட்டி வந்த சான்றோரைக் - கோட்டைக்கு வெளியே நிறுத்தி
சகோதரர்களிருவருமே - தைரியமாய்ச் சென்றார்கள்
செல்லத் தொடங்கியிருவரும் - சேர்ந்துமே போகையிலே
வரக்கண்டங்கே - வளைந்திருந்த பேர்களெல்லாம்
சேரநாட்டு மன்னருடன் - சேரத்திரண்டவர்கள்
சப்தபலந்தானுமுள்ள - சான்றோர்களறியா வண்ணம்
தந்திரமாய்க் கொன்றான் தானே - மன்னரின் மக்களையும்
கொன்றுகுவித்துவிட்டான் குலச்சான்றோர் மக்களையும்
அச்சத்தினால் ஆனந்த பத்மநாபனும் - ஆத்திமுடி போலாகி விட்டான்
அன்னவரோடு சேர்ந்தனர் - அஞ்சிய சாணரெல்லாம்

மண்டக்கு ராஜாவின் ஆலோசனைப்படியே சிறந்த வீரர்களிருவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி மார்த்தாண்டனோடு போர் செய்வதற்கு டச்சுக்காரனைப் படையுடன் அழைத்து வருதல்

இச்செய்தி தானறிந்து - இருக்கப்பட்டநாடரெல்லாம்
சேரத்திரண்டவர்கள் - செப்புவார் வார்த்தையொன்று

சொல்லுக்கும் வல்லவனும் - சூராதிசூரனவன்
மல்லுக்கும் வல்லவனும் - சூராதிசூரனவன்
மல்லுக்கும் வல்லவனும் - மகாஉபாயத்திலும் பெரியோன்
இருவரையுங்கண்டு - இவர்கள் மனகிழ்ந்து
அர்த்த ராத்திரிக் கூட்டத்தில் - அம்மண்டக்கு ராஜா
அஞ்சாத நெஞ்சமுடன் - அவரெழுந்து சொல்லிவிடவே
கேட்டெல்லோருங்கூடி - கெட்டிதானென்று சொல்லி
ஆகட்டுமென்னவே - அவர்களும் சம்மதிக்கவே
இருபேரும் போங்களென்று - இசைந்துமேயவர்களனுப்ப
புறப்பட்டாரிருபேரும் - புலிநிகர் வீரர் காணம்மானை
நாடியே சென்றார்கள் - நன்னகர் தான் விட்டேகி
தேடியே டச்சுக்காரன் - சீர்பாதம் கண்டணுக
வந்த கருமமென்ன - வாய்திறந்து சொல்லுமென்றான்
அஞ்சாமல் முன்னின்று - அந்த டச்சுக்காரரைப் பார்த்துரைப்பார்
பப்புராமனைப் - படுகொலை செய்தாலும்
மார்த்தாண்டவர்மாவின் - மணிமுடியைத் தானிறக்கி
எங்கள் எதிரியைக் கொன்று - எமலோகந்தான் சேர்த்து
கேரள நாட்டையாண்டிடுவீர் - கெடுதியொன்றும் வராமல்
காத்திடுவீரென்று - கடுகியிங்கே வந்தோம் காண்
தேடியேவபயமிட்டு - சேர நாட்டை விட்டு வந்தோம்
ஆதரித்தீரமானால் - அனைவருக்குங் கீர்த்தியுண்டு
அறந்துணையுமாக்குச் செய்வதென்று - ஆயிரமாயிரம் பேரனுப்பி
[னார்
என்ற சொல்லைத்தான் கேட்டு - ஏதுரைப்பான் டச்சுக்காரன்
நறுக்கிப் பிழிந்தென்னை - நரகத்தில் போட்டாலும்
நாவாலே சொன்ன சொல்லை - நான் தவறப் போவதில்லை
எந்த விதத்திலேயும் - இடரகற்றிக்காத்திடுவேன்
என்று சொல்லிப் படையுடனே - எழுந்து வாரான் டச்சுக்காரன்
கூட்டியே வந்தார்கள் - குளச்சல் துறைமுகத்திற்கு
இருதரத்துப் படைகளுமே - எதிர்த்துப் போர் செய்தனவே
சண்டை செய்ய வந்த - சான்றோர் படைகளுடன்
டச்சுக்காரன் படையும் சமர்தனக் காற்றாமல்
பட்டசேர்வைகளெல்லாம் - பார்த்துரைக்கக் கூடாது
செத்து மடிந்த சனங்களெல்லாம் - செப்ப முடியாது காண்
சேர ராசன் சண்டையிலே - சேனைபடைகள் மாளுகிறார்
இவ்விதமாய் பாளையக்காரர் - ஓடாக் கூடமாகி நிற்கையிலே
வந்த நல்ல டச்சுக்காரனு - வந்த வழியேயோடி விட்டான்

எட்டு வீட்டுப் பிள்ளைமார்களும் நாடர்களும் சேர்ந்து முன் நடத்திய சதிகளையும் பின் நடந்த நிகழ்ச்சிகளையும் மார்த்தாண்ட மன்னனிடம் மந்திரி எடுத்துக் கூறுதல்

வெற்றிகள் கொண்டாடி - விமரிசையுடன் தானடத்தி
மக்களைக் கொன்ற பாவி - மார்த்தாண்ட மன்னனிடம்
நீசனென்ற மந்திரியும் - நேரில் வந்தேது சொல்வான்
முன் நடந்த சதிகளையும் - பின் நடந்த நிகழ்ச்சிகளையும்
எல்லாம்தான் கேளுமென்று - எடுத்துரைக்க மன்னனிடம்
மன்னவனுங்கேட்க - மந்திரியுமேது சொல்வான்
மன்னவரே எங்கள் - மகிமையுள்ள ராஜாவே
முன்னிருந்த மன்னர் - முந்நாள் குடிகள் குறைதானறிய
தன்தேசத்து மக்களுக்குத் தான் காட்சியுமளிக்க
பல்லககு மீதேறி வீரப் - படைகளுஞ் சூழ்ந்துவர
முன்னே சென்றதொரு - முன்னோடும் சேவகனறியாததால்
மன்னர் பவனிவரும் - மகிமையுள்ள நாளையிலே
இராஜனைக் கொன்று - இராஜ்ஜியத்தைக் கைப்பற்றவெண்ணி
எட்டு வீட்டுப் பிள்ளைமார் - ஏற்ற திட்டம் வகுத்தபடி
சோழ நாட்டை யிழந்து - சூழ்ச்சிக்கார நாடரும்
பாண்டிய நாட்டை யிழந்த - பண்புகெட்ட நாடரும்
சேர்ந்துமேயவர்கள் - தேசத்து ராஜனென்றெண்ணாமல்
பார்வதிபுரமருகில் - பந்தத்தைத் தானணைத்து
படுகொலை செய்யவெண்ணி - பலித்த மட்டும் பார்த்தார்கள்
பத்மநாப சுவாமியின் - பக்தியுள்ள பக்தனவன்
தாமதித்திங்கிருந்தால் - தனக்கு வரும் மோசமென்று
பல்லக்கின் திரையை நீக்கிப் - பக்கத்திலுள்ளோரறியாமல்
ஆலவழுதிலேறி - அவர் மறைந்து தாமிருக்க
கொண்டுமே சென்றார்கள் - கொற்றவனிருப்பதாக
சென்ற சிவிகையின் பின்னே - சென்றார்களெல்லோரும்
அத்தருணம் பார்த்து - அவரிறங்கியேயோடி
விக்கினங்கள் வராமல் - விரைவில் வரும் வேளையிலே
எதிரில்வருமொருவனைக்கண்டு - யாரவனென்றார் வேந்தன்
யாரென்று கேட்டதற்கு - எதிரே நின்றவன் தானும்
பறையனென்று பகரவே - பறையனைத்துணையாக்கிப்
பக்கத்திலுள்ளோரறியாமல் - [illegible] மன்னர்

சூழ்ச்சிகள் செய்தோர்க்குச் - சொல்லொண்ணுத்துயருண்டாக்கினுர்
முன்னுலிவர்கள் பட்டதை - முற்றிலுமெண்ணுதசான்ஞேர்கள்
பின்னுமுள்ள நாடர்களும் - பிரபலமாயொன்று சேர்ந்து
நாடர்சமர்த்துகளும் - நாட்டாண்மை பேசினதும்
யாழ்ப்பாணஞ் சென்றதுவும் - அங்கு வியாபாரிடச்சுக்காரனைச்
சண்டைக்கு முஸ்தீப்பாய்ச் - சாணர் வரச் செய்ததுவும்
அவரெடுத்துச் சொல்லுகையில் - அரசருங் கோபமுற்று
அமைச்சனிடமரசர் - அத்தருண மேதுரைப்பார்

நாடெங்கும் அறியும்படி நாடர்குலத்தோரை இழிவு படுத்தல்

எங்காளும் பகையாளியாய் - ஏற்பட்ட இவ்வினத்தார்
நாடெல்லாம் புகழ் பரவிய - நாடர்குல மக்களைத்தான்
நாடெங்கும் தலை தூக்காதிருக்க - நல்ல சட்டம் வகுப்பதற்கு
ஆலோசனை சொல்லும் - அமைச்சரேயென்றுனரசன்
அமைச்சனுமப்போது - அரச மன்னர்க்கேதுரைப்பான்
சிறப்புடையவரில்லை யென்று - செகமெண்ணச் செய்திடுவோம்
சேரநாட்டரசே யென்று - செப்புவான் மந்திரியும்
வலிகுன்றிய பகைவர் - வந்துமே பணிந்தாலும்
வாய்ப்புக் கிட்டுமேல் - வலிபெற்று வாகை சூடுவர்
அரசனும் அமைச்சனின் - அறிவுரை ஏற்றுக்கொண்டான்
வகுத்தாரே சட்டமது - மன்னர் சொற் கேட்டு மந்திரியும்
நல்ல குலமான - நாடர்குல மக்களைத்தான்
நாடரென்றும் சாணரென்றும் - நவின்றுரைக்கக் கூடாதென்றும்
நாட்டையுடையவரென்று - நாடெங்குமறியாதபடியே
நளின மொழி பேசி - நகைத்திடும் படியாகவே
புகழுடையாள் வளர்த்த - புட்டாபுரக் காளி மக்களைத்தான்
இகழுறும் பனையேறுஞ்சாதி - ஈனரென்றவன் பரப்புவதற்கு
பனையேறுங்கோத்திரமென்று - பனையேறி நாடகமியற்றினுனே
நாடரென்ற நற்பெயரும் - நாடெங்கும் போற்றப் பெற்றவரை
நாடரென்று இழிவு படுத்தி - நாடகமாடியே காட்டினுன்
சாணரென்ற நற்பெயரும் - செகமெங்கும் போற்றப் பெற்றவரை
சாணுரென்று வேடம் பூண்டு - சகல பேருக்கும் காட்டச் செய்தான்
ஆட்டத்தைப் பார்த்து - அகமகிழ்ந்தார் நாடரல்லார்
சாணர் துயரத்தைச் - சாற்றுகின்றேன் கேளீர்

மூன் காளி கூறிய மொழிப்படி - மூண்டது காண்பனேயேற
முன்னுட் பெருமையும் - இந்நாட்டுச் சிறுமையும்
சாணரது முறையைச் - சாற்றுகின்றேன் கேளீர்

சிந்து - கண்ணி

1 மண்மீது பனையேறலாச்சே - எங்கள்
வாள்வலியும் தோள்வலியும் போச்சே
விண்முட்டிச் சென்ற புகழ் போச்சே - இந்த
மேதினியில் கெட்ட பேராச்சே

2 அன்றன்னை சொன்ன தொழிலைத் கொள்ளலாச்சே முந்தை
அரியனைய வீரர் பேரை அழிக்கலாச்சே
விண்மை வீரச்சாணர் நாமன்றோ - இந்த
வீண் வாழ்க்கை வாழ விதியாச்சே

முன் காளி மொழிந்த - முறைப்படியே சாணர்களும்
சென்றவரும் சிவகாளிதன் - திருவடியைப் பூண்டு கொண்டு
தாலமதில் சகல தொழில் - தானேறி முறை நடத்தி
கலசமது தான் நிறையக் கறந்தானே யமுதுதனைக்
கொண்டு வந்த அமுது தனைக் - குடியும்மக்காள் எனக்கொடுத்தான்
ஆண்டரு மனைவரும் - அமுதுதனைத்தான் குடித்தார்
அந்நாட்டில் பனையமுது - இறக்குந் தொழில் கொண்டார்கள்
இச்சூத்திர மறியாத - இந்நாட்டரசனுமே
இத்தொழிலை யிழிவு படுத்தி - இட்டானே நாடெங்கும்
பனையேறுந் தொழிலாளரென்று - பனையேறி நாடகம்நடத்தினுனே
மன்னர் தெருவிலும் - மாமறையோர் தெருக்களிலும்
போகவே கூடாதென்று - பொருந்தாச் சட்டந்தான் வகுத்தான்
நாலுசாதிக்குள் கீழ்ச்சாதி - நாடர் குலத்தோரென்றும்
அழுந்தத் துயரப்பட்டே - அடிமையூழியஞ் செய்யும்படி
இட்டானே சட்டமது - இவர்களுக்காகவேதான்
சாணரென்பவரைச் - சாணுரெனவுரைத்தான்
சான்ஞேர் குடிநடுங்கவே - சதிசெய்து கொள்ளையிட்டான்
கெடுதி வந்து தான் பிறந்து - கேள்வியற்றுப் போனதினுல்
குருப்பன்மார் நாயன்மார்கள் - கொடுமை மிகச் செய்யலுற்றுர்
இனியென்ன செய்வோம் - இவனுட்சியிலிருக்கவொண்ணுது
மூன் நீச ஆத்திமுடியால் - மூண்டகலகமதில்
முன்னுள் ஆண்டதலமும் - முதியோர் வைத்திருந்த செல்வங்களும்
நம்முடைய சொத்துக்களும் - நாடுமிழந்து வந்தோம்

இவ்வரசன் சீமையிலே - இங்குள்ள நம்மினத்து
ஆடவரும் பெண்டிருமடையும் - அநியாயம் பொறுக்க முடியாது
எல்லோருக்குமரசன் - இடுக்கணது செய்ததினால்
யாபேரும் மெத்த - அறமெலிந்தாரம்மானை
இபபடியேயிவன் செய்யும் - இன்னலுக்காற்றாமல்
அப்படியே மாகாளிக்கு - அபயமிட்டேயவர்கள்
இனியிங்கிருந்தால் - இந்நாட்டிலெங்களையும்
பாவமாய் ராஜன் - பலமுள்ளோரைக் கொண்டு
ஏவல் தான் கொள்வான் - இடுக்கமது செய்வானம்மா
ஊழியங்கள் செய்யென்பான் - உயிரோ பிரியுமம்மா
ஆதரித்தெங்களையும் - அன்பாகக் காத்திடுவாய்
மார்த்தாண்டனென்ற - மாபாவி யேதுவினால்
மானமதுகெடாமல் - நாடுவிட்டுப் போரோங்காண்
கூட்டோடுதானெழும்பி - கொடியவீரச் சான்றோருடன்
பொன்னும் பொருளுடனே - புகழும் மண்டக்கு ராஜருடன்
மண்டக்காட்டு அம்மனையும் - மருகியே தெண்டனிட்டு
கைமாறு கருதாத - கருணை காளியை வழிபட வலமாய்வந்து
மகாளி கோவில் முன்னே - மனமுருகிப் பாடுகின்றார்

விருத்தம்

1 தாருகன் தன்னைக் கொல்லவென்று தாமோதரனிடம் வரங்கள் பெற்று
காருண்யமானவெங்கள் குலமுன்னோன் கைக்குழந்தையா யிருக்கும்போது
பாருலகறிய பரஞ்சிவமறிய பாலர்களைக் குறைவிலாது காப்போமென்று
மாறிலாவாக்களித்தும் மாநிலவரசனுக்கி யாட்கொண்ட தாயே

விருத்தம்

2 அரசன்செய்த தீங்கினாலே யனைவருமொன்று சேர்ந்து
கரவடர்களைப்போல் கசக்கியே வாட்டுகின்றார்
அறமெலிந்துடல்கள்வாடி யனுதைபோலானோம்மா
தரத்திலுயர்ந்த சான்றோர் தங்களை யாட்கொள்வாயம்மா

விருத்தம்

3 படைக்கலாகத்தானிருந்து பாரிதனையாண்டோமுமதருளால்
அடைக்கலமாகவெங்களையு மாதரித்தாண்டவன்னையரே
கடைக்குலமென்றெங்களையுங் கதறப்பிடித்தடிமையாக
மடைக்குலமானமாநீசன் மாராட்டஞ் செய்தானம்மா

அம்மானைச் சீர் நடை

தாருகனைக்கொல்வதற்குமித் - தரணிதனையாள்வதற்கும்
பிள்ளையாய்ப்பிறந்துவந்த - பேர்பெரியசாணர்களைத்
தாட்டிகமாய்த்தான்வளர்த்து - தரணிதனையாண்டுவந்த
பேர்பெரியகுலமாய்ப் - பெருகித்தழைத்தோங்கி
பெரியகுடியாகிப் - பேர்பெற்றுவாழ்ந்துவந்தோம்
வாழ்ந்துவரும் நாளில் - வகைமோசம் செய்யவெண்ணி
பாவிநீசக் கலியனிவர்களைப் - பிரித்துவிட வேணுமென்று
சூதுசெய்து பாவியவன் - சூனியங்கள் வைத்தல்லவோ
ஒற்றுமைதனைக் குறைத்து - ஒடுக்கி வதைக்கின்றான்
சாந்த குணமான - சான்றோர்களெங்களைத்தான்
படைக்கஞ்சாவெங்களையும் - பத்திரமாகாளியரே
பதைபதைக்க நெஞ்சம் - பதறும்படி செய்கின்றான்
காளிதிரிசூலிகாமாட்சி - கண்ணனுட தங்கையரே
தாருகனைக் கொன்று - தருமநிலை நாட்டிவைத்த
ஓம்மாதா ஓம்பத்திரகாளியரே - ஓம்பிப் பணிந்தோமம்மா
நாடர்குல மக்களை - நாசஞ்செய்ய வேணுமென்று
யாரெல்லாம் நினைத்தாலும் - எங்களைக் காத்தருளுமம்மா
ஆண்டவளே லோகநாயகியே - எங்களையாதரிக்குங் காளிய
புட்டாபுரத்தில் பிறந்தவளே - பூலோக நாயகியே காளியம்மா
நம்பினபேர்க்குத் துணைசெய்யும் - நாரணனார் தங்கையரே
இந்நாட்டையிழந்தோமே - எழும்பிப்போகுமெங்களை நீ
காட்டிக் கொடுக்காதே - காத்திடுவாய் காளியம்மா
எத்திசைக்குப் போனாலுமெங்கள் - எதிரிமயங்க வேணுமம்மா
சங்கரியே தயாபரியே - தற்காக்க வேணுமம்மா
எங்களுடன் சடையாமல் - எழுந்தருளிநீ வரவேணுமம்மா
பாண்டிக்குப் போறோமம்மா - பக்க துணையாய் வாருமம்மா
வடக்குவாசல் மடக்கொடியே - வந்து துணை செய்யுமம்மா
என்றுசொல்லி யடிதொழுது - எல்லோருந்தானுமிங்கே
புறப்பட்டார்களந்நேரம் - புகழும் மலையாள தேசம்விட்டு

பாண்டிய நாட்டிலுள்ள செந்திலம்பதியைச் சார் மூலைப்பள்ளியில் வந்து மூவரருளாலே குடியேறுதல்.

புறப்பட்டுமே வாரார்கள் - போரில் வல்ல சான்றோர்கள்

மூப்பந்தரம் வழியாக - முகுந்தனை நெஞ்சில் நினைத்து
வேப்பிலாங்குளமதுவும் - விரைவாகத்தான் கடந்து
இட்டமொழியில் வந்து - இரவு கழித்தார் காணம் மானே
சாத்தான்குளம் மார்க்கமாக - சமர்த்தார்களும் வாரார்கள்
பன்னம் பாறையில் வந்துமே - பசியாறி வீற்றிருந்து
எந்தவிடம் போவோமென்று - எண்ணினர் காணம்மானே
எண்ணியேயாராய்ந்து - ஈசனைத்தான் நினைந்து
ஈசான மூலை நோக்கி - ஏகிவாரரெல்லோரும்
சோனகனுக்குப் பயந்து - சோனகனுனவராயிருந்த
மூலைப்பள்ளியில் வந்து - மூவரருளாலே தங்களுக்குக்
கொடுத்துவிடமென்று - குடியிருந்தாரெல்லோரும்
குடியிருந்த கொற்றவர்கள் - கும்பிட்டடிதொழுது
இறைவன்மேல் வருத்தங்களை - இன்னிசையால் பாடுகின்றார்

பன்னிருவர் ஸ்தோத்திரம்
விருத்தம்

கரிமுகவன் கரிமருகன் கானக வள்ளி காமாட்சியம்மை
அரிமுகுந்தான் அருணாசலன் அம்பிகையாள் அமிர்தவல்லி
திரிகண்ணன் திருக்கழுக்குன்றன் திருமா துமையாள் திரிசூலி
திரி நால்வரோடைவரையுந் தினமு மெந்தன் சிறமேற்
கொண்டோம்

விருத்தம்

சோழ நாட்டரசரனுகிச் - சொகுசுடன் வாழ்ந்திருந்தோம்
சோழனும் ஆத்திமுடி - கொடுமை செய் தீவினையினாலே
தோழமை சுற்றத்தோடுந் - தொல்புவி சேர நாட்டில் தானே
வேழமுரித் தோளருளாலே - வீரர்களாய் வாழ்த்திருந்தோம்.

விருத்தம்

மாசேனென்ற மார்த்தாண்ட - மன்னன் செய்
கொடுமையினால்
மாசேனவன் தன் பதியும் விட்டு - வருந்திவாடி மக்களெல்லாம்
மானீன்றெடுத்த வள்ளிவாழும் மங்காப் பதியின் தன்னருகே
கானீர் பாய்ந்து வளங்கொழிக்கும் - கனக மூலைப்பள்ளி வந்தோம்

விருத்தம்

வந்திருந்து குடி புகுந்தோம் வலுவுந்தருவாய்
வாழ்வருள்வாய்
நந்தா முகுந்தா நரசிம்மா நாட்டையிழந்து வந்தவர்க்கு
கந்தா கடம்பா காளத்திநாதா காமாட்சித்தாயே கனகவல்லி
எந்தாய்பத்திரகாளியரேயெங்களை யாட்கொள்வாயம்மா

அம்மானைச் சீர் நடை

இன்னிசையில் விருத்தங்களை - இறைவன் மேற்பாடினர்
காணம்மானை
இப்படியாயிவர்கள் - இருந்துவரும் நாளையிலே

மண்டக்கரசர் மலையாளம் போக விரும்புதல்

மன்னர் இறந்ததைக் கேட்டு - மனச்சந்தோசந்தானுகி
மலையாளம் போக வேணுமென்று - மண்டக்கரசரும் நினைத்து
மண்டக்காட்டில் வாழும் - மாகாளியைத் தொழுது வர
மண்டக்கு ராஜாவும் - மகிழ்ச்சியுடனே புறப்பட்டார்
புறப்பட்டுத்தானும் வந்து - புகழ்காளியைத் தொழுதார்
அவ்வூரில் வாழும் - அங்கொருவனைத்தானழைத்து
மருகன் நிலையறிய - மண்டக்கரசருங் கேட்கலுற்றார்
கேட்டபோதவனும் - கெடுமதிராமவர்மாவுக்குக்
கோபந்தணியவில்லையென்று - கூறினன் காணம்மானை
மன்னர் கோபந்தணியாததால்மாகாளியைத் தான்வணங்கி
தென்மலை மருகனைபார்த்து - திரும்பி வரவேணுமென்று
நடந்தார் தென்மலைக்கு - நடுச்சாம வேளையிலே

மண்டக்கரசர் மலையாளம் போய் திரும்பி வரும்போது தென்மலை மருகனைப் பார்த்துவிட்டு செங்கோட்டை வழியாக தென்காசிக்கு வருதல்.

மருகனைப் பார்த்துவிட்டு - மண்டக்குராஜருமே புறப்பட்டு
செங்கோட்டைதான் கடந்து - தென்காசி வந்துசேர்ந்தாரங்கே

கோட்டை சிவனணைந்தபெருமாளைத் தன்கூடவே வரவேண்டுமென்றழைக்க அவரும் புறப்பட்டு வருதல்

கோட்டை சிவனணைந்தார் - கோயிலிற் கொடை நடக்க
அக்கோவிற்சென்று - அவர் கும்பிட்டு வரும்போது
தன்னோடு தன்பதிக்குத் - தான்வரவேண்டுமென்று

முன்னின்று மருகியபடியாலே - மூலப்பள்ளி தானோக்கி
கூடவே வந்தார் - கோட்டை சிவனணைந்த பெருமாளும்

[கோட்டை சிவனணைந்த பெருமாள், மூலப்பள்ளிக்கு வந்து சேர்ந்தார் என்பதற்கு அடையாளமாக மண்டக்கரசர் மகளை அடித்துக் கொன்றுவிடுதல்]

விரைந்துமே ஊர்வந்து - வீட்டு வாசலைத் தான் தட்டி
அம்மாவெனக் கூப்பிட்டவர் - அழைத்தார் மகள் தனையும்
அய்யா சத்தங் கேட்டவுடன் - அருமை மகளோடி வந்து
கதவை திறந்தவளுங் - கருத்துடன் நிற்கையிலே
நின்றவள் தானும் - நிறை கற்பமானதினால்
மூதாக்கள் செய்த வினையோயிவள் - முன் செய்த தவக்குறையோ
கூடவே வந்ததொரு - கோட்டை சிவனணைந்த பெருமாளும்
வீரிட்டுப் பாய்ந்து - விரைந் தடித்துக் கொன்று விட்டார்

மகள் இறந்ததைக் கண்டு தாய் அலறிப் புலம்பிடுதல்

அப்போது தாய் தந்தையர் - அதிக துயரமுற்றாங்கே
அடியற்ற மரம் போல் விழுந்து - அலறிப் புலம்பிடுவார்
குய்யோ முறையோவென்று - கூக்குரலிட்டேயழுதார்
யார் செய்த தீங்கிதுவோ - யான் செய்த வினைப் பயனோ
முன் செய்த தீவினையோ - மூதாக்கள் சோதனையோ
என் செய்வோம் மாகாளியரே - எங்கள் வினையகற்றுமம்மா
என் பிள்ளாய் ரத்தினமே - எங்கு ஒழித்தாய் கண்மணியே
கண்ணே மணியேயென் கனக நவரத்தினமே
பொன்னே பொருளேயென் - புதுமையுள்ள பூமணியே
பூவும் மணமும்போல - பொருந்தியிருந்தோம் மகளே
எந்தனை நீயே விட்டு - எங்கு சென்றாய் கண்ணே.
உந்தனை விட்டுயான் - உயிர் வாழேனொரு நாளும்
உத்தமியென் கண்மணியே - உயிர்க்குயிரான மகளே
என்றுவமை சொல்லி ஏங்கி மனந்தள்ளாடி
தத்தளித்துத்தள்ளாடித் - தயங்கி முகம் வாடிடுவர்

விருத்தம்

(1) உயிரது பிறிந்த போதுவுருகியே மனந்தள்ளாடி
வயிறது பற்றியெரிந்து - வகையுடன் மகளை நோக்கி
வயிர முற்றிலங்கும் மேனி மரகதவடிவேயம்மா
கயவன் நான் செய்தீங்கென்று கதறினார் பதறினாரே

விருத்தம்

(2) அய்யனே சிவனணைந்தோனே யடியேனைக் காக்கா வா வா
துய்யனே யெனைத்தொடர்ந்தோனே துயரதனை மாற்ற வா
மெய்யனெ மாயோனே மெய்மறந்துயிர்கள் சோர்ந்தோம்
செய்யனே சிவனணைந்தோனே சீக்கிரங் காக்க வாவா

அம்மானைச் சீர் நடை

வருவாய் வருவாய் சிவனணைந்த பெருமாளே வந்திடும் தீவினையந்திடவே
வந்தெங்கள் சங்கடம் - தீர்த்தெனையாட்கொள்வாயென
வருந்தியழைத்தபோது - வந்தருள் ஏறியது
அருளேறியப்போது - ஆதாரணை தானுண்டாகி
பதறாதீர் மக்காள் - பருந்துரைக்கின்றேன் கேளிர்
அம்மனை வணங்கிவரக்கூடவே - அச்சிவனணைஞ்சி யணைந்த பெருமாள்வந்ததா
தெய்வத்தம்மனென்று - தெரியவே செப்பினார்காணம்மானை

கோட்டை சிவனணைந்த பெருமாளுக்குக் கொடை கொடுத்தல்

முன்னடையாளமாகவே - முடிந்ததிந்த காரியங்கள்
ஆனதினாற் சொல்லுகின்றேன் - அறிவுள்ளவெந்தன் மக்காள்
கோட்டை சிவனணைந்த பெருமாள் - கொடி விருது கட்டவந்தேன்
ஆனதினால் மக்காள் - ஆண்டுக்கொருமுறைதான்
கொடைபோட்டுத்தந்தால் - குடி பெருகி வாழவைப்பேன்
எந்தனுக்கு கொடை தந்த - ஏற்றதொரு நாற்பதாம் நாள்
குழந்தை கருப்பவதி தனக்கு - கூடிநீங்களெல்லோரும்
ஒற்றுமையாய் நீங்கள் - ஊட்டுப் போட்டுக் கொடுங்கள்
என்று சொல்லி விளக்கமாய் - எடுத்துரைத்தாரவர்களுக்கு
அந்தவுரை கேட்டவர்கள் - அப்படியே செய்யும் போது

[இகழ்ந்து பேசிய இஸ்லாமியர்களை அடித்து விரட்டுதல்

அங்குள்ள துலுக்கர்கள் - அகம்பாவமாகவே தான்
இகழ்ச்சிகள் சொல்லி - இடும்பான வார்த்தைபேச
அவ்வார்த்தை கேட்டு - அடங்காத கோபங்கொண்டு
சிவசுப்பிரமணியன் தம்பி - சிவனடியான் சாடவே

வீரர்களரிந்து - வெகுண்டு சினந்தெழுந்து
சாடவே மகம்மதிய - சாதியார்களையெல்லாம்
போடவே வெகுண்டு - புறங்காட்டி ஓடலுற்றாரவர்கள்
ஓடினவர்களைப் பிடித்து - ஒரு நொடியிற் கொண்டு வந்தனர்
வந்த துலுக்கரிடமுங்கள் - வகைவிபரம் சொல்லுமென

[முகம்மதியர்கள் தங்களுக்கு இந்த இடம் கிடைத்த வகை விபரங்களை நாடர் குலப் பெரியோனிடம் நவிலுதல்]

சொல்லுவார் வார்த்தையென்று - சொற்பெரியோனிடம்
மதுரை வாழ் மன்னன் - மகிமையுள்ள திருமலை நாயக்கருக்கு
மதிப்புங்கடங்காக் குதிரைகளை - மகம்மதியர் தான் கொடுத்தார்
கொடுத்தந்த குதிரைகளுக்கு - கொற்றவனும் மனமகிழ்ந்து
முதலியார் பிள்ளையான - மூலப் பரிவாரனை மரைக்காயனுக்கு
சோனகன் பட்டிணத்தான் - சொந்த மகதூம் பள்ளிக்கு
சொக்கலிங்கன் திருமலை நாயக்கருக்கு - சொந்தமுள்ள இடமதில்
தாமிர சாஸனமதிலெழுதித் - தான் கொடுத்த பகுதியொன்றிது

நாடாண்ட மக்கள் நாமிருக்க, இங்கு காவல்காக்கும் காப்பருக்கு காணியேது என்று கூறி அவர்களை வேறிடத்திற்கு விரட்டும்படியாக மண்டக்கு ராஜா தன் வீரர்களை ஏவுதல்

அந்தவுரை கேட்டு - அத்தருணமேது சொல்வார்
வேற்று நாட்டு மன்னர் - விஜய நகர் வேந்தனுக்கு
பலவரி வசூலிக்கவந்த - பாளையக்காரத் தலைவனுக்கா பூமி?
மண்ணிலத்தையாண்ட - மன்னர் மக்கள் நாமிருக்க
நாடாண்ட மக்களான - நாடர்கள் தாமிருக்க
கம்பாயம் கட்டுமிங்குள்ள - காப்பருக்குக் காணியேது?
விரட்டுங்கள் சோனகனை - வேறிடம் போகும்படி
துடியுடையாள் மரபு நாமிருக்க - துலுக்கருக்குக் காணியேது?
என்று சொல்லித் தலைவருமே - ஏவினராட்களைத்தான்
வீருறு மொழிதானுரைக்க - வீறுகொண்ட சான்றோர்கள்
சீறியெரிபறக்கச் - சிங்கக்குட்டி போலெழும்பி
மீறினுலடிக்கவும் - விடைபெற்றவர்களேகி
விரட்டினுர் சோனகரை - வெளியேறி விட்டார்களந்நேரம்

[மண்டக்கரசர் குடியிருந்து கிராம ஆட்சி புரிதல்]

வந்தவரும் நன்றாய் - வலுவுள்ள குடித்தனமாகி
வரிசையுள்ள கிராமபதிக்கு - வலிமையான தலைவராகி
குடிகள் பொருளைக் - கொள்ளையர்கள் கவராமல்
ஊர்க்காவல் பயிர்க்காவல் - உற்றதொரு எல்லை காக்க
முத்துமாலை விளை தேவரைக் கொண்டு - முறைமையுடன்
தானுண்டா
இவரைப்போலாண்ட - இவர் மகன் திரிலோசனனென்ற திரவிய
துலுக்கண் கூட்டமிருந்த - துலுக்கருமிப்படியே சொல்ல
துன்பங்களுண்டாகித் - துரத்தி விட்டார் திரவியம்
துன்பங்களடைந்துமே - துரத்தப்பட்ட துலுக்கர்களை
கொத்துப்பாகாயினூருக்குக் - கூட்டியே சென்றார்
அங்குள்ள காணிகளுக்கும் - அசையா எல்கைக்கல் போட்டு
தண்டாரெல்லைக்கு வடக்கு - தனதெல்லைத்தெருவாண்டி மடத்து
குறகு
மணக்காட்டூரிலிருந்து பூமியைக் காக்க - மறவர்களைக் குடியேற்
முற்றமையுடனுளுகையில் - முதலிகணக்கன் வயிரமுத்துக்கு
முப்பது பொன்னுக்கு - முப்பத்திநாலு ஏக்கர் பூமி
ஓலைமுறிப்பத்திரத்தில் - ஒப்பமிட்டுத்தான் கொடுத்தார்
கொடுத்தார்களெழுதிக் - கோவில் விளைப்புன்செயில்
இப்படியாயிவர்கள் - இருந்து வரும் நாளையிலே

பனையேறி நாடகமதைப் பரவவிடாமல் தடுத்த வீரனுக்குப் பரிசு என்ன வழங்குவது, இராமகிருஷ்ண நாடருக்கும் அவர் பரம்பரையினருக்கும் கழனியில் முதல் வெற்றிலை கொடுக்கும் மரியாதைப் பரிசிலாக வழங்குதல்.

குரும்பூரை விட்டு - குடியெழும்பி இராமகிருஷ்ணன்
பட்டினமும்போய் - பலகாலமங்கிருந்தார்
பனையேறி நாடகத்தானைப் - பரவவிடாமலொழித்த வீரனுக்குப்
பரிசிலென்ன கொடுப்பதென்று பரிசீலித்தார் மேதைகள் கூடி
பட்டினம் குரும்பூர் நாடரைப் - பார்த்துமேதான் கூப்பிட்டு
கழனியில் முதல் வெற்றிலை - கட்டாயம் கொடுக்கும்படி
கிராமத்து நாடரெல்லாம் - கிளைகூடியிட்ட சட்டமிது
மார்த்தாண்ட மன்னவன் - மாகாளி மக்களைத்தான்

அறிவில்லாச் செயலென்று - அனைவருமறியும்படி
எடுத்துக் கூறியெல்லார்க்கும் - எதார்த்த ஒளியும் தெரியச் செய்தல்

சான்றோர்கள் வரலாற்றை மங்கள வீடுகளில் மண வாழ்த்தாக உரைப்பதற்கு திரவிய நாடார் பண்டாரத்தை நியமித்தல்

வித்தியாதரமுனிமக்கள் - வீரர்கள் வரலாற்றை
மங்கள வீடுகளில் - மணவாழ்த்தாகவுரைப்பதற்கு
சங்கு பெருக்கி பண்டாரம் - சகலரையும் வரவழைத்தார்கள்.
வந்த பண்டாரமெல்லாம் - வணங்கியங்கே கூடியிருக்கவே
ஏழு கிராமத்து நாடர்கள் - எல்லோரும் ஏக மனதாகக்
குடிபொருந்திய திரவிய நாடரிடம் - குடியிருக்க இடங் கொடுக்கும்படி
கேட்டார்களதற்கவரும் - கொடுப்பதாகச் சம்மதித்தார்
அப்படியே சம்மதித்து - அவருக்கு வடகிழக்கில்
இரண்டேக்கர் பதினாலுசெண்டு - இடத்தையவருமேயினுமாக
சங்குபெருக்கும் பண்டாரத்திற்குச் - சன்மானமாகக் கொடுத்து விட்டார்
வாழ்த்தோலைபடித்து - வாழ்த்துங்கள் பண்டாரங்கள்
வாழ்த்தியவுங்களுக்கு - வந்துமே தருவார் படியரிசியும் பணமொன்றும்
ஊழியத்தைச் செய்து - ஊதியத்தைப் பெறுங்கள்
அப்படியே செய்கிறோம் - ஆனாலுமிது போதாதென்றார்
தம்புரு அடியுங்களென்று - சாதனங்களுங்கொடுத்தார் திரவியம்
அந்தப்படி நடப்பதாக - அவர்களும் சம்மதித்தார்கள்
வாழ்த்தோலை கைகொடுத்து - வரலாற்றைப் படியுமென்றார்

[நாடர்களது வரலாற்றைக் கூறும் வாழ்த்து]
[மணவறை வாழ்த்து]

ஆதியிலோர் நாளையிலே - அருந்தவத்தோர் தானிருக்கும்
அந்தகாரம் நிறைந்த - ஆரண்யமானவனமதில்
அமிர்தநீர் பொய்கையை - அடைந்துமே கன்னியர்கள்
ஆடும் நீராடியே - ஆடலுடன் பாடலுமாய்
அவர்களெல்லாம் நீராடி - அங்கு நிற்கும் வேளையிலே
அவரழகைக்கண்டு - ஆசைகொண்ட வித்தியாதரர்
அக்கினியாய் நிற்கங்கே - அகவிரையல் கொண்டவரிவையர்கள்

அக்கினியையணுகிடவே - ஆறுமொரு மைந்தரை
அவர் வாரித் திரட்டியே - அம்மனுட கைலீந்தார்
அம்மனும் குழந்தைகளை வாங்கியே - ஆலயஞ் சென்றேகி
அமிர்த சஞ்சீவிதனை - அப்பாலகர்க்கீந்தாள்
அம்மையுடகடாட்சத்தால் - அதிசமர்த்தர்களானார்கள்
இப்படியாயிவர்கள் - இருந்து வரும் நாளையிலே
ஒருநாளொருசமயம் - உற்றதொரு சோழனுந்தான்
எழுவரிலொருவனைத்தான் - ஏறிட்டுத்தான் பார்த்து
எழிலோடுதான் விளங்கும் - இளம் வீரா நீ யாரெனவே
தென் சோழ நாட்டிலே - திரிலோசனனென்றான்
ஏற்றமுள்ள சான்றோர் குலத்துதித்த - எழுவரில் யானொருவன்
என்றவுரை கேட்டு - ஏற்ற புகழ் சோழனவன்
அன்று முதலவர்களும் - அரசருடவிமரிசை பெற்று வாழ்ந்தார்கள்
பெற்றுமே வாழ்ந்தார்கள் - பேர் பெற்ற சான்றோர்கள் தான்
காவிரியாற்றில் வெள்ளம் - கரை புரண்டோடிடவே
அணையொன்றையடைக்க - அரசனுமாணையிடவே
சேரனும் பாண்டியனும் - சேர்ந்துமே வந்து நிற்க
யானைமேல் பேரிகை யடித்திட - அங்குள்ள குஞ்சுமுதல் வந்துசேர
சான்றோரினத்துதித்த - சமர்த்தன் திரிலோசனனை
கூப்பிட்டு வந்து - கூறிட்டவுன் பங்கையடையெனவே
அச்சம் தவிர்த்த - ஆண்மை மிகு வீரன் யான்
நானுமக்குக் குடியல்ல - நானொரு குறுநில மன்னன்
கொற்றவா! சோழா! சான்றோர் - குலத்துதித்த நாங்கள்
கூடை தொடோம் - கூடைதொடோமெனக் கூற
மண்ணோடுங்கிடங்கிலே - மகுடமுடி தெரியவே
மதயானை கொண்டெய்யுமென - மன்னவனுந்தானுரைத்தார்
மன்னவனுரைகேட்டு - மதயானை கொண்டெய்ய
அத்தலைக் கித்தலை பொய்த்தலையாகுமோ - அறிவில்லாச் சோழ மன்னா
என்று சொல்லி மண்டையது - இத்தரையிலுருண்டோடிடவும்
கோதை பத்திரகாளியுங் - குழந்தைகளைக் காக்கவென்று
கூறும் புட்டாபுரக் கோட்டைவிட்டு - கோபமோடிங்குவந்தாள்
குறுமுனி புலிப்பாணி கொங்கணவர் கேரள நாட்டாரிடம்
சாணர், சத்திரியர் - சான்றோர் நாடர் வந்த
விந்தையுமினி நடக்கும் - விநோதமுங்கூறு மென்றார்
ஈன்றாள் சப்தகன்னி - ஏற்றுவளர்த்தாள் மாகாளி

தளபதியாயமர்ந்தோர் - தரணியரசாண்டோர்
தண்டறிய வாழை - தனக்கிரண்டு குலை வரக்கண்டோர்
செட்டிதோளேறிய - சேனாதிபதி தலைமை பெற்றோன்
சிரம்வெட்டிப் போயினும் - பதில்வெட்டு வெட்டிடுவோர்
சங்கரி குமரிபாலன் - சாணர் காசடிக்குந் தீரன்
நாயக் கரால் நாடிழந்து - நாஞ்சில்நாடு சென்றிடுவார்
தருவறுத் தமுதீவார் - தராசுகைப்பிடித்திடுவார்
மருமக்கள் வழியைச் சேர்ந்த - மார்த்தாண்டனைத்தான் பகைத்திடு
வார்
நாடாண்டா ரென்று - நாட்டிலுள்ளோ ரறியாவண்ணம்
சாணூர் நாடகமிட்டுச் - சகலருக்குங் காட்டுமென்பார்
திருவொன்று வெட்டியே - சபைதனில் நாட்டியே
சாணூர் வேடம் போட்டுத் - தாம் நடித்திடுவார்
தத்தோம் தகிர்தோம் - தாம் தோமெனவே
தங்குமட்டை காணுமல் - தடம் புரண்டாடிடுவார்
அது கண்டு சாணர்கள் - ஆவேசமாய்க் கூடி வந்து
சாணூர் வேடம் பூண்ட - சகலரையும் அடிப்பார்
சாணூர் கூத்துப்போடுவது - தரணிதனில் வேண்டாமென்று
சோழகுலோத்துங்கன் - சொன்னாரெனச் சொல்லி
பாரிலுள்ளோரறிய - பரை சாற்றென்பார் சாற்றென்பாரே

சப்த கன்னி மக்கள் சான்றோர்கள் வரலாற்றைக் கூறும் கட்டும்போது பெண்கள் வாழ்த்துவதற்கு பெரியோர்கள் கூடி ஏற்படுத்திய வாழ்த்து

ஏழு கன்னிகை புதல்வன் - வரிசையுபதேசம் பெற்றோன்
ஈழன்பதியில் - இளஞ்சிறை கொண்ட வேந்தனிவன்
வெள்ளை வட்டக் குடையோன் - வெள்ளானை வேந்தனிவன்
உயர்சிங்கக் கொடியோன் - உயர்ந்த குடிப்பிறந்தோன்
அம்புவிலில் சோழனுடன் - அலைகடலைத்தான் கடந்தோன்
சம்மரனை வெட்டியிரட்டைச் - சங்குவளை பதித்தோன்
வாழைக்கிரண்டு குலை - வரக்கண்ட வல்லோனிவன்
சோழ குலோத்துங்கன் - துரைகள் மெச்சும் வீரன்காண்
குடுகுடெனத் தலையுருளக் - கூடைதொடோமென்றவன் காண்
குலோத்துங்கனுக்குப் பின் - கூருக்கி இராச்சியத்தை
ஆண்டவர் தன்மைந்தனுக்கு - அன்பாய் மணமுடித்து
அனைவரும் கூடியிங்கே - ஆசீர்வதிப்போங் காணம்மானை
வந்திருக்கும் பெரியோர்களெல்லாம் - வாழ்த்துங்களம்மானை.

இராமகிருஷ்ண நாடர் தங்களது இரு பங்கையும் வாங்கித் தருமாறு திரவியம் நாடரிடம் முறையிடுதல்

பிள்ளைவாள் செய்த - பிழைமோசமானதால்
பிறர் துணை நாடி - பிறமார்க்கம் போய்ப்புகுந்தவர்
சொந்தசுகபோக - சொகுசான வாழ்விற்காக
குலப்பெருமை யினப்பெருமை - கூறும் சமயப்பெருமை
இத்தனையும் விட்டகலலாமோ - யென்றுமே மனதிலுன்னி
இஸ்லாமாய்ச் சேர்ந்து - இருக்க மனமில்லாமல்
நாணமும் மானமும் - நயந்த சிந்தையான்
மாண்பும் வீரமும் மனதில்த்தூண்டிட - மகம்மதிய மார்க்கம்விட்
மூலப்பள்ளி திரவியம் நாடரிடம் - முறையிட்டாரப்போது
அய்யாவே நீரெங்களுக்கு - ஆதரவளிக்க வேண்டும்
எங்களின் முன்னோர் தந்த - எந்தன்பங்கை விட்டுவிட்டேன்
விட்டவென் பங்கைக்கொண்ட - விரிவானபங்காளி இலட்சுமண
அவன் ஐந்துபங்குடையோன் - அதிலேயிருபங்கை
இந்தஅபலையாகிய வெங்களுக்கு - இனிவாங்கிக் கொடுத்திடுங்க
எங்களுக்குச் செய்தநன்றி - என்றுமே மறக்கமாட்டோம்
கொடுத்தா லெங்களுட - கொடிவழியும் தழைக்குமையா
என்றிவர்சொல்ல - ஏற்றமுடன் மனமிரங்கி
அப்படியே செய்வதென்று - அத்தருணம் ஆளனுப்ப
அனுப்பிய ஆளும் - அக்கணமே தானேகி
கீழ நாலுமாவடியில் - கீர்த்தியுள்ள இலட்சுமணனிடம் போய்
மூலப்பள்ளி திரவியநாடர் - முன்கூட்டி வரச்சொன்னாரய்யா
அவவார்த்தை தான்கேட்டு - அறிவிளந்த இலட்சுமணன்
அலட்சியமாக வெண்ணி - அகம்பாவ வார்த்தைபேசி
வரமுடியாதென்று சொல்லி - மறுத்துவிட்டாரன்நேரம்
அங்குபோய் வந்தவனும் - அவ்வார்த்தை தானுரைக்க
நம்பிக்கையான நல்ல - வடகரை மறவர்களை
ஆள்விட்டழைத்து - அதிகநிதி தான்கொடுத்து

கீரைத்தாங்கியில் படுத்திருந்த கீழநாலுமாவடி இலட்சுமணனை யாருக்கும் தெரியாமல் அன்றிரவே தூக்கி வருதல்

கீழநாலுமாவடி இலட்சுமணன் - கீரைத்தாங்கியில் படுத்திருப்பான்
இன்றிரவே நீங்கள்சென்று - இருட்டோடிருட்டாக

ஆருக்குமே தெரியாமல் - அவனைத்தூக்கி வந்திடுங்கள்
அப்படியே நல்லதென்று - அம்மறவர்களெல்லோரும்
கீறைத்தாங்கியில் சென்று - கிடந்து தூங்கிய இலட்சுமணனை
இரவோடிரவாக - இராக்கால வேளையிலே
தூக்கியே வந்தார்கள் - துரிதமுடன் மறவர்களும்
கேள்விப்பட்டவுடன் - கீழ நாலுமாவடியில் வசித்தோரில்
இங்கிருந்தால் நம்மைப்பிடித்து - நம்பூமியை வாங்கிடுவாரென்று
மக்கள் ஐந்துடன் - மறுயிடம் போவதென்று
பாட்டக்கரை தேவரை - பக்கபலமாக நாடி அவருமிசைய
நாலுமாவடியை விட்டு - நகண்டு இருப்பதென்று
இடையன்விளை பக்கமாய் - இருந்தார் காணம்மானை
கொண்டுவந்த லட்சுமணனிடம் - குதூகலந்தான் காட்டி
தண்ணீர் கொடுத்துத் - தகுந்த உபசாரஞ்செய்து
வெள்ளைச் சேவல்கறியை - விதவிதமாய் சமைத்து
விருந்தினரைப்போல் - விமரிசையாய்த்தான் நினைத்து
உள்ளமுவக்கும் வண்ணம் - உபசரித்து விருந்தளித்து
தாம்பூலங் கொடுக்கத் - தானும் தாம்பூலந்தரித்து
சிந்தை மகிழ்ந்து - சிரித்துக் கலகலவென்னும்
சந்தோஷசாகரமான - சந்தர்ப்பம் தாமறிந்து
மூலப்பள்ளி திரவியநாடரும் - முகமலர்ச்சியுடனே து சொல்வார்
பங்கிழந்த வுங்கள் இராமலிங்கம் - பசியால் வருந்துகின்றான்
அவனுக்காறுதல் கொடுத்து - அபய மளித்திடுங்கள்
உங்கள் பங்கிலிருபங்கை - உதவுங்களன்னவர்க்கு
எந்தன்மேல் நீங்கள் - இந்நேரம் செலுத்திய அன்பிற்கு
எதிர்மொழியாகச் சொல்லேன் - எதுவுமே வுங்களிடம்
அப்படியே செய்வதற்கு - அன்னவரும் தாமிசைந்து
இரு பங்கைத் தான் கொடுக்க - இணக்கமுடன் சம்மதித்து
ஓலை முறிப்பத்திரத்தில் - ஒப்பமிட்டுத்தான் கொடுத்தார்
வந்த இலட்சுமணன் - வள்ளலரைத்தான் தொழுது
எல்லார்க்கும் நல்ல புகழானவரே - எந்தனது ஊர்போக
எந்தனக்கு உத்தரவு - இன்பமுடன் தாருமென்றார்
சொன்ன மொழி கேட்டு - சொற் பெரிய திரவியமும்
போய் வாருமென்று - பொருந்த விடைதான் கொடுத்தார்
சேர்ந்தாற் போலிருவருமே - தெண்டனிட்டாரம்மானை
நாலுமாவடிக்கவர் - நலமுடனே போகலுற்றார்

திரவிய நாடரது தம்பி பிச்சிப்பூ நாடர் மகளை இராமலிங்க நாடரது தம்பி - இராமகிருஷ்ண நாடருக்கு திருமணம் செய்து கொடுத்தல்-அவர்களைக் கீழ நாலு மாவடியில் வாழவைத்தல்

தஞ்சமடைந்த இராமலிங்கம் - தம்பி ராம கிருஷ்ணனவன்
சாதியின் மானங்காத்த - சமர்த்துள்ள சமர்த்தனவன்
சான்றோர் குலத்துதித்த - சரித்திரத்துப் பிள்ளையவன் தனக்கு
தன் தம்பி பிச்சிப்பூ மகளைத் - தானே மண முடித்து வைத்து
மாப்பிள்ளையும் பெண்ணையும் - மறு வீடு அனுப்பி வைத்தார்
கீழநாலுமாவடியில் - கீர்த்தியுடன் வாழ்ந்தார்கள்
இப்படியாயங்கவர்கள் - இருந்து வரும் நாளையிலே

அய்யாகுட்டி நாடர், தனது மருமகன் பூமியில் பங்கு விஷயமாகத் தடை செய்யவே, திரவிய நாடர் பாச்சாவிடம் போகுதல்.

தன் சம்மதத்தின் பேரில் - நானெழுதிக் கொடுத்ததென்றுரைக்க
அய்யாகுட்டி மாமன் - அருமை இலட்சுமணனிடம்
எழுதி வாங்கினவரே - எப்படி யிரங்கவிடுவேன்
என்றுமே சொல்லிவிட்டார் - இடும்பான ஐயாகுட்டி
இச் செய்தி தானறிந்து - ஏது செய்தா ரப்போது
உமரிக்காட்டக்கா மகளிருக்கும் - உற்ற பணிக்கான் புள்ளிக்குப் போய்
உள்ளதைச் சொல்லி - ஒற்றுமையாக்க வேணுமென்று
புறப்பட்டா ரப்போது - புகழ் பெரிய திரவிய நாடரும்
பணிக்க நாடர் புள்ளிக்குப் போனார் - பண்புள்ள இராமசாமி நாடரிடம்
சித்தப்பா வாருங்களென்றார் - சிந்தை மகிழ்ந்தன்புடனே
அக்கா மகளும் - அவ்வார்த்தை தான் கேட்டு
மாமனைக் கண்டு - மனச் சந்தோஷம் தானாகி
உயர்திரு மாமனிடம் - உற்ற சேமங்களைக் கேட்டவுடன்
அமுது படைக்கவென்று - அதிதுரிதமுடன் சமைக்கச் சென்றாள்
அத்தருணம் இராமசாமி சகோதரர்கள் - ஆவேசமாக வந்து
என்ன நினைத்துக்கொண்டு - எந்தன் தம்பியிடம் வந்தீர்கள்
ஊர் மறந்து பேர் மறந்து - உற்றகிளை தான் மறந்து

சீர்மாறியவன் - சிறந்த சிவசமயம் விட்டு மாறினவன்
அவனுக்கிங்கே - அணுவளவு இடமில்லை
என் மாமனைக்கொண்டு - ஏமாற்றி வாங்கியவரை
இறங்கிப் பயிரிடவொட்டாமல் - எதிர்த்திடுவோம் நாங்களுந்தான்
அம்மொழியைக் கேட்டவரும் - அத்தருண மேதுரைப்பார்
இழிவு படுத்திய மர்க்கழைத்தாய் - இகழப்படுவது யாரா வரா
பழிச் சொல் சொன்னதினால் - பந்துக்களென்றெண்ணாமல்
பாச்சாவிடம் பூமியை வாங்கிவாரேன் - பாளையங்கள் செய்து பாரும்
என்று சொல்லி திரவிய நாடருமே - எழும்பி விட்டாரப்போது
வாசற்படிகடக்கு முன்னே - வந்து மருமகளும்
பூனை குறுக்கிடுது - பொறுத்துப் போங்கோ மாமா வென்றாள்
மருமகள் சொன்ன வார்த்தைதனை - மாமனு மேற்காமல்
பாலக்கா மகளே - பாதை விட்டொதுங்கு
பூனை வழி விடுகிறதென்று - புறப்பட்டுத் தானேகி
அப்போது திரவிய நாடரும் - அழிம்பு நினைவு கொண்டு
கேளாது போலே நடந்தார் - கெடு நினைவாய்த் தானுமே
தன்னுடைய பதிக்குத் - தான் வந்து சேர்ந்து விட்டார்
பாச்சாவுக்குப் பணிக்க நாடர் - பகுதி கொடுக்காதிருப்பதை யறிந்து
பாளையங்கோட்டை சென்று - பாச்சாவைத்தானுங் கண்டு
பல மாதமாகவே தான் - பகுதி கட்டாது கடத்தியதால்
பணிக்க நாடார் பயரிடும் - பாச்சாவுட பூமிகளுக்கு
மூலைப் பள்ளி திரவிய நாடர் - முத்திரைப் பொன் கொடுக்க
பாச்சாவும் மனமகிழ்ந்தே - பயரிடும் பூமியைத் திரவியத்திற்கு
ஓலை முறிபத்திரத்தில் - ஒப்பமிட்டுத் தான் கொடுத்தார்.

கதிரைப் பன்னியவர்களிடம் காதறுப்பு போடுதல் அழிம்புக்கார அய்யாக்குட்டி வகையருக்கள் அடக்கி விடுதல்

பாச்சாவிட பூமிகளில் - பயரிட்டோர் யாவருமே
கதிர்கள் பன்னுமந்த நாளில் - கட்டாயமாக வந்து
தன்னிடயுத்திரவு பெற்றுத் - தான் கதிருபனன்ன வேணுமென்று
ஆள் மூலம் சொல்லி - அனுப்பினார் திரவிய நாடருமே
அனுப்பிய ஏவலாளும் - அப்படியே போயுரைக்க
பாச்சாவிடம் சொன்னதுபோல் - பழித்து மிகச் சொல்லிவிட்டு
கதிரைப் பன்னச் சொன்னார் - காணிகளில் அய்யாகுட்டி

அங்கு போய் வந்தவர்கள் - அவ்வார்த்தை தானுரைக்க
அடங்காக் கோபங்கொண்டு - அருகில் நின்ற மறவரிடம்
கதிரைப் பன்னக் - கட்டாயம் சென்றிருந்தால்
அய்யாகுட்டி வீட்டிலுள்ள - அத்தனை பேர்காதணியும்
கதிரைப் பன்னியதுபோல் - காதணியைப் பன்னிவராய்
என்றவர் சொல்ல - ஏற்றதொரு மறவர்கள்தான்
அப்படியே நல்லதென்று - அங்கு போய்ப் பன்னி வந்தனர்.
அழிம்புக்கார அய்யாகுட்டி - அவர் மனைவி பதுங்கிடவே
பாதாளமுத்து மனைவி - பறி கொடுத்தாள் காதணியை
அத்துடனே யடங்கிவிட்டார் - அய்யாகுட்டி வகையராவும்
அவர் மறுமகன் பாகத்தை - அவரேயனுபவித்து வந்தார்கள்

விலைக்கு வாங்கிய காணியாளர்களின் பூமிகளில் மறவர்களைக் காவலுக்கு நியமித்தல், காணியாளர்களுக்கும் காவல் புரியும் மறவர்களுக்கும் கடும் போர் நிகழுதல்

காணியாழன் குடும்பத்தில் - காணி பிரிப்பதற்குள்
கலவர மதுவுண்டாகி - காணி பிரியாததினால்
ஏலாத இருவர்களும் - ஏற்றதொரு தங்கள் பங்கை
மூலைப் பொழி திரவிய நாடரிடம் - முத்திரைப் பொன் வாங்கியே
ஓலை முறிப்பத்திரத்தில் - ஒப்பமிட்டுப் போனார்கள்
தான் வாங்கிய பூமிகளில் - தாவாக்களை முடித்தும்
மாறிப் பேசித்தாவர் செய்யும் - மாரிமுத்து வகையராவையடக்க
மணக்காட்டிலிருக்கும் - மறவன் வாசுவை யழைத்து
உன்வகையருவைக்கூட்டி - உற்ற காவல் காக்கச் செய்
என்றவர் கூற - ஏற்றுக் கொண்டேதுரைப்பான்
உண்டு இத்தனை நாளும் - உரமேறிய நாங்கள்
உயிரளித்துக்காப்போம் - ஒப்புக் கொண்ட எல்கையதை
காணியாழன் காட்டில் - காவல் புரியும் மறவர் கூட்டம்
எல்லைகளைக் காத்து - எதிரி வந்தால் தாக்குவதென்று
சடையாது காவல் செய்யும் - சமர்த்தான மறவர்களைத்
தடை செய்த காணியாளனோடு - தான் பொருதவேணுமென்று
வீரத்துடன் மறவரெல்லாம் - விரைவாய்த் திரும்பி வந்து
கோரத்துடனடித்தும் - கொன்றாரே காணியாளனைக்

அடுத்து நிற்கமாட்டாமல் - அலறியவரோடும்போது
பங்காளிக்குப் பங்கு கொடாப் - பைத்தியக்காரரானேமே
என்று சொல்லி யோடினார்கள் - ஏறிட்டுப்பாராமல்
மூன்னால் அவர்களோடே - முடுக்கித்துரத்தினார்கள்
அப்போதவர்களுமே - அபயமிட்டுத்தானேடி
தனையூணிச்சாத்தான் கோயிலில் - தஞ்சமடைந்தார்கள்
தஞ்சம் அடைந்தவர்களைத் - தாக்காமலே விட்டு வந்தார்
எல்கைக்குள் களவு போகாமல் - ஏற்ற காவல் புரிந்து வந்தார்கள்
பூமிக்கு எல்கை கட்டி - புகழாக விருந்துவரும் நாளையிலே

இந்நாட்டில் ஆங்கிலேயர்கள் ஆட்சி வந்ததும் அவரவர் அனுபோகத்திலிருக்கும் பூமிகளுக்குப் பட்டா போட்டுக் கொடுத்தல்.

இங்கிலீஷ் துரையவர்கள் இந்நாட்டையாள வந்தவுடன்
அவரவரனுபோகத்துக்குள் - அடங்கிய நிலங்கட்கெல்லாம்
அனுபோகப்பட்டா - அறிந்துமே கொடுக்கும்படி
அகோபால முதலியாருக்கு - அவ்வுத்திரவுமிட்டார்கள்
அததருணத்தையறிந்து - அடுத்த கீழப்புதுக்குடி குருபங்காளியும்
பள்ளத்தூராரும் - பாத்தியதை கொண்டாடினார்கள்
அவ்வூர் பேச்சிமுத்து நாடருட - ஆளுகைக்கிடமே கொடுக்கவில்லை
சிங்கம் போன்ற வீரராம் - சிவனடிய நாடருமே
அத்தருணமிதையறிந்த - அடுத்த கானத்து நாடர்கள்
பாத்தியதை தனக்கென்று - பாத்தியம் கொண்டாடினார்கள்
இவர்களைத்தானடக்க - இவ்வெல்லை காத்திருக்கும்
மறவர்களோடு மணக்காட்டு - மறவரையும் விட்டு
அனுபோகத்துக்கு விடாமல் - அடக்கிவிட்டார் கானத்து நாடர்களை
ஆளுகைக்கிடங்கிடையாத - அக்கானத்து நாடர்களும்
எழு கிராமத்துக்கொரு - ஏற்ற குதிரைக்காரன் தண்டுவைத்து
ஏற்பட்ட பகுதிகளில் - எல்லாம் வசூலித்தனுப்பும்
முப்பத்து நாலு கிராமத்துக்கு - முதன்மையான முதலியிடம்
நடந்தார்கள் கானத்தார் - நங்கம் பள்ளிதான் நோக்கி
கடந்தார் வெகுதூரம் - கண்டார் தர்மபுரி
முத்துகிருஷ்ண முதலியாரிடம் - முறையிட்டகானத்தார்
முதலியாருமத்த குணம் - மூலைப்பொழி சிவனடிய நாடரை
[illegible]

சிவனடிய நாடரிடமிம் பூமி யாருக்கென்றார் - சிவனடிய நாட தனக்கென்
கானத்து நாடரிடங் கேட்க - கானத்து நாடர் தனக்கென்றார்
அந்த வுரை கேட்ட அம் முதலியா ரே துரைப்பார்
சண்டையிட்டிவர்கள் - சங்கடப்படாத வண்ணம்
ஒருவர் எல்கையை - ஒருவர் மதிக்கும் படியாக
இப் பூமியினாளுகை - இருவருக்கு முள்ளதென்று
இப் பூமியினால் பூசல் வராதிருக்க - இருசரகமாய்ப் பிரித்து
முடித்துவிட அதற்கு - முதலியார் ஒப்பந்தப்படி
கானத்து நாடர் பங்கில் - கண்டதில் பாதி கொடுத்தார்கள்
மூலைப்பொழி எல்லை காக்கும் - முத்துமாலைவிளைத் தேவரை
கூர்ந்தாவிளையில் - குடியேற்றினார் சிவனடிய நாடர்
இப் பூமியை யாண்டு - இவர்கள் வரும் நாளையிலே
கொடுத்து முதலியாரிடம் - கும்பிட்டுத் தான் வணங்கி
கானத்தில் குடியிருந்து - காக்கா விட்டால் எங்களையும்
கொடுமை மிகச் செய்து - குடியோடச் செய்திடுவார்
அவ்வார்த்தை தான் கேட்டு - அத்தருண மேதுரைப்பார்
கலங்க வேண்டாம் நீங்களும் - கானத்தில் குடியிருப்பேன்
என்று சொன்ன முதலியாரும் - ஏற்ற வீடமைத்திருந்தார்
கொடுத்த தன் பங்கைக் காக்க - குடியேற்றினார் மறவர்களை
கானத்து நாடர்களால் - கலக்கமுற்றாதவர்கள்
மூலைப்பொழி சிவனடிய நாடரிடம் - முறையிட வந்தார்கள்
அவர்களுக்கு பயம் கெடுத்து - ஆறுதல் மிக வளித்து
காணியாழன்புதூரில் - கட்டுங்கள் வீடையெல்லாம்
நம் பங்கில் வீடு கட்டி - நலமுடனே வாழ்ந்திடுங்கள்
இசைந்த இடைக்குல மக்கள் - இருக்குமிடங்களுக்கு
முப்பது பொன் கொடுத்தார்கள் - மூலைப்பொழி சிவனடிய நாடரு
ஓங்கும் புகழான வரும் - ஒப்புக்கொண்டு பொன்னை
ஓலை முறிப் பத்திரத்தில் - ஒப்பமிட்டுத் தான் கொடுத்தார்
புதுக்குடி மைத்துனர் - புகழுடையோர் தானுமவர்
மொட்டக் குமாரசாமி நாடர் - முப்பது பொன்னுக்கு வாங்கினார்
நெஞ்சில் தட்டினரிடம் - நேர்மையுடன் வாங்கின பூமி
ஆளுகை தனக்கென்று அனுபவத்திலிறங்கி விட்டார்
முறியடிக்க முடியாமல் - மூலைப்பொழி மருகனுக்கு
முத்திரையிட்டுத் தானும் - முறியோலை யெழுதி யனுப்பினார்
ஒப்பமுடன் ஓலைதனை வாங்கி - உள்ளபடி வாசித்தார்

ஓலை கண்ட நாழிகைக்குள் - உடனே புறப்பட்டார்
ஆற்றுமை லோடினார் - அங்குள்ள நெருஞ்சித் தட்டினர்

மண்டக்கு ராஜர் மரபினர் தருமங்கள் பல செய்தல்.

கந்தருட திருப்பணிக்குக் - காணியாளன் பத்துக்குள்ளே
எக்காலமும் பிரதோஷ கட்டளை நடக்க - எழுதினாரிபதுகுறுணி
ஏற்றதொரு புன்செயில் - எழுபத்தி ரண்டேக்கர்
முருகனுட சன்னதிக்கு - மாதந்தம் சோம வாரம்
மகிமையுள்ள விசாகத்திற்கு - வரும் தேச மக்களுக்கு
தரும மோர் மடங் கட்டி - தரும மோர் வழங்கி வரும்
ஆதிபூர்வமண்டக்கு ராஜர் - அவர் குடும்பம் தழைத் து வாழ்க
அவர் வாசலிலிருந்திரு - அன்னம் கவிபாட
கேட்டிருந்த நற்குணப் பட்சி - கூடியிருந் திசைபாட
அய்யா சிவனார்க்கும் - அம்மை பத்திர காளியர்க்கும்
பொற் பாதம் பணிந்து - போற்றியே தெண்டனிட்டு
காமாலை சாற்றி - நமஸ்கரித்துத் தொழுது வர
திருவருளு முண்டாகிச் - செல்வம் செழித்தோங்கும்
ஆதி சப்த கன்னியர்க்கும் - ஆதி வித்தியாதர முனிவர்க்கும்
பொற் பாதம் பணிந்து - போற்றித் தெண்டனிட்டு
காமாலை சாற்றி - நமஸ்கரித்துத் தொழுது வந்தோர்
வங்கி சங்கள் நசியாமல் - வளர்ந்தோங்கி வாழியவே
பத்திரத்தால் பால் வார்த்த - பாலர்களின் வங்கிசமும்
பால் போல் மிகப் பொங்கி - பாரிடத்தில் வாழியவே
இக் கதை படிப்போர் - எந்நாளு மிதைக் கேட்போர்
ஆல் போல் தழைத்து - அருகு போல் வேர் ஊன்றி
மூங்கில் போலன்னை சுற்றம் - முறியாமல் வாழ்ந்திருப்பார்
மூலப்புலிக் கொடியோன் சரிதம் - முற்றுப்பெற்றது காணம்மானை

குருவே துணை - குருபரன் துணை

நீடு புகழ் வாழி - நீடுழி வாழியவே

இந்த ஆதி பூர்வ மண்டங்குடி நாட்டு மன்னன்
மண்டக்கொண்ற திரிலோசனன் வரலாற்று நூல்
நான் தூத்துக்குடி மாவட்டம் மேலப்புதுக்குடியை சேர்ந்த
திரு பழனி(எ) திருபோகரான் நாடார் மேலமாக மேலப்பொ
மண்டக்காசா நாடார் குடும்பத்தாரிடமிருந்து பெற்றேன்

இப்படிக்கு
த.அ.இரா. நேத்தாஜி மார்த்தாண்டன்
மேலவீடு
இட்டம்
திருநெல்வேலி ஜில்லா.

(மானவீரவளநாட்டின் கடைசி மன்னர் ஆட்சி
(கி.பி. 1783) திரு. சந்திர மார்த்தாண்டநாடான் வம்சாவளி.)